இலவச
இணைப்பைக்
கேட்டு வாங்குங்கள்.

கல்கி

KALKI 18.9.88 ரூ. 2.



ஒரு காமிராக் கலைஞரின்
கேரள அனுபவங்கள்

உங்கள் நேரத்தையும், பணத்தையும் வீணாக செலவிட்டு, சிரமப்பட்டு, ஒரு மரக் கப்போர்ட் வாங்கி, அது ஈரம்பட்டு, கரையான் பிடித்து, விலைமதிப்பான உங்கள் பொருட்கள் நாசம் அடைவதை விட...




வாங்குங்கள், ஒரு கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

தோற்றப் பொலிவு, இடவசதி, கவர்ச்சி மற்றும் நல்ல மெருகு கொண்ட ஒரு கப்போர்ட். கோத்ரெஜ் ஸ்டோர்வெல்.

இது முதன்மைத் தர ஸ்டீலினால், நூதனத் தயாரிப்பு முறையில் உருவானது. இயந்திர முறை உருவாக்கம் என்பதால், பூச்சி பொட்டுகளில் இருந்து நிச்சயமான பாதுகாப்பு. பல்வேறு கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள தேய்மான-எதிர்ப்புத்திறன் மற்றும் ஓவன்-பேக் முறையில் பூசப்பட்டுள்ள, அல்கைட் அமீனோ வண்ணப்பூச்சு காரணமாக, கீறல் விழாத புதுமை மெருகுடன் ஆண்டுக் கணக்கில் திகழ்கிறது. தவிரவும் வழக்கமான மரம் அல்லது ஸ்டீல் கப்போர்ட்களில் இல்லாத, விசேஷ மும்முனைப் பூட்டமைப்புடன் கூடிய 6 லீவர் கோத்ரெஜ் பூட்டும் இதில் உண்டு.

கோத்ரெஜ் ஸ்டோர்வெல், தேர்ந்தெடுக்க வசதியாக, பலவிதங்களில் கிடைக்கிறது. பல்வேறு மாடல்கள், வண்ணங்கள் மற்றும் சிறப்பு அம்சங்களோடு — உதாரணமாக அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்புகள், கண்ணாடிகள் மற்றும் உறுதியான லாக்கர்கள், மாதிரிக்குச் சில. தேவைக்குத் தகுந்தபடி டிஸைன் செய்து, ஒரு கப்போர்ட் உண்டாக்குவதில், பராமரிப்பதில் உள்ள சிரமம் உங்களுக்கு ஏற்படாமல் தடுக்கிறது.


கோத்ரெஜ் ஸ்டோர்வெல், நீங்கள் கொடுக்கும் பணத்திற்குக் கூடுதல் மதிப்பைத் தருகிறது.



வேலை நிறுத்தம் — புதிய அணுகுமுறை!

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் காலையில் அலுவலகத்துக்கு வெளியே நின்று கொண்டு 'ஒழிக!' கோஷம் போட்ட தொழிலாளர்கள், மாலையில் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்னையைத் தீர்க்கச் சம்மதித்து நிர்வாகத்தை வாழ்த்தியபடி வீடு திரும்பினார்கள்! இந்த அதிசயம் சில மாதங்களுக்கு முன் சென்னை பாட்லிங் கம்பெனியில் நடந்தது!

* விங் கமாண்டர் பாலச்சந்திரன்



இந்த அற்புதம் நிகழக் காரணமாயிருந்தது நிர்வாகத்தினர் தொழிலாளர்களுக்கு எழுதிய ஒரு கடிதம்தான்... அந்தக் கடிதத்தில் என்னதான் சொல்லப்பட்டிருந்தது? இதோ, அதன் சுருக்கம்:

தொழிலாள நண்பர்களே!

நீங்கள் வேலை நிறுத்தம் செய்ய நேர்ந்தது குறித்து நிர்வாகம் மிகவும் வேதனை அடைகிறது. இந்த வேலை நிறுத்தம் மூலம் நிகழக்கூடிய விளைவுகளைப் பற்றிச் சற்றுச் சிந்தியுங்கள்....

வேலை நிறுத்தத்தால் உற்பத்தி பாதிக்கப்பட்டு நம் கம்பெனி வியாபாரம் தடைப்படும்; அதனால் மார்க்கெட்டில் நமது கம்பெனியின் மதிப்பு குறையும்; இதனால் நமக்குப் போட்டியாக உள்ள மாற்று கம்பெனிகளின் வியாபாரம் பெருகும். விளைவாக — தற்போது விற்பனையில் முதலிடம் வகிக்கும் நமது நிறுவனம் பின்னுக்குத் தள்ளப்படும்.

கம்பெனிக்கு வருமானம் குறைந்தால், உங்களுக்குச் சம்பளமும், இதர வசதிகளான போனஸ், ஊக்கத் தொகை, ஓ.டி, சாப்பாட்டு அலவன்ஸ் போன்றவற்றை எவ்வாறு ஒழுங்காகத் தர முடியும்....?

கம்பெனியுடனேயே வளர்ந்து, வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொண்டு விட்ட நீங்கள் இதனால் கஷ்டப்பட மாட்டீர்களா? உங்களை நம்பியுள்ள உங்கள் குடும்பங்களின் கதியை நினைத்துப் பார்த்தீர்களா?

இப்போது ஜூன் மாதம் — பள்ளி/கல்லூரிகள் திறக்கும் சமயம். எல்லார் வீட்டிலும் அதிகப்படியான செலவுகள் இருக்கும். அதை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்? உங்கள் குழந்தைகளின் நல்ல எதிர்காலத்துக்கு நீங்களே முட்டுக்கட்டையாக இருக்கலாமா....? அந்த நிலை ஏற்படக் கூடாது என்பதே நிர்வாகத்தின் எண்ணம்.

நீங்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தால், கம்பெனி வங்கியில் வாங்கியுள்ள கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகும். வங்கி, கம்பெனி மீது நடவடிக்கை எடுத்தால் 'லாக் அவுட்' அறிவிக்க வேண்டிய நிலைமை உருவாகலாம். இது உங்களை எவ்வளவு தூரம் பாதிக்குமோ அவ்வளவு தூரம் எங்களையும் துயரப்படுத்தும்.

'லாக் அவுட்' அறிவித்தாலும், தொழிற்கல்வி பயிற்சியுடைய மேலதிகாரிகளுக்கு, அனுபவம் மற்றும் தகுதி காரணமாக வேறு இடத்தில் சுலபமாக வேலை கிடைத்து விடும். அப்படி கிடைக்காவிட்டாலும் இவர்கள் சொந்தத் தொழில் ஆரம்பித்து விடக் கூடும்.

ஆனால், தொழிலாளர்களே! உங்கள் நிலை என்ன...? 'லாக் அவுட்' ஆன நிறுவன ஊழியர்களை மற்ற நிறுவனங்கள் சந்தேகக் கண் கொண்டே பார்க்கும். 'இவரை வேலைக்கு எடுத்துக் கொண்டால் அனாவசிய பிரச்னைகள் வருமோ என்று தயங்கும். கம்பெனிக்கும் பாதிப்பு ஏற்படுத்தி, தொழிலாளர்களையும் அவர்கள் குடும்பத்தையும் பாதிக்கக்கூடிய இந்த வேலை நிறுத்தம் அவசியமா? இதைப் பேச்சு வார்த்தை மூலமே தீர்த்துக் கொள்ள முடியாதா....? சிந்தித்துப் பாருங்கள்.....!

தொழிலாளர்களின் உணர்ச்சிவசமான போக்கிற்கு அணை கட்டி, பகுத்தறிவைத் தூண்டிய இந்த அணுகுமுறையைப் பற்றி விசாரித்தோம். சென்னை பாட்லிங் நிறுவனத்தின் சீஃப் எக்ஸிகியூடிவ் விங் கமாண்டர் பாலசந்திரன் சொன்னார்:

''மனோதத்துவ இயலில் ஆர்வமுள்ள நான் ஸ்டிரைக் என்பதே அவசியமில்லாதது. எந்தப் பிரச்னையானாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றே நம்புகிறேன். இரு தரப்பினரும் சற்று விட்டுக் கொடுத்தால், மிக எளிதாக ஒரு சுமூகமான தீர்வைக் காணலாம்.

'ஸ்டிரைக்' என்று வரும் போது தொழிலாளர்கள் உணர்ச்சிவசப்படுகிறார்கள். இந்தத் தருணத்தில் நாமும் உணர்ச்சிவசப்பட்டு அவர்களை மேலும் கோபப்படுத்தாமல், அவர்களைச் சிந்திக்கச் செய்ய வேண்டும். நிலைமையைப் பொறுமையாக விளக்கினால் அவர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள். அதனால்தான் விவரமாய், சிந்தனையைத் தூண்டும் வகையில் இக் கடிதத்தை அமைத்து, பிரதிகள் எடுத்து, ஒவ்வொரு தொழிலாளிக்கும் கொடுத்தேன். இக் கடிதம் அவர்களுடைய சிந்தனையைத் தூண்டியதுடன், நிர்வாகத்துக்கு அவர்கள் பேரில் உள்ள மெய்யான அக்கறையையும் உணர்த்தியது. நல்ல பலன் விளைந்தது'' என்று கூறிய விங் கமாண்டர் பாலசந்திரன், தமது மேலதிகாரிகளின் ஒத்துழைப்பையும் குறிப்பிட்டார்:

''எங்கள் மானேஜிங் டைரக்டர் எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்துள்ளதால் நான் தன்னிச்சையாக இயங்க முடிகிறது. அதே சமயத்தில் என் பொறுப்பும் பன்மடங்கு அதிகரிக்கிறது. இதனால்தான் விரைவாகச் செயல்பட்டு வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறச் செய்து பேச்சு வார்த்தைகள் மூலம் விரைவில் பிரச்னைக்குத் தீர்வு காண முடிந்தது'' என்றார்.

'ஸ்டிரைக்' ஒரு வாழ்க்கை முறையாகி வரும் இக்காலத்தில் இந்த வித்தியாசமான அணுகு முறையை வரவேற்றுப் பாராட்டலாம்.

— எஸ். சந்திரமௌலி.



அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் மகாத்மாவுக்கு நினைவுச் சின்னம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதற்கு அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஒதுக்கிச் சட்டமியற்றுமாறு அமெரிக்க நாடாளுமன்றத்தின் எழுபத்தைந்து அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். காந்திக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் செலவை இந்திய — அமெரிக்க அரசியல் கல்விக் கழகம் ஏற்றுக் கொள்ளும்.

நன்றி: ஸ்பான்.

பர்மாவில்...



புரட்சித்தலைவி

பர்மா என்ற நாடு உலகத்தில் இருக்கிறதா என்று சந்தேகம் ஏற்படும் அளவுக்கு பர்மாவைப் பற்றி எந்த செய்திகளும் வராமல் இருந்தன. ஆனால் கடந்த ஜூலை மாதம் அங்கு நடந்த ஆர்ப்பாட்டங்களில், அடங்கி இருந்த மக்களின் உணர்ச்சி எரிமலையாகப் பீறிட்டுக் கிளம்பியது. மக்களின் எதிர்ப்புணர்ச்சியைக் கண்டு பர்மாவின் அதிபர் நீவின் துண்டைக் காணும், துணியைக் காணும் என்று அதிபர் பதவியை விட்டு ஓடி விட்டார்.

1962—ல் ராணுவத் தளபதியாக இருந்த நீவின், அப்போது பிரதமராக இருந்த உநூவைப் பதவியிலிருந்து துரத்தியடித்து விட்டு, தலைமைப் பதவியைப் பிடித்துக் கொண்டார். ராணுவச் சார்புள்ள ஒரு கட்சி ஆட்சி முறையை அமுல்படுத்தினார். நாடு கடத்தப்பட்டவர்களுள் உநூ, இந்தியாவிற்கு வந்து, பல புத்தக் கோயில்களில் தங்கி இருந்தார்.

கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட நீவின் ஆட்சியில் நாடு மோசமடைந்தது. பொருளாதாரம் படு பாதாளத்தில் விழுந்தது. தனிநபர் வருமானம் 650 வெள்ளியிலிருந்து 190 வெள்ளியாகக் குறைந்து விட்டது. எந்தத் துறையிலும் நாடு முன்னேறவில்லை. நாட்டின் மோசமான போக்கைக் கண்டு முதலில் விழித்தெழுந்தது மாணவச் சமுதாயம்தான். நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. அவற்றை ராணுவத்தின் இரும்புக் கரம் கொண்டு அடக்க நினைத்த நீவினின் எண்ணம் எடுபடவில்லை. இந்த நிலையில் தமது கட்சியைச் சேர்ந்த ஸெயின் லிவின் என்பவரிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு ஓடினார் நீவின். இப்போது அவர் பங்களாதேஷில் இருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

ஸெயின் லிவின் ஆட்சியிலும் போராட்டங்கள் தொடர, ராணுவத்துக்கும் மக்களுக்கும் மோதல் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். எதிர்ப்பு வலுப்பட, பதினெட்டே நாட்களில் ஸெயின் லிவினும் பதவியை விட்டு ஓடி விட்டார். இப்போது மாங் மாங் என்பவர் ஆட்சித் தலைமை ஏற்றிருக்கிறார்.

போராட்டக் களத்தில் தற்போது உநூவும் இறங்கியிருக்கிறார். 82 வயதாகும் உநூ: 'வயதாகி விட்டதால் என்னால் தலைமையேற்று நடத்திச் செல்ல முடியாது. ஆனால் நல்ல வழி காண்பிக்கிறேன்' என்று மக்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். உநூவைத் தவிர திருமதி அங்சான் சுகியி என்பவரும் போராட்டத்துக்கு வழிகாட்டியாகச் செயல்படுகிறார். இவர் "பர்மாவின் தந்தை" என்று போற்றப்படும் அங்சான் என்பவரின் மகள். அங்சான் பிரிட்டிஷாரிடமிருந்து பர்மா விடுதலை பெறப் போராடியவர். துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர். அவர் மறைந்த தினம் இன்றும் தியாகிகள் தினமாக பர்மாவில் அனுஷ்டிக்கப்படுகிறது. இவருடைய மகளான அங்சான் சுகியி, இன்று பெனாசிர் புட்டோவுடனும் பிலிபைன்ஸ் தேசத்தின் அகினோவுடனும் ஒப்பிட்டுப் பேசப்படுகிறார். புரட்சித் தலைவிக்கு வயது 43. இவர் பேசுவதைக் கேட்க ஒரே சமயத்தில் நாலு லட்சம் பேர் திரண்டனர்!

புரட்சியாளர்கள், இப்போதைய ராணுவச் சார்புள்ள ஏக கட்சி ஆட்சி, பல கட்சி ஜனநாயகத்துக்கு வழி விட்டு விலக வேண்டும்; ராணுவம் அரசியலில் ஈடுபடக் கூடாது; சுதந்திரமான தேர்தல்கள் நடக்க வேண்டும் என்று போராடுகின்றனர்.

'இன்றைய ஆட்சி விழுவது நிச்சயம். எப்போது என்பதுதான் கேள்வி' என்பது அரசியல் நிபுணர்களின் கருத்து.

— கௌசல்யா

சின்னச் சின்னச் செய்திகள்......



தயாராகிறது குதிரைக் குல்லாய்!

• பத்திரிகைகளுக்கு ஆதாரமில்லாத செய்திகளைக் கொடுத்து விட்டு, அச்சானதும் ஆனந்தப்படுபவர் ஆலன் ஏபெல். பிச்சைக்காரர்கள் எப்படி எப்படி எல்லாம் பிச்சையெடுக்கலாம் என்று பாடம் சொல்லித் தருகிற பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது என்று இவர் கொடுத்த செய்தியை மயாமி ஹெரால்ட், நியுயார்க் மாகஸின் இரண்டும் பிரசுரித்தது போதாது என்று, பி.பி.சி. வேறு ஒலி பரப்பியது! இந்த மாதிரி பொய்ச் சேதி கொடுத்த ஆலன் ஏபெல், பத்திரிகைகாரர் விசாரிக்க வந்த போது, தம்முடைய நண்பர்கள் சிலரைப் 'பிச்சைக்கார மாணவர்' களாக நடிக்கச் சொல்லி ஏமாற்றி விட்டாராம்!

• கம்யூனிஸ்ட் சீனாவில் குற்றங்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. சூதாட்டம், விபசாரம், ஆபாசப் புத்தகங்கள் தவிர வேறு குற்றங்களும் அதிகரித்து வருகின்றன, நிறுத்த முடியவில்லை என்று ஒப்புக் கொண்டிருக்கிறார் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் வாங் ஃபெங். அதிக அளவிலான குற்றம்: திருட்டு. சர்வாதிகாரத்தால் குற்றங்கள் நடப்பதை மறைத்து விடலாமே தவிர குறைத்து விட முடியாது என்பதற்குச் சான்று.

• அமிருதசரசில், குல்ஜித் கவுர் என்ற பதினேழு வயதுப் பெண், தெரியாத்தனமாக ஆஸிட்டைக் குடித்து விட்டதில் தொண்டை முதல் வயிறு வரையிலான உணவுக் குழாய் எரிந்து பாழாகி விட்டது. எனவே குல்ஜித் கவுருக்கு, முதலில் நேரடியாக வயிற்றுக்குள் உணவு போகிற மாதிரி ஒரு குழாய் வயிற்றில் வைத்தார்கள். பிறகு தொண்டையிலிருந்து வயிறு வரை வேறு உணவுக் குழாய் பொருத்தினார்கள். இந்தப் புதிய உணவுக் குழாய்க்காகக் குல்ஜித்தின் சிறுகுடலிலிருந்து ஐந்து அங்குலம் வெட்டி எடுத்துக் கொண்டார்கள். இரு இடங்களிலும் இரு முனைகளையும் இணைத்துத் தைத்து விட்டார்கள். 'இந்த இரட்டை அறுவைச் சிகிச்சையின் போது, தொண்டையிலுள்ள குரல் பகுதி பாழாகி விடாமல் இருக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளப் பட வேண்டியிருந்தது' என்கிறார் அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் ஆபிரகாம் தாமஸ்.

• குதிரைக்குக் குல்லாய் போட்டுப் பார்த்திருக்கிறீர்களா? புதுப் புது டிசைன்களில், குதிரைகளுக்குத் தொப்பி அணிவிப்பது நியூயார்க்கில் இப்போது ஃபாஷன். புழுக்கமான வெயில் காலத்திலும் சரி, கடுமையான குளிர் காலத்திலும் சரி, சுற்றுலாப் பயணிகளுக்காக நியூயார்க்கில் குதிரை வண்டி ஓட்டிச் சம்பாதிப்பவர்கள் உண்டு. இந்தக் குதிரைகளிடம் பரிவு காட்டும் நியூயார்க் நகர மேயர், வடிவமைப்பாளர்களிடம் புதுப் புது டிசைன்களில் குதிரைக் குல்லாய்களை உருவாக்கச் சொல்லியிருக்கிறார்.

• ஐந்து வாரக் கோடை விடுமுறைக்குப் பிறகு ஜப்பானில் பள்ளிகள் திறந்ததோ இல்லையோ, குழந்தைகளின் தற்கொலைகளும் ஏராளமாகப் பெருகி விட்டன! எட்டுப் பேர், இரண்டே நாட்களில் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகச் செய்தி! காரணம் இருக்கிறது:

உலகிலேயே மிகச் சிறந்த மாணவர்களை உருவாக்குகின்றன ஜப்பானியப் பள்ளிகள். அதனால் மிகக் கடினமான தேர்வு முறைகள் கையாளப்படுகின்றன. 'ஹோம் வொர்க்' ஏராளமாகக் கொடுத்து விடுவார்கள். திருமணத்துக்குக் கூட, ஆரம்ப நாளில் பள்ளிக்கூடத்தில் எப்படி மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்பது ஆராயப்படும்!

'ஹோம் வொர்க்கை முடிக்க முடியவில்லை; அல்லது பள்ளி நுழைவுத் தேர்வுக்குச் சரியாகப் படிக்க முடியவில்லை' என்றால் மனமுடைந்து பல மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்!

தொகுப்பு: சித்தார்த்.




BONNY MIX®
Nature's way to taste & nourishment
Bonny Mix
For the first time in India!
Bonny Mix
Delicious new Bonny Mix. Full of Nature's bounty! A yummy combination of cereals, fruits and nuts that will help your child discover a wonderful new world of taste and nourishment.
Not just your child, give your whole family the goodness of Bonny Mix. For breakfast, lunch or dinner; they'll love you for it.
Bonny Mix®
You'll come back for more
From Glindia Ltd
(formerly Glaxo)
GL/1/88/R
Available only in selected markets at present.


காம்ப்ளான் சாம்பியன்கள்!
Complan
"ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்கு உன்னதமானது காம்ப்ளான்."
–அனிதா
Anita Sood
இந்திய நீச்சல் சாம்பியன்.
அனிதா – இன்றைய இளைஞர்களின் நீச்சல் திறமையை வளர்க்க உதவுகிறார். அவர் காம்ப்ளானை சிபாரிசு செய்கிறார். காம்ப்ளான், ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்குப் பரிபூரண திட்டமிட்ட உணவாகும்.
நினைவிருக்கட்டும், உங்கள் வளரும் குழந்தைகளுக்கு உன்னதமானது காம்ப்ளான்.
Complan
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/45/213 TML



நூல் அரங்கம்:

சிவகாமியின் செல்வன்

சாவி

பொன்னியின் செல்வனையும் சிவகாமியின் சபதத்தையும் இணைத்து உருவாக்கிய தலைப்பு போல் தோன்றுகிறதல்லவா? ஒரு வேளை கல்கியிடம் உள்ள பக்திதான் சாவியை இப்படி ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுக்கச் செய்ததோ? அது காமராஜருக்குப் பொருத்தமாகவும் அமைந்தது! இதோ அந்தச் சுவையான நூலிலிருந்து சில பகுதிகள்:

அவரைத் திருமலைப்பிள்ளை ரோட்டிலுள்ள அவர் இல்லத்தில் சந்தித்தேன்.

"என்ன, வாங்க, என்ன சங்கதி? சொல்லுங்க" என்றார்.

"தாங்கள் சுயசரிதை எழுத வேண்டும்" என்றேன்.

"வேண்டாம் அது எதுக்கு?" என்று மொட்டையாகப் பதில் சொல்லி மறுத்து விட்டார்.

"தங்கள் சுயசரிதம் என்றால் அதில் தமிழ் நாட்டின் சரித்திரம் இருக்கும்; காங்கிரஸின் சரித்திரம் இருக்கும்" என்று வாதாடி வற்புறுத்தினேன்.

"வேண்டுமானால் நீங்க பயாக்ரபியா எழுதுங்க; எனக்கு ஆட்சேபமில்லை" என்றார்.

"நான் எழுதுவதானால் தங்களுடைய உதவியில்லாமல் முடியாது. எனக்குப் பல தகவல்கள் தேவைப்படும். தங்களை அடிக்கடி வந்து தொந்தரவு செய்வேன்" என்றேன்.

"வாங்க, வாங்க" என்றார். சொல்லி விட்டு டில்லிக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்!

நான் விடவில்லை. டில்லிக்குப் போய் அவரைப் பிடித்துக் கொண்டேன். அங்கே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. இடையில் எனக்கும் நேரத்தை ஒழித்து வைத்துக் கொண்டார் அவர். ●

ஒரு சமயம் முதலமைச்சர் காமராஜ் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த போது அப்பளம் தயாரிப்பவர்கள் சிலர் அவரிடம் கூட்டமாக வந்து "அப்பளத்துக்கு மட்டும் ஆறு பெர்ஸெண்ட் விற்பனை வரி போடுகிறீர்களே, மற்ற உணவுப் பண்டங்களுக்கெல்லாம் இரண்டு பெர்ஸெண்ட்தானே? இது என்ன நியாயம்?" என்று கேட்டார்கள்.

சென்னைக்குத் திரும்பியதும் சம்பந்தப்பட்ட மந்திரியையும் அதிகாரிகளையும் கூப்பிட்டு விசாரித்தார்.

"ஆமாம்! பாக்கெட் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களுக்கு ஆறு பெர்ஸெண்ட் விற்பனை வரி என்று சட்டம் இருக்கிறது" என்றார்கள் அதிகாரிகள்.

"பாக்கெட் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் என்று சட்டத்தில் குறிப்பிட்டுள்ளது இயந்திரங்கள் உருவாக்கும் வேறு வகை உணவுப் பண்டங்களுக்குத்தான். அப்பளம் அதில் சேராது இது குடிசைத் தொழில் போன்றது" என்று விளக்கினார் காமராஜ். ●

"**இ**ந்திரா காந்தி ப்ரோ ரஷ்யாவா, ப்ரோ அமெரிக்காவா?"


"அவங்க ப்ரோ இந்திரா . . அந்த அம்மா



வுக்குப் பதவிதான் முக்கியம்.''

"நீங்கதானே அவங்களைப் பிரதமராப் போட்டீங்க... இப்ப நீங்களே வருத்தப் படறீங்களே...!''

"நேருவின் மகளாச்சே... நேருஜியுடன் கூடவே இருந்ததாலே இந்த நாட்டு அரசியலை நல்லாக் கவனிச்சுப் பக்குவப்பட்டிருப்பாங்க, நல்ல முறையிலே நாட்டை ஆளுவாங்க... அதுக்கேத்த திறமையும், மனப்போக்கும் இருக்கும்னு நினைச்சுத் தான் போட்டேன். இப்படி ஆகும்னு கண்டேனா? நாட்டையே அடகு வைச்சுடுவாங்க போலிருக்கே!'' கோபமும், எரிச்சலும் வருகின்றன அவருக்கு... பேச்சிலே ஒரு வேகம்... தவிப்பு...



●

சத்தியமூர்த்திதான் தம்முடைய அரசியல் தலைவர் என்று காமராஜ் சொல்லிக் கொண்ட போதிலும், சத்தியமூர்த்தி தவறு செய்கிற போதும் திசை தப்பிப் போகின்ற நேரங்களிலும், காமராஜ் அவருடைய ஆசானாக மாறி யோசனை கூறவோ, மீறிப் போனால் கண்டிக்கவோ ஒருபோதும் தவறியதில்லை.

வெள்ளைக்காரர்கள் பங்கு கொள்ளும் எந்த விழாவிலும் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் மேலிடம் அப்போது ஒரு கட்டுப்பாடு விதித்திருந்தது. அதை மறந்து விட்டுச் சத்தியமூர்த்தி பூண்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டது தவறு என்று காமராஜ் கருதினார். (பூண்டி நீர்த் தேக்கத்துக்கு அப்போது சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப் அஸ்திவாரக் கல் நாட்டிய நிகழ்ச்சி.)

"காங்கிரஸ் மேலிடத்தில் இம்மாதிரி ஒரு கட்டுப்பாடு இருக்கும்போது தாங்கள் அதை மீறி வெள்ளைக்காரர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டது பெரிய தவறு இல்லையா?'' என்று கேட்டார் காமராஜ்.

"ஆமாம்; அதற்காக என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மேயர் என்ற முறையில் போயிருந்தேன்...'' என்றார் சத்தியமூர்த்தி.

"செய்தது தவறு என்பதை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுங்கள்,'' என்று கேட்டார் காமராஜ்.

'காமராஜா இப்படிக் கேட்கிறார்?' என்று ஒரு கணம் சத்தியமூர்த்திக்கு ஒன்றும் விளங்கவில்லை. வேறு வழியில்லாமல் ஒரு காகிதத்தை எடுத்துத் தாம் செய்தது தவறுதான் என்று எழுதி, மன்னிப்புக் கோரிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார் சத்தியமூர்த்தி.

●

இன்று சிறையில் அடைபட்டிருக்கும் திருடன் மற்றவர்களைக் காட்டிலும் நேர்மையற்றவன் என்றோ உண்மையற்றவன் என்றோ சொல்ல முடியாது. அறியாமையால், சமுதாய வழக்கத்திற்கு மாறான வழியில் திருடியவனே பெரும்பாலும் திருடனாகக் கருதப்படுகிறான். ஆனால், அவனைப் போன்ற மற்றொருவன் தகுந்த முறையைப் பின்பற்றுவதால் பாராளுமன்றத்துக்குப் போகிறான்.

— (பெர்னார்ட் ஷா.)

— எஸ். முகம்மது ஜூகப்.

"...நிலத்துக்கு உச்சவரம்பு இங்கே பதினைந்து ஏக்கர்னு வெச்சிருக்காங்க. கேரளாவிலேயும் பதினைந்து ஏக்கர்னு வெச்சிருக்காங்க. கேரளாவிலே ஐந்து ஏக்கர் நிலம் இருந்தா இங்கே அது பதினைந்து ஏக்கர் நிலத்துக்குச் சமம். அப்படி வித்தியாசம் இருக்கச்சே, இங்கே, அங்கே இரண்டு இடத்திலேயும் பதினைந்து ஏக்கர் ஸீலிங் என்பது எப்படிச் சரியாகும்?''


●

"...ஒரு தமிழர் இந்த நாட்டின் பிரதம மந்திரியா வர முடியும்?''

"முடியும். ஆனா இப்ப முடியாது; அதுக்குச் சரியான சூழ்நிலை இல்லை. நான் காங்கிரஸ் பிரசிடெண்டா இருக்கக்கூடாதுன்னு இந்திரா காந்தி நினைச்சாங்க... மொரார்ஜி தேசாயும் நினைச்சார். இதிலே அவங்க ரெண்டு பேரும் ஒண்ணு!''

●

"ஜனநாயகத்துக்கு ஆபத்து... இந்தியாவுக்கு ஆபத்து — இந்த இரண்டிலிருந்தும் தேசத்தைக் காப்பாத்தணும்னு சொல்றீங்களே, அந்த ஆபத்து எப்படி... எந்த



சென்னை இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. என். ஸ்ரீனிவாசன் அவர்களின் புதல்வி சௌ. எஸ். ருக்மிணி (M.A.)க்கும், கோயமுத்தூர் டி. ஸ்டேன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கே. எஸ். சேஷாத்ரி அவர்களின் சகோதரர் திரு. கே. எஸ். சுரேஷ்கிருஷ்ணன் (M.A.) அவர்களுக்கும், 29.8.88 அன்று சென்னை மாம்பலத்தில் நடந்த திருமணத்திற்கும், 30.8.88 அன்று சென்னை மயிலாப்பூரிலும், 31.8.88 அன்று கோவையிலும் நடந்த வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கும் பிரபல இசைக் கலைஞர்களும், நண்பர்களும், உறவினர்களும் வந்திருந்து, மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள்!



ஸ்ட்ராங்கான திடமுடன் புத்துணர்ச்சி

மிகுந்த திட குணமுடன் மகத்தான
சுவைமணம். அதி உன்னதமான
தேயிலைகளினின்று தயாரிக்கப்பட்டது.
இயற்கையில் விளைந்த புத்தம்
புதுமையினை அளிக்கிறது உமக்கு.



ஜெமினி டீ

டாட்டா டீ படைப்பு.

A TATA PRODUCT

daCunha/TT/4/88 TAM

உருவிலே வந்திருக்குன்னு சொல்ல முடியுமா?''

"இந்த நாட்டிலே பிரதமரை விலைக்கு வாங்கலாம். ஜனநாயகத்தையும் விலைக்கு வாங்கலாம்ங்கற நிலைமை இப்போ வந்துக் கிட்டிருக்கு. இதைவிட நம்ம நாட்டுக்கு வேறே என்ன ஆபத்து வேணும்? மருந்து கண்ட்ரோல், சிமெண்ட் கண்ட்ரோல் — இந்த இரண்டிலேயும் ரொம்ப ஊழல் நடக்கிறது. லட்சம் லட்சமாப் பணம் புரளுது... ஏராளமான வெளிநாட்டுப் பணம் நம்ம நாட்டிலே நடமாடுது... இந்தப் பணமெல்லாம் நம்ம அரசியலைப் பாழடிக்காதா? இந்த மாதிரி அந்நிய நாட்டுப் பணம் நம்மை ஆட்டிப் படைச்சா நம்ம நாடு 'வீக்'காகத்தான் போகும். ரஷ்யப் பணம் அமெரிக்கப் பணம் ரெண்டுமே தப்புத்தான்... இதனாலே நம்ம சுதந்திரமே போயிடுமே...!''

●

1954 — ஆம் வருடம் மார்ச்சு மாதம் 25 — ஆம் தேதி ராஜாஜி சட்டசபைக்கு வந்து தாம் விலகப் போகும் செய்தியை அறிவித்தார்.

பிறகு நடந்த கட்சித் தலைவர் தேர்தலில் காமராஜும், சி. சுப்பிரமணியமும் போட்டியிட்டார்கள். காமராஜுக்கு 93 வோட்டுக்களும் சுப்பிரமணியத்துக்கு 41 வோட்டுக்களும் கிடைத்தன.

காமராஜ் அமைத்த எட்டுப் பேர் மந்திரி சபையில் சி. சுப்பிரமணியத்தையும் சேர்த்துக் கொண்டது காமராஜின் பெருந்தன்மையைக் காட்டியது. சி. சுப்பிரமணியமும் காமராஜுடன் சேர்ந்து சிறந்த முறையில் பணியாற்றியது அவருடைய உயர்ந்த குணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

●

"கல்கியைப் பற்றி உங்க அபிப்பிராயம் என்ன?''

"நல்ல எழுத்தாளர். அந்தக் காலத்திலே திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் 'நவசக்தி'ன்னு ஒரு பேப்பர் நடத்திக்கிட்டிருந்தார். அதிலேதான் கிருஷ்ணமூர்த்தி எழுத்தை நான் முதல்லே படிச்சேன். தேனீயோ தமிழ்த் தேனீயோ — ஏதோ ஒரு பேர்லே எழுதுவார். ரொம்பத் தெளிவா, வேடிக்கையா எழுதுவார்... சிவராமன் பெரிய பெரிய சிக்கலான பிரச்னைகளையெல்லாம் எடுத்து அலசி, ஆராய்ந்து கோர்வையா எழுதுவார். பாமரர்களை விடப் படிச்சவங்க அவர் தலையங்கத்தை ரொம்ப விரும்பிப் படிப்பாங்க. சொக்கலிங்கமும் கல்கியும் பாமரர்களுக்கும் புரியும்படி எழுதுவாங்க...''

"பின்னால், 'ராஜாஜி வேண்டுமா, வேண்டாமா?'ன்னு தமிழ்நாட்டிலே ஒரு பெரிய கிளர்ச்சி நடந்ததே. அப்ப கல்கி தங்களை ரொம்பத் தாக்கி எழுதினாரே... அதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

"அவருக்கு என் பேரில் உள்ள கோபத்தினாலே அப்படி எழுதினாருங்கறதை விட ராஜாஜியின் பேரில் உள்ள பக்தியினால் எழுதினாருங்கறதுதான் என் அபிப்பிராயம். எப்படி எழுதினாலும் ரொம்பத் தெளிவான எழுத்து. காங்கிரசை வளர்க்கிறதுக்கு அவரும் வாசனும் ரொம்ப உதவி செஞ்சிருக்காங்க...''


— சுப்ரபாலன்.

விலை ரூ. 13.50.
வெளியீடு : மோனா பப்ளிகேஷன்ஸ்,
ஏ.ஐ.- 113, இரண்டாவது தெரு,
அண்ணா நகர், சென்னை — 600 040.

அடுத்த இலவச
இணைப்பு கல்கி
2.10.88 இதழுடன்.

அடுத்த இதழில்

குறைந்த முதலீடு;
வாழ்நாள் முழுதும்
வருமானம்.
— கவர் ஸ்டோரி.




இந்த ஆளை உயிரூட்ட முடியாது! மார்ச்சுவரிக்கு அனுப்புங்க, டாக்டர்!
பத்திரிகையாளர்
ஆபரேஷன் தியேட்டர்
அவசரகால தடை சட்டம்
காவிரி நீர் தாவா பற்றி எங்கிட்ட பத்து கோப்புகள் மேலும் தயாராகி இருக்கு!
எங்கிட்ட பத்து என்ன!.. நூறு கோப்புகள் ரெடி!..
பொம்மை
தஞ்சை விவசாயி
இந்தியோடு தமிழையும் ஆட்சி மொழி ஆக்கினால்... இந்திய அமைதிப் படை போர் நிறுத்தம் செய்து தமிழ் ஈழத் தீர்வுப் பாடு பட்டால்... மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையை ராஜீவ் சட்டமாக்கினால் தி.மு.க. தேர்தலில் போட்டியிடாது!
கருணாநிதி பாணியில் மூப்பனார் பேசினால்...!
கருணாநிதி நாத்திகத்தைக் கைவிட்டு கோயில் சென்று கடவுளை வழிபட்டால்.. சர்க்காரியா அறிக்கையை ஒப்புக்கொண்டால்... இதை அடுத்த தேர்தலில் ஒருவேளை அவர் கட்சி வெற்றி பெற்றாலும் அவர் முதல்வர் ஆவதில்லை என வாக்குறுதி அளித்தால் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடாது!



கல்கி

1988 செப்டம்பர் 18
மலர் 47 இதழ் 7
விபவ புரட்டாசி 2



சாத்தூரார் மீது நடந்த தாக்குதல்

சாத்தூர் ராமச்சந்திரன் மீது நடந்த தாக்குதல் அநாகரிகமானது; வருந்துவதற்கும் கண்டனத்துக்கும் உரியது. இத் தாக்குதலில் தனிநபர் துவேஷம் மட்டுமல்ல, அரசியல் நோக்கமும் கலந்திருக்கிறது என்பது தெளிவு. தாக்குதலை நடத்தியவர்களை மட்டுமின்றி அதன் பின்னணியில் இருந்தவர்களாகக் கருதப்படுகிறவர்களையும் போலீஸார் கைது செய்துள்ளனர். ஜனநாயக அரசியலில் இதுபோன்ற வன்முறைகளுக்கு இடமேயில்லை. ஆனால் அவ்வப்போது நடப்பது மட்டுமல்ல; அதிகரித்தும் வருகிறது. காரணம் என்ன?

அரசியல்வாதி என்றால் அவனுக்குச் சில தகுதிகள் வேண்டும் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. அவன் மெத்தப்படித்த பேரறிஞனாக இருப்பது நல்லது. எனினும் அது ஒரு நிபந்தனை அல்ல. ஆனால் அவனிடம் நல்ல குணங்கள் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தியாக உணர்வு, நேர்மை, லட்சிய நோக்கு, நல்லொழுக்கம், தேசப்பற்று, மனிதாபிமானம், மனச்சாட்சியை மீறாத நியாய உணர்வு இவையெல்லாம் அன்றைய அரசியல்வாதியிடம் இருந்தன. மேலும், ஒரு கட்சியென்றால் அதற்குக் கொள்கைகள் இன்றியமையாதது என்றும், கட்சியைச் சேர்ந்த பேச்சாளர்கள் அந்தக் கொள்கைகளைத் தாங்கள் உணர்ந்தறிவதுடன், அவற்றைப் பிரசாரம் செய்து, மக்களுக்குத் தெளிவு பிறக்க விளக்கிச் சொல்ல வேண்டும் என்றும் கருதப்பட்டது. ஆனால் அந்தக் காலம் மலையேறி விட்டது.

பல்வேறு கட்சிகள் பிளவுபட்டன. ஒவ்வொரு பிளவின் போதும் புதிதாகத் தோன்றும் அணியில் அல்லது கட்சியில் பதவி ஆசை பிடித்தவர்கள், ஓர் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தரத் தலைவரைச் சூழ்ந்து நின்றனர். இவர்களுக்கு முதல் லட்சியம் பதவியைப் பிடிப்பதாகவும் இரண்டாவது லட்சியம் பணம் பண்ணுவதாகவும் ஆகிவிட்டது. பிளந்து, பிரிந்து வந்த கட்சிகளானதால், ஒரிஜினலான தனித்தன்மை கொண்ட கொள்கைகள் இவர்களுக்கு இல்லை. மக்களைக் கவரக் கூடிய புதிய கொள்கைகளை உருவாக்கும் திறமையும் இல்லை. கட்சிக்கென்று உருப்படியான கொள்கைகளே இல்லாத போது அவற்றைப் பிரசாரம் செய்வது எப்படி? எனவே மக்களைக் கவர, ஒரே உபாயமாக எதிர் அணியை அல்லது கட்சியை ஏச ஆரம்பித்தார்கள். தாறுமாறாகக் குற்றச்சாட்டுக்களையும் அவதூறுகளையும் அடுக்கினார்கள். அவர்கள் இவர்களைப் பதிலுக்கு 'நாயே, பேயே' என்று திட்டினார்கள். இது ஜனநாயகம் அல்ல என்பதும், ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் அதற்கென்று குறிப்பிடத்தக்க கொள்கைகள் இருக்க வேண்டும் என்பதும் மறந்தே போயிற்று. ஆக, கட்சிகள் பிளவுபடப் பிளவுபடத் தோன்றிய புதிய கட்சிகள் தரத்தில் குறைந்து போயின. அவற்றின் தலைவர்களும் தரம்தாழ்ந்து போனார்கள்.


இவர்கள் மேடையேறி ஒருவரை ஒருவர் கன்னா பின்னா என்று திட்டிக் கொள்வதன் மூலமே கட்சித் தொண்டர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு விடுகிறார்கள். தாங்களும் உணர்ச்சிவசப்பட்டுப் போகிறார்கள். அதனால் அமைதியாகச் சிந்திக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லாமல் போகிறது. அடிதடி சண்டைகளே அமர்க்களப்படுகின்றன. மாறுபட்ட கருத்துக்களின் மோதல் என்பது மாறி, ஜனநாயகத்தில் மண்டைகள் உடைகின்றன.

'சாத்தூர் ராமச்சந்திரன் தாக்குதலுக்கு உள்ளானதற்குத் தரம் கெட்டுப் போன அரசியலே காரணம்' என்று சொன்னால், 'காந்திஜி சுட்டுக் கொல்லப்படவில்லையா? லிங்கன், கென்னடி போன்றவர்கள் கொலை செய்யப்படவில்லையா?' என்று திருப்பிக் கேட்கலாம். இது வாதமல்ல; விதண்டாவாதம்.

'புகை பிடிப்பதால் புற்றுநோய் வருவது விஞ்ஞான பூர்வமாக நிரூபணமாகியுள்ளது' என்றால், 'புகை பிடிக்காத சிலருக்கும்தான் கான்ஸர் வருகிறது' என்று தர்க்கம் பண்ணலாம். 'குடிப்பழக்கத்தால் இருதயத்துக்குக் கெடுதல்' என்றால், மதுவைத் தொட்டுக் கூடப் பார்க்காத சிலர் ஹார்ட் அட்டாக் வந்து செத்துப் போனதை எடுத்துக்காட்டாகக் கூறி மறுத்துரைக்கலாம்.

ஆனால் இத்தகைய விதண்டாவாதங்களால் நமது அரசியலில் ஏற்பட்டுள்ள புற்றுநோயை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



16th Century Compass

வளமான வாழ்விற்கு வழிகாட்டும் வங்கி— CUB!

சிட்டி யூனியன் வங்கி உங்கள் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

உங்கள் தேவைகளைக் கண்டறிந்து சேமிக்க உதவுகிறது.

- சேமிப்புக் கணக்குகள்
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கச் சான்றிதழ்கள்
- வாமன விஸ்வரூப திட்டம்
- நிரந்தர இட்டு வைப்புகள்
- குடிபெயர்ந்தோர் கணக்குகள்
- மற்றும் உங்கள் தேவைக் கேற்ற எண்ணற்ற சேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கும்பகோணம்—612 001.

CUB—உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

MCS/CUB/273

பிரதமர் இல்லம் நோக்கி ஊர்வலம்!

-செம்பியன்

ஆந்திரப் பிரதேச எம். எல். ஏக்களும் எம். பிக்களும் பிரதமரைச் சந்திக்க ஒரு கூட்டமாகப் போனார்கள் — ஏதோ அவர்கள் பிரதமரைச் சந்திப்பது ரொம்பச் சுலபம் போலவும், ஆந்திர மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி சீக்கிரமே கிடைக்க வேண்டும் என்று பிரதமரிடம் மனு சமர்ப்பிப்பது அதைவிட வெகு எளிதான காரியம் போலவும் எண்ணிக் கொண்டு போனவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்தார் பிரதமர். போலீஸாரின் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் எல்லாம் அமர்க்களமாக நடந்தேறின. பாருங்கள், அதன் பிறகும் புத்தி வரவில்லை! 'இப்படியெல்லாம் எங்களைப் பிரதமர் நடத்துவதும் அவமதிப்பதும் ரொம்ப ரொம்பத் தப்பு' என்று ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்கள்! அவர்களோடு சேர்ந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களும் கூத்தடிக்கிறார்கள்! சரி, பிரதமர் செய்தது தவறு என்றே வைத்துக் கொள்வோம். எதிர்க்கட்சியைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் பிரதமராக இருந்தால் எப்படி நடந்து கொள்வார்? இதை அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? எனவே சந்திரசேகரை அணுகினேன். "எதிர்க்கட்சிக் கூட்டணியில், உள்ளதற்குள் ஜனதாதான் செல்வாக்கு மிக்க அகில இந்தியக் கட்சியாக இருப்பதோடு, மாநில அளவில் ஓர் ஆட்சியும் அமைத்திருக்கிறது. எனவே, தப்பித் தவறி எல்லாருமாகச் சேர்ந்து உங்களையே தலைவராக்கி விடுகிறார்கள்; நீங்களும் பிரதமராகி விடுகிறீர்கள்; அப்போது காங்கிரஸ் ஆளும் ஒரு மாநிலத்திலிருந்து அக்கட்சி எம். பிக்களும், எம். எல். ஏக்களும் உங்களைக் காண அணி திரண்டு ஊர்வலமாக வரத் திட்டமிடுகிறார்கள்; நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டேன்.

"அஜீத்சிங்! அஜீத்சிங்!" என்றார் சந்திரசேகர்.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

"அவர் இங்கில்லை; ஆனால் அவர் எதற்கு இருக்கிறார்?" என்றார் சந்திரசேகர்.

"ஓ! அவரைப் பயன்படுத்திக் கொள்வேன் என்கிறீரா?"


"கரெக்ட்!"

"அஜீத்சிங் என்ன செய்வார்?"



"அவர் ஜனதாவிலிருந்து காங்கிரஸுக்குத் தாவுவார். பிறகு அந்த எம். எல். ஏக்கள் சிலரிடம் போய் அந்தரங்கமாக, 'ராஜீவ் காந்தியின் அசட்டுத்தனங்களால்தான் மத்தியில் காங்கிரஸ் தோற்றது' என்று பிரசாரம் செய்வார். மேலும், 'அந்த மாநில காங்கிரஸ் முதல்வர் அகம்பாவம் பிடித்தவர்; செய்கிற ஊழலில், அடிக்கிற ஆதாயத்தில் மற்ற காங்கிரஸ் எம். எல். ஏ., எம். பிக்களுக்குப் பங்கு தரமாட்டேனென்கிறார்' என்றெல்லாம் புகார் செய்வார். இதனால் எம். பி., எம். எல். ஏக்களிடையே கோபம், பொறாமை ஏற்படும். முதல்வரைச் சார்ந்தவர்கள், பிரதமர் இல்லத்தை நோக்கி ஊர்வலம் போகலாம் என்று கூறியதற்காகவே முதல்வரை எதிர்க்கும் இன்னொரு சாரார் 'கூடாது' என்பார்கள். ஒருவரை ஒருவர் குற்றம் குறை கூறிக் கொண்டிருக்கவே பொழுது போதாது..."

"எனவே பிரதமர் இல்லம் நோக்கி ஊர்வலமே வராதாக்கும், பலே!" என்று அவர் சாணக்கியத்தைப் பாராட்டி விட்டு, ஒரு மாநிலத் தலைவர் என்ற முறையில் ஜானகியை அணுகினேன்.



"'ராஜீவ், தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றலை; காங்கிரஸ் என் முதுகில் குத்திவிட்டது' என்று நீங்க சொல்லிக்கிட்டிருக்கீங்க. ஓர் அற்புதம் நிகழ்ந்து நீங்களே பிரதமராகிவிட்டால், அப்போது ஒரு எம். எல். ஏக்களின் ஊர்வலம் உங்கள் இல்லம் நோக்கி வந்தால் எப்படி சமாளிப்பீங்க?''

"செக்யூரிடி காரணமாக என் வீட்டின் கதவுகள் சாத்தியே இருக்கும். ஆனால் என் இதயக் கதவுகள் திறந்தே இருக்கும்! எந்தக் கட்சியின் எந்த அணியில் யார் இருந்தாலும் எல்லாரும் என் குழந்தைகளே! எம். ஜி. ஆர். ஆட்சியைப் பாரதமெங்கும் அளிக்கும் என் பணியில் எல்லாரும் ஒத்துழைக்கணும். சில மாநிலங்கள் முன்னேறினால் அது எம். ஜி. ஆர். ஆட்சி; சில மாநிலங்கள் பின் தங்கினால் அதுவும் எம். ஜி. ஆர். ஆட்சியே! இன்று என்னைத் தாக்கிக் கோஷமிட்டு, ஊர்வலம் வந்தாலும் நாளை நடந்ததை மறந்து அனைவரையும் வரவேற்க என் கட்சிக் கதவுகள் திறந்தேயுள்ளன. அந்த அம்மாவையும் அழைத்துக் கொண்டு வரட்டும் அவருக்கும் இடமுண்டு....'' என்று உருக்கமாகக் கண்கலங்கியபடி ஜானகி தொடர்ந்து பேசிக் கொண்டே போக, நான் விம்மல் வெடிக்க,

"போதும்! போதும்! இதுக்குமேல் தாங்காது!'' என்று துக்கத்தில் கதறியே விட்டேன்!

மனத்தைத் தேற்றிக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டு, ப. சிதம்பரத்தை அணுகினேன். ''ஆளும் கட்சியிலேயே ராஜீவைத் தவிர வேறு ஒருவர் பிரதமராய் இருந்திருந்தால் நிலைமையை எப்படிச் சமாளித்திருப்பார். என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்'' என்று நான் சொன்னேனோ இல்லையோ, சிதம்பரம், ''அடாடா! அவதூறுத் தடை மசோதா இன்னும் சட்டமாகவில்லையே! எனக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா? நிறைவேறியிருந்தால் இப்போ உன்னைப் பிடித்து உள்ளே தள்ளியிருக்கலாம்!'' என்று பெருமூச்சு விட்டார்.

"ஐயோ! நான் என்ன அவதூறு சுமத்திவிட்டேன்?'' என்று பதறிப் போய்க் கேட்டேன்.

"ஆ! என்னைப் பிரதமராக நினைத்துக் கொள்ளச் சொல்கிறாய் அல்லவா? அது ராஜீவுக்கு நான் செய்யும் துரோகமாகாதா? கட்சித் துரோகமில்லையா? ஆக, என் மீது துரோகி என்று மறைமுகமாக நீ பழிசுமத்துகிறாய் அல்லவா? என்னைச் சொன்னாலும் போனால் போகிறது என்று விட்டுவிடலாம். ஆனால் பிரதமர் மீதே நீ அவதூறு சுமத்துகிறாயே!''

"ஐயய்யோ! அப்படியொன்றும் நான் சொல்லவேயில்லையே!''

"அதெப்படி? பிரதமர், இனி பிரதமர் இல்லை; சிதம்பரம்தான் பிரதமர் என்று கற்பனையாக நீ எழுதினாலும் அதன் உள்நோக்கம் என்ன?

"ராஜீவ் பிரதமராக இருக்கத் தகுதியில்லை என்று நீ கூறுவதாகத்தானே ஆகும்? அல்லாறெனில் அவர் மீது பலர் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் சுமத்திய குற்றச்சாட்டுக்களையெல்லாம் நீயும் ஏற்று, அவரை ஊதாரி, ஊழல் பேர்வழி என்று சொல்வதாகத்தானே ஆகும்! அதற்கெல்லாம் ஆதாரம் உன்னிடம் இருக்கிறதா? இல்லையெனில் உன்னை ஆறு மாசம் உள்ளே தள்ள வேண்டியதுதானே?''

பனா சினா கூறிக் கொண்டே போக என்னைக் கிலி பிடித்து ஆட்டுவித்தது. ஆனால் சட்டம் இன்னும் நிறைவேறவில்லை என்ற எண்ணம் அவரிடம் மீண்டும் வருத்தத்துடன் கூடிய பெருமூச்சை உருவாக்க, எனக்குத் தெம்பு வந்தது.

"அதிருக்கட்டும் என் கேள்விக்கு என்ன பதில்?'' என்றேன்.

"ரொம்ப சிம்பிள்! காங்கிரஸ் தவிர இதர கட்சிகளின் எம். எல். ஏக்கள், எம். பிக்கள் ஓர் அணியாகத் திரளக்கூடாது; கூட்டமாக ஊர்வலம் போகக்கூடாது; பிரதமர் இல்லத்தைச் சுற்றி ஒரு மைல் வட்டாரத்துக்கு எந்த எதிர்க்கட்சி எம். எல். ஏ. அல்லது எம். பி.யும் போகவே கூடாது' என்று மசோதா இயற்றி, நாடாளுமன்றத்தில் எங்களுக்கிருக்கும் மிருகபல மெஜாரிட்டியின் துணையுடன் அதனைச் சட்டமாக்கிவிடுவேன்'' என்றார் சிதம்பரம்.

"ஒண்டர்ஃபுல்!'' என்று வாழ்த்திவிட்டு, அனுபவமுள்ள, ஆனால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகி நிற்கிற ஒருவரைக் கருத்துக் கேட்க வேண்டும் என்று எண்ணி சி. சுப்பிரமணியத்தை நெருங்கினேன்.

என் கேள்வியைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட அந்த அந்த நாளைய மனுஷர், "எம். பி., எம். எல். ஏ. கோஷ்டியை எதிர்கொண்டு சந்தித்து மனுவைப் பெற்றுக் கொள்வேன். அதில் கண்டுள்ள குறைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவேன். ஒருவேளை அன்று எனக்கு அவசர வேலை இருந்தால், அவர்களைத் தயவு செய்து என்னைக் காண ஊர்வலமாக வரும் தேதியை ஒத்திப் போடுமாறு கோரி, இருதரப்புக்கும் வசதியான தேதியை நிர்ணயிப்பேன்'' என்றார்.

இதைக் கேட்டு எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. "ஹூம்! நீர் ஜனநாயகத்துக்கே லாயக்கில்லை!'' என்று முகத்திலடித்த மாதிரி கூறிவிட்டுத் திரும்பினேன்.



நன்மை செய்வீர்...உங்கள் உடலுக்கு!

நியூட்ரின் மில்க் பிஸ்கட் — இதன் எடையளவுக்கு ஆரோக்கியமும் சக்தியும் நிறைந்தது. இதில் பாலின் அத்தனை போஷாக்குகளும் அடங்கி உள்ளன. விரும்பிடும்போதெல்லாம் சுவைத்து, வழங்கிடுங்கள் உடலுக்கு ஒரு புதிய ஊட்டம்; உணர்ந்திடுங்கள் உடற்பலனை அதனின் மூலம்.

நன்மைகள் நிறைந்தது... ஆரோக்கியம் மிகுந்தது.

nutrine
BISCUITS

SPEER 21 101 88 A Tam

என்ன சாவி சார்
நீங்க ஏன் எப்போதுமே.
"பிஸ்லேரி கிளப் சோடா" வையே
குடிக்கறீங்க ?



எந்த பொருள் தயாரித்தாலும் சிறந்த மேற்பார்வையில் தயாரிக்க வேண்டும். சோடான்னா எப்படி தயாரிக்கிறது மட்டும் முக்கியமல்ல. யாரால் தயாரிக்கப்படுகிறது என்பதும் முக்கியம். பிஸ்லேரி கிளப் சோடா Dr. N. மகாலிங்கத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் சென்னை பாட்லிங் கம்பெனியில் சிறப்பாக, விஞ்ஞான ரீதியில் தூய்மையாக தயாரிக்கப்படுகிறது. அவர் எது செய்தாலுமே நன்றாக செய்வார். அதனால் பிஸ்லேரி கிளப் சோடாவின் தரத்தின் மேல் எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு.




"Bisleri CLUB Soda"

தயாரிப்பாளர் :

சென்னை பாட்லிங் கம்பெனி லிட்.
423, பூந்தமல்லி நெடுஞ்சாலை
சென்னை — 600 106.
தொ.பே. 420440, 420755, 425150.

200 கோடி ரூபாய்
புழக்கமுள்ள சக்தி குழுவின்
ஓர் அங்கம்.



ஜெமினி கணேசனை அநியாயத்திற்கு மூப்பு தீர்க்கி இருக்கிறது. என்றாலும் பிலஹரி மார்த்தாண்டம் பிள்ளைவாளாகக் கொடுத்த வேலையைக் கச்சிதமாகச் செய்திருக்கிறார்.

கமல்ஹாசன் — அடக்க ஹாசன்.

மனோரமா படு இயல்பு.

யார் அந்த ஊமை நாயனக்காரர்? ஊதித் தள்ளியிருக்கிறாரே?

சீதாவிற்கு அதிகம் ஓடியாடுகிற வேலை இல்லை என்றாலும் செய்த வரை சின்சியராகச் செய்திருக்கிறார்.

ஜனகராஜ் — ப்ச்!

சார்லி — ப்ச், ப்ச்!

படத்திற்கு வருவோம்.

இடைவேளை வரை படம் கவிதை. ஒரு பக்கம் கோபக்கார ஜெமினி. இன்னொரு பக்கம் நாயனக்கார அண்ணன். இருவருக்கும் நடுவில் கமல். மூன்று பேருமாகச் சேர்ந்து நடத்தும் அந்த தனிக் கச்சேரி.... சப்பாஷ்...

கிளுகிளுப்பு மைனஸ். டூயட்டில் சீதாவை ஒரு தூக்குத் தூக்கி கமல் பாலே விளையாடும் காட்சி மட்டும் கிளுகிளுப்பு ரகம்.

பாத்திரச் செதுக்கலுக்குப் பெயர் போன டைரக்டர், சாருகேசியை மாத்திரம் தொங்கலில் விட்டு விட்டது கொஞ்சம் ஆதங்கம் தான்.

சீதா அவ்வளவு பகிரங்கமாக மனைவிமார்களைக் கூட்டி வைத்துப் பிரசாரம் செய்வது, அப்படி என்ன ரசிக்கும்படியாகவா இருக்கிறது?

கிராமத்தின் இளைஞர் தலைவன் பிரதமருடைய பாராட்டைப் பெற வரும் சமயத்தில் ஒன்றிரண்டு நண்பர்கள் கூடவா இல்லாமல் வந்து, பத்துப் பேருடன் சண்டை விட்டுச் சமாளிப்பான்?

பிரதமர் விசிட் எவ்வளவு சீரியஸான விஷயம்? கேலிக்கூத்து ஆகி விட்டது படத்தில்.

என்னதான் பங்சுவாலிட்டி பார்க்கிறவராக இருந்தாலும் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவனை அம்போ என்று விட்டு விட்டு கச்சேரிக்கு காரை விடச் சொல்வது, 'மனிதாபிமானமே இல்லாதவர்' என்று சொல்லப்பட்டாலும் கூட மிகையோ மிகை.

பாடல்களில் கர்நாடக சங்கீதம் அதிக இடத்தை ஆக்கிரமித்ததாலோ என்னவோ பாடல்கள் அத்தனையும் கேட்க இனிமை.

பிற்பகுதி சினிமாத்தனமாகவும் இருந்து, நத்தை வேகத்திலும் ஊர்வதால் கொஞ்சம் சலிப்பு. இருந்தாலும் பாலசந்தரின் நோக்கம் இருக்கிறதே, கிராமங்களை எல்லாம் திருத்தி அமைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம்; அதற்கு முக்கியத்துவம் கொடுத்துப் படம் எடுத்திருக்கிறாரே... அந்தத் துணிச்சலுக்காகவே பாராட்டித்தான் ஆக வேண்டும்.

— ஜெயமன்மதன்

ஒரு காமெராக் கலைஞரின் கேரள அனுபவங்கள்

மந்திரம், மாந்ரீகம், பேய் ஓட்டுவது, பலி கொடுப்பது — இவையெல்லாம் வெறும் மூட நம்பிக்கைகள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்கள் என்று நாம் கொஞ்சம் கொஞ்சமாக இவற்றைத் தவிர்க்கவும் ஒதுக்கவும் ஆரம்பித்துள்ள வேளையில், இத்தகைய சடங்குகளைப் புகைப்படங்கள் எடுத்து ஒரு கண்காட்சியே வைத்துள்ளார் ஒரு காமிராக் கலைஞர் என்று கேள்விப்பட்டபோது ஆச்சரியமாக இருந்தது.

சென்னை, பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கிய அப்புகைப்படக் கண்காட்சிக்குச் சென்று பார்த்தோம். புகைப்படங்கள் அற்புதமாக இருந்தன. கேரள மாநிலத்தில் நடைமுறையிலுள்ள சடங்குகள், கோயில் விழாக்கள், அவற்றையொட்டி நடைபெறும் வெறியாட்டங்கள், களியாட்டங்கள் — இவற்றை நம் கண்முன் உயிர்ப்பித்தே காண்பித்திருந்தார் புகைப்படக் கலைஞர்.

இலேசான புகைசூழ, ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருக்கும் ஒரு நம்பூதிரி; வயல்களுக்குக் குறுக்காகக் கிராம தேவதைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் காட்சி; 'பரணி' விழாவின் போது வெறிக் களிப்புடன் ஆடும் பெண்கள்; கடவுளராக வேடம் தரித்து ஆடும் ஆண்கள்; பத்ரகாளி ஸ்வரூபமாகக் கருதப்படும் ஆருடக்காரர்கள் (இவர்களை வெளிச்சப்பாடுகள் என்று அழைக்கிறார்கள்)... பார்க்கப் பார்க்க, நம்மை இந்த நிகழ்வுகள் நடக்கும் இடத்துக்கே அழைத்துச் செல்லும் சக்தி அப்புகைப்படங்களுக்கு இருந்தன.

புகைப்படங்களை எடுத்த பெபிடா சேத் என்ற பெண்மணி இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்தவர் என்று அறிந்ததும், பகுத்தறிவுப் பின்னணியிலிருந்து வரும் ஒருவருக்கு இத்தகைய விஷயங்களில் எப்படி ஈடுபாடு உண்டாயிற்று என்ற கேள்வி குடைய ஆரம்பித்தது. கூடவே, மற்றொரு வினாவும் எழுந்தது. சாதாரணமாகக் கோயில் பூசாரிகளும் மாந்திரீகர்களும் வெளி மனிதர்களைத் தங்கள் சமீபத்தில் வர அனுமதிக்க மாட்டார்கள்; அதிலும் பெண் என்றால் விதிகள் இன்னும் கடுமையாகும்; மேலும் அயல் நாட்டுப் பெண் என்றால் அவருக்கு நிச்சயம் அங்கீகாரம் கிடைக்காது. இப்படி இருக்கையில் பெபிடா சேத் எவ்வாறு இவ்வளவு தத்ரூபமான புகைப்படங்களை எடுத்தார்?

பெபிடா சேத்தையே சந்தித்து இக்கேள்விகளை எழுப்பினோம்:

"மந்திரம், மாந்திரீகம், சடங்குகள் போன்றவற்றை நீங்கள் நம்பிக்கையுடன்தான் அணுகினீர்களா?"



• பெபிடா சேத்.

• தேவம் திருவிழா







"இதுவரை இக்கேள்வி எனக்குள் எழுந்ததேயில்லை. இதற்கு என் இளமைப் பருவ பாதிப்புக்கள் ஒரு காரணமாக இருக்கக் கூடும். நான் சிறுமியாக இருந்த போது (1950-களில்) என் பெற்றோரின் விவசாயப் பண்ணையில் வசித்தேன். கிராமப்புறச் சூழலில் பண்ணை ஆட்களுக்கிடையில் வளர்ந்தேன். விவசாயிகளுக்குத்தான் இயற்கையின் சக்தியும் பரிமாணமும் நன்றாகத் தெரியும். சில மரங்களும் சில நதிகளும் ஓடைகளும் புனிதமாகக் கருதப்பட்டன. கிராமிய நடைமுறைகளும் சிந்தனைகளும் உலகில் எந்தப் பகுதியிலும் சில அடிப்படை ஒற்றுமைகள் உடையன. கிராம மக்கள் இயற்கையை வழிபடுவதையும் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகக் கருதிச் சில விஷயங்களை நம்புவதையும் இங்கிலாந்தில் நான் பார்த்திருந்ததால் கேரளச் சடங்குகளை வினோதமாக எண்ணாமல், என்னால் ஏற்றுக் கொள்ள முடிந்தது. நான் அவற்றை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்வதால் அவையே சரியான இறை வழிபாட்டு முறைகள் என்று நான் கருதுவதாக ஆகிவிடாது. கேரள மக்களின் சமூகக் கலாசாரப் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது அவை இயல்பான நிகழ்வுகளாகத் தெரிகின்றன. அதனால் அவற்றை நான் அறிவுபூர்வமாகக் கூறு போட்டுப் பார்க்கவோ, ஆராயவோ செய்யவில்லை."

"சடங்குகளில் பயன்படுத்தப்படும் வண்ண ஆடைகளாலும், அணிகலன்களாலும், தாளகதியுடன் கூடிய அசைவுகளாலும் கவரப்பட்டுத்தான் நீங்கள் அவற்றைப் புகைப்படம் எடுத்தீர்களா?"

"இந்தப் புற விஷயங்களைக் காட்டிலும் இவற்றைப் பயன்படுத்திய மக்கள், அவர்களுக்கு இருக்கும் தூய நம்பிக்கை, அவர்களுடைய கலாசாரப் பற்று, அது குறித்து அவர்கள் கொண்டுள்ள நியாயமான பெருமை — இவைதாம் என்னை ஈர்த்தன; அவர்கள் பேரில் ஒரு மரியாதையை ஏற்படுத்தின. அதனால் முதலில் அவர்களுடைய நம்பிக்கையைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டேன். எந்தப் புகைப்படமுமே சம்பந்தப்பட்ட நபரின் அனுமதி இன்றி எடுக்கப் பட்டதல்ல."

"ஓர் அன்னிய தேசத்துப் பெண்ணான உங்களை இந்த மக்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்? தாங்கள் புனிதமாகக் கருதும் சடங்குகளைப் பார்க்கவும் புகைப்படம் எடுக்கவும் உங்களை எப்படி அனுமதித்தார்கள்?"

"அதற்கு நான் நிரம்பப் பாடுபட வேண்டியிருந்தது. முதலில் நான் இங்கிலாந்திலிருந்து கேரளாவுக்குச் சென்றது யானைகளின் பேரில் நான் கொண்டிருந்த பற்றினால் தான். யானைகள் பெரும்பாலும் சடங்குகளில் பயன்படுத்தப்படுவதைப் பார்த்தேன்; அதனால் சடங்குகளில் ஆர்வம் ஏற்பட்டது. ஆரம்பத்தில், எந்தக் கோயிலுக்குப் போனாலும், எந்தச் சடங்குக்குச் சென்றாலும் என் முகத்தில் கதவை அறையாத தோஷமாக என்னை வெளியேற்றி விடுவார்கள். ஆனால் நான் சளைக்காமல் என் படையெடுப்பைத் தொடர்ந்தேன். 1972 முதல் 1978 வரை பலமுறை கேரளா சென்று நீண்ட நாட்கள் தங்கித் திரும்பினேன். 1979 முதல் அங்கேயே தொடர்ந்து வசிக்க ஆரம்பித்தேன். அதற்குப் பிறகுதான் எனது நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு கோயில்களுக்குள் நுழைய எனக்கு அதிகார பூர்வமாக அனுமதி வழங்கப்பட்டு, அது ஒரு செய்தியாகவே நாளிதழ்களில் இடம் பெற்றது. கேரளத்தில் அனேகமாக எல்லோருமே நாளிதழ்களைப் படிப்பார்கள். அதனால் எங்கு சென்றாலும் என்னை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆரம்பத்தில் விலகிநின்று பார்க்கவும் புகைப்படங்கள் எடுக்கவும் அனுமதித்தார்கள். அப்போதெல்லாம் நான் டெலி லென்ஸைப் பயன்படுத்தித்தான் படங்களை எடுத்தேன். எடுத்த படங்கள் பலவற்றை அவர்களிடமே கொடுத்து விடுவேன். பல ஆயிரம் படங்களை இவ்வாறு கொடுத்துக் கொடுத்து நான் ஏராளமாக நஷ்டப்பட்டுப்போனேன். ஆனால் இதனால் வேறு ஒரு நன்மை ஏற்பட்டது. எனது நோக்கம் வெறும் வியாபாரம் அல்ல என்பதையும் நான் அவர்கள் பேரில் மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ளேன் என்பதையும் அம்மக்கள் உணர்ந்தார்கள். நெருங்கி வந்து படமெடுக்க என்னை அனுமதித்தார்கள். எனக்கும் கோயில்களில் ஈடுபாடு ஏற்பட்டது. வெறுமே புகைப்படம் எடுக்கப் போனவள் கோயில்களில் வழிபடத் தொடங்கினேன். இதற்குப் பிறகு, ஏதேனும் கிராமத்தில் உற்சவமோ, திருவிழாவோ நடந்தால் அவ்வூர் மக்களே என்னை வந்து அழைக்க ஆரம்பித்தார்கள். அழைப்புகள் வர ஆரம்பித்த புதிதில், நான் எல்லா அழைப்புகளையும் மறுக்காமல் ஏற்றேன். ஒரு முறை, தொடர்ந்து மூன்று நாட்கள் தூக்கமின்றி வெவ்வேறு விழாக்களைக் காண வேண்டி

யிருந்தது. அதைத் தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரம் நின்றபடியே பஸ்ஸில் பிரயாணம் செய்து ஒரு கிராமத்துத் திருவிழாவுக்குப் போனேன். போய்த் திரும்பிய மறுநாளே வேறொரு குக்கிராமத்தை அடைய நான்கு மணி நேரம் நடந்தே செல்ல வேண்டியதாயிற்று. ஆனால், இவ்வாறெல்லாம் மெய்வருத்தம் பாராமல் நடந்ததற்குப் பலன், கிடைத்தது. இதற்குப் பிறகு வெளிச்சப்பாடுகள் சிலர் எனக்குப் பிரசாதமும் அருளுரையும்கூட வழங்கினார்கள். இதையே நான் ஒரு கௌரவமாக, முழு அங்கீகாரமாகக் கருதினேன்.''

"நீங்கள் ஆயிரக்கணக்கில் புகைப்படங்கள் எடுத்துள்ளதாக அறிகிறோம். இவற்றைக் கொண்டு என்ன செய்வீர்கள்?"

"பலர் என் புகைப்படங்களை வாங்கிப் புத்தகமாக வெளியிட முன்வந்துள்ளனர். ஆனால், பயங்கரமான காட்சிகளை மட்டுமே வெளியிட்டு ஒரு பரபரப்பை ஏற்படுத்துவதே அவர்களுடைய நோக்கமாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்கிறேன். இவ்வாறு செய்தால் அது நான் நேசிக்கும் கேரள மக்களுக்கு நியாயம் செய்ததாகாது. கேரள கலாசாரப் பின்னணியைப் புரிந்து கொள்ளவே இப்படங்கள் உதவ வேண்டும். அந்த வகையில் புத்தகம் வடிவமைக்கப்பட வேண்டும்.... ஒரு மிகப் பிரபல இந்திய புகைப்படக் கலைஞர் ஒரு முறை என்னிடம் சொன்னார்: —'நீங்கள் எடுத்துள்ள படம்தான் முக்கியமே தவிர, அதிலுள்ள மனிதர்கள் அல்ல' என்று. ஆனால், நான் அவ்வாறு கருதவில்லை. அதனால் புத்தகம் வெளியிடும் உரிமையை வழங்கவே தயக்கமாக இருக்கிறது.''

"சில சடங்குகளில் குரூரமும் கொடுமையும் இருப்பதாக உங்களுக்குத் தோன்றவில்லையா?''

"இருக்கிறது! நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சடங்குகளை இந்த மக்களின் வாழ்க்கைப் பின்னணியோடு தொடர்புபடுத்தி நீங்கள் பார்க்க வேண்டும். இவர்களில் பலர் வசிக்கும் இடங்கள் உலகின் பல இடங்களோடு ஒப்பு நோக்குகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. கல்வியறிவு விஸ்தீரணம் அடைவதால் மனோபாவங்கள் மாறக்கூடும். அப்போது இந்த மனிதர்களும் 'மாறுவார்களோ, என்னவோ...''

"கேரளத்துச் சடங்குகளைப் புகைப்படங்கள் எடுத்தது போலவே இந்தியாவின் இதர மாநிலங்களிலும் எடுக்கும் திட்டம் இருக்கிறதா?''

"தொடர்ந்து பல இடங்களில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருப்பேன். ஆனால் இவ்வளவு தீவிரமான முயற்சியில் இறங்கப் போவதில்லை. காரணம், இப்போது எனக்குத் திருமணம் ஆகிவிட்டது; என் கணவருடன் தில்லியில் வசிக்கவே விரும்புகிறேன். (ரோஷன் சேத் என்ற இந்திய நடிகரை மணந்துள்ளார் பெபிடா.) மேலும், கேரளாவில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஓர் அற்புதமான காதல் உறவைப் போன்றது. அந்தத் தீவிரத்துடன் ஒரு முறைதான் காதலிக்க முடியும்!''

சந்திப்பு: **சீதா ரவி**

பெபிடா சேத் வண்ணப்படம், மற்றும் புகைப்படங்கள்: **கே. வி. ஆனந்த்**

மேலட்டையில்:

பெபிடா சேத் எடுத்த வண்ணப்படம்— பூதமாக வேடம் தரித்துள்ள ஒரு கிராமவாசி.

''அதோ போறாரே அவர் ஒரு காலத்திலே எக்கச்சக்கமா லாட்டரி சீட்டு வாங்கினார்!''

''இப்போ என்ன செய்யறார்?''

''இப்போ லாட்டரி சீட்டு விற்கிறார்....!''

— அ. தெய்வசிகாமணி.



நிருபர்: உங்கள் கணவரை டைவர்ஸ் பண்ணப் போறீங்களாமே, உண்மையா?

நடிகை: யாரோ கிளப்பி விட்ட பொய்! நம்பாதீங்க. அவரைக் கல்யாணம் பண்ணிக்கலாமா வேண்டாமான்னுதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன்!

— சந்திரசேகர்.




புத்ரசோகம்
ஜீத்தாதம்பி
அறிமுக எழுத்தாளர்

போட்டிக் கதை — 3

ராமபாணத்தின் மகிமையால் லங்காபுரி அழிந்தது! ராமனும், இலக்குவணனும், ஜனக புத்ரியுடன் — அழிவுற்ற அந்த நகரம் விட்டு, சேது மார்க்கமாகவே வானராதி வீரர்களுடன், எத்தனையோ காத தூரம் கடந்து வந்தாகி விட்டது!

கிட்கிந்தாபுரி! வானரராஜன் வாலிக்குச் சொந்தமான, அழகிய மணி மண்டபங்கள் கொண்ட எழில் மிக்க நகரம்!

ஆம்; அது சுக்ரீவனாகிய அவனது தம்பிக்கு இப்போது சொந்தமாகத் திகழ்கிறது, ராமச்சந்திரனால்! வாலியின் மனைவி தாரை! அவளும்தான் இப்போது சுக்ரீவனுக்குப் பத்தினியாகிப் போனாள்!

ஆனால் அங்கதன்...? வாலியின் புத்திரனல்லவா அவன்!

தன் தந்தை அன்று ராமபாணத்தால் தாக்குண்டு, குற்றுயிரும், கொலையுயிருமாகக் கிடந்த அந்தக் கோரக் காட்சியைக் கண்ணாலே கண்டு, மனத்தாலே புலம்பி, அந்தப் புலம்பலால் உருவான மனோவிளைவுகளைத் தன் இதயப் பைக்குள்ளே தக்க வைத்து, வாழ்ந்து வரும் அவனுடைய நினைவுகள், இன்று மௌனமாகப் புகைய ஆரம்பித்து விட்டன!

பசுமரத்தாணியல்லவோ அன்று அவன் கண்ட அந்தக் கோரக் காட்சி!

"மகனே! அங்கதா! வா... போகலாம்!" — என்று பரிவோடு அழைத்தாள் அவனின் தாய் தாரை!

அங்கதன் தாயின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

அவளோ ஒரு யதார்த்தவாதியாகி நின்றாள்.

சிற்றப்பனாகிய சுக்ரீவனும் பரிவோடு அவனை நோக்கினான்! பலனில்லை! பிறகு மண்மகன் அங்கதனின் உச்சி முகர்ந்து, நல்லன பல சொல்லிச் 'செல் கண்ணே!' — என்றாள் தாரை.

மௌன சாகரத்துள் அங்கதனின் மனோநிலை லயித்து நின்றது.

பிறகு ஜாம்பவான், அதன்பின் ஆஞ்சநேயன், இன்னும் வானராதியர் பலர் என ஒருவர் பின் ஒருவர் — எத்தனை சொல்லியும், அத்தனையும் அவனது மன சாம்ராஜ்யத்துள் குடிகொள்ளாச் சொற்களாய் வீழ்ந்தன! இந்நிலை அறிந்த இலக்குவணன் ஏனோ ஏதும் சொல்லாதே இருந்து விட்டான் அப்போது.

ஆயினும், அங்கதனின் மனம் ஸ்தம்பித்தை விட்டு அசையவே இல்லை! அற்புத வீரனாகிய தன் தந்தையின் தோள் மீதும், மார் மீதும் தாவித் தாவி விளையாடிய அந்த நாட்களின் இனிய நினைவுகள் அவனது உள்ளத்தை நிமுட்டுகின்றன இன்று!

அன்று அரக்க சுபாவ சூரர்களாகிய மாயாவி, துந்துபி எனும் பயங்கரவாதிகளை, நேருக்கு நேர் நின்று, போர் செய்து வென்ற தன் தந்தையின் சுதாகமுற்சி அவன் கண்ணில் இத்தருணம் நிழலாடுகிறது!

மரணத்தருவாயில், நெஞ்சைத்துளைத்துச் செல்லாதபடிக்கு ராமபாணத்தையே தன் வலிமை மிக்க விரல்களால் பிடித்து நிறுத்திய தன் தந்தை, தசரத புத்திரனைக் கேட்ட கேள்விகள், அவன் உள்ளத்தில் உத்வேகங் கொண்டு புதிய நாத ஓங்கார ஒலி எழுப்புகிறது இப்போது!

இந்த ராமன் அன்று தன் தந்தையைக் காரணமின்றி மறைந்திருந்து தாக்கியதை, இன்று அவன் விஸ்தாரப் படுத்திப் பார்க்கின்றான்!

அன்று, 'அது ஏன்?' — என்று புரியாது தவித்த அவனுடைய பிஞ்சு மனம் அடைபட்டுப் போனது! இன்று அதன் காரணத்தை நன்றாகவே உணர்ந்தவனாகி நின்றான்!

தன் மனைவியைக் காப்பாற்ற இந்தத் தசரத ரத்தம், என் பிதாவின் மனைவியை ஏன் அமங்கலியாக்கியது?

குற்றமற்ற என் பெற்றவர்கள் இந்த ராமனுக்கு என்ன தீங்கு செய்தனர்? சீச்சீ... ஒரு ஜானகிக்காக எத்தனை கொலைகள்! எத்தனை பிரயத்தனம்!

ஆயிரமாயிரம் ஆதித்தியர்களுக்குக் கோடானு கோடி முறை 'காயத்ரி'களை இந்த ராமன் ஜெபித்தாலும், எனது துக்கமன்றோ அந்த மந்திர ஜெபத்திலும் மிதமிஞ்சி நிற்கும்!

அன்று அந்தக் கைகேயி இந்த ராமனுக்கே முடிசூட்டச் சம்மதித்திருந்தால், இந்த ராமனும் கானகம் வந்திருக்க மாட்டான்! ஜனக புத்ரியாகிய இந்தச் சீதாவும் உடன் வந்தி



ருக்க மாட்டான்! இந்த இலக்குவனனும் துணை வந்திருக்க மாட்டான்! அந்தச் சூர்ப்பணகையும் மூக்கிழந்திருக்க மாட்டாள்! அதுகண்டு அந்த லங்காபதியும் சினம் கொண்டிருக்க மாட்டான்! மாரீசன் மானாகி இருக்க மாட்டான்! மதி மயங்கிச் சீதையும் அதைக் கேட்டிருக்க மாட்டாள், ராமனிடம்!

புத்திர சோகத்தால் செத்தாராம் தசரத மகாராஜா! என் தந்தையின் மறைவால் என் நெஞ்சில் வளரும் சோகாக்னியை யாரே அணைப்பார்? எனது துயர மூச்சின் ஸ்பரிசத்தை யாரே உணர்வார்...? நான் கிட்கிந்தாபுரி விட்டு லங்காபுரி சென்றதே குற்றம்! மிருக தர்ம உணர்வோடே இருந்த என் உள்ளம், பாழும் இந்த மனித ஜீவிகளுடன் சேர்ந்திருந்த இந்தக் குறுகிய கால கட்டத்திற்குள், பட்டை தீட்டப்பட்டு இப்போது சோகத்தைக் குடியேற்றிக் கொண்டு விட்டதே!

இந்தப் பாழாய்ப் போன எனது சிற்றப்பனும், இந்த அயோத்திவாசியும் எத்தனை காலம் இனி இந்த மண்ணை ஆளப் போகிறார்கள்? மனைவியைப் பறி கொடுத்த இந்த அயோத்திக்காரன், கானக வழியில் வேறு பாதையில்போயிருக்கக்கூடாதா?

அட சண்டாளச் சிற்றப்பாவே! பந்தபாசம், ஒட்டு, உறவு இவற்றை மறந்து, உடன்பிறந்த சோதரனை உருக்குலைவு செய்ய, அனுமதித்துவிட்டாயே. நம் இன மூத்தோர்களை மையமாக வைத்துத் தீர்க்க வேண்டிய உனது சொந்தப் பிரச்னைக்காக, இந்த வழிதப்பி வந்த ராஜகுமாரர்களையா தஞ்சம் அடைய வேண்டும்?

அன்று அந்த ராவணபுத்திரன் விட்ட ஓர் அஸ்திரத்தால் தன் தம்பி மயக்கமுற்று வீழ்ந்தான் என்றதுமே, எப்படிப் பதறினான் இந்தராமன்! அதுவன்றோசகோதர பாசம்! அதுவன்றோ ரத்தபந்தம்! அதுவன்றோ சகோதர விசேஷம்! அதுவன்றோ உடன் பிறந்தான் உணர்வு!

சாதாரண மயக்க உணர்வுக்கே இந்த ராமன் அன்று லங்காபுரியில் துடித்த துடிப்பை நேரில் கண்ட பிறகுமா சிற்றப்பா உனக்குப் புத்தி வரவில்லை?

அன்று என் தந்தை இதே ராமனால், பாணம் பட்டுச் சாய்ந்த போது, நீ அடைந்த சந்தோஷம் என்ன கொஞ்சமா, நஞ்சமா...?

அன்று அங்கு தன் சகோதரனுக்காக, அவன் பட்ட சிறு துன்பத்துக்காகத் துடித்த ராமன், உன் சகோதரனுக்குச் செய்த வேறு ஓர் அதர்மம் மனுநீதியாக அனுஷ்டிக்கப்பட்டதே — இது என்ன நியாயம்? —

அன்றுதான் உனது மண்ணாசை கண் மறைத்து நின்றது! இன்றேனும் உனது கண்கள் காணக் கூடாதா? இமைகள் தான் விரியாதா?

லங்காபுரியில் ஒரு நீதி! கிட்கிந்தாபுரியில் ஒரு நீதி! மனிதகுணத்தின் கோணல் அறியாத ஏ... மிருக ராஜாவே! ஒரே ஒரு முறை, எனக்காக இல்லாது போனாலும், என் தந்தைக்காக இல்லாது போனாலும், உனது சகோதரனுக்காக, இறந்துவிட்ட அந்தத் தூய வீரனுக்காகவாவது சற்றுச் சிந்தித்துப் பார்!

சுயநலத்திற்காக ஒரு தூயாத்மாவை உன்னிடமிருந்துபிரித்த இந்த ராஜவம்ச மனிதர்களைப் பற்றி இந்த நேரத்திலேனும் ஒரு வினாடி சிந்தித்துப் பார்!

மிருகவாசிகளாகிய நம்மைப் பயன்படுத்தி இந்த மனித வாசிகள் தம் காரியத்தைப்பூர்த்திசெய்துகொண்டசாமர்த்திய யுக்தி இன்னுமா உனக்கு விளங்கவில்லை?

மிருகங்கள் யாவும் இந்த நிகழ்விற்குப் பின்தான் கொடூர நிலை அடைந்திருக்குமோ என எண்ணுகிறேன், சிற்றப்பா!

ஏ ராமா! அன்று என் தந்தை கேட்ட இம்சையான கேள்விக்கணைகள், நீ தொடுத்த அந்த ஒரு கணையை வெட்கப்பட வைத்தது! உனது ஆயிரமாயிரம் வியாக்யானங்களும், அன்று என் தந்தையின் அலட்சியப் பார்வையால் பொசுங்கியே போயின!

இதோ! நீ அன்று எனது தந்தையின் இரத்தத்தால் பெற்றுக் கொடுத்த இந்தக் கானகப் பகுதிகள் யாவும் இன்று என் சிற்றப்பனால் ஆளப்பட இருக்கின்றன!

இதோ நிற்கிறாளே எனது தாய் — என் தந்தையின் மனைவி, இனி எனது சிற்றப்பனோடு இணைந்து வாழப் போகிறாள்!

நீ உன் மனைவி ஜானகியுடன் உனது அயோத்தி நகருக்குச் சென்று பட்டாபிஷேகம் செய்து கொண்டு சுகமுற வாழப் போகிறாய்!

ஆனால்... நான்...? — நீ இட்ட அந்த அதர்ம அம்புக்கு இரையாகிப் போன எனது தந்தையின் நினைவால் ஓயாது, ஒழியாது, உண்ணாது, உறங்காது தவித்த உள்ளத்தோடே இருப்பேன். கீழான எனது சிற்றப்பன் ராஜ்யத்தின் மேலான கனிகளை, கேடு கெட்ட உணவாக எண்ணி, உண்ணாமலே இருப்பேன். மனம் நொந்து, உண்ணா நோன்பிருந்து உயிர்துறக்கமுடிவு செய்துவிட்டேன்!

அங்கதனின் ஸ்தம்பித்த மனம் அவனுள் எழுப்பிய எண்ணங்கள் ஆதங்கத்துடன் ஒரு பெருமூச்சாக அவனது நாசித்துளையிலிருந்து வெளிப்பாடு கொண்ட போது — அவனது இளமை மிக்க, ஒளி பொருந்திய கண்கள் இளம் வெந்நீரை உகுத்தன!

ராமனோ, தனது பிரிவின் துயரைத் தாளாமல்தான் அங்கதன் அழுகின்றானோ என எண்ணி, தன் விரல்களால் அவனது விழிநீரைத் துடைத்தபடி, தனது பாதங்களை அயோத்தி இருக்கும் திசை நோக்கித் திருப்பினான்!

ஜானகியும், இலக்குவனனும் பின் தொடரத் தயாரானார்கள்! இந்தப் புத்திரனின் சோகத்தை இனம் கண்டு கொள்ள முடியாதவர்களாகவே அந்த அயோத்திக்காரர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்!



daCunha/GCM/147/88/TAM

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 36

இருளில் ஓர் உருவம்

சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்ட சிறுவன் கொடுத்த வாளை நந்தினி வாங்கிக் கொண்டாள். அதை மார்போடு அணைத்துத் தழுவிக் கொண்டாள். பின்னர் அச்சிறுவனையும் தூக்கி எடுத்து அவனையும் சேர்த்து மார்புடன் அணைத்துத் தழுவிக் கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது.

மற்றவர்கள் சற்று நேரம் வரை இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றார்கள்.

ரவிதாஸன் முதலில் திகைப்பு நீங்கப் பெற்றுக் கூறினான்:—

"தேவி! சக்கரவர்த்தி நம்முடைய கோரிக்கையை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளாமல் தங்களிடம் வாளைக் கொடுத்து விட்டார். மறுபடியும் விளக்கமாகச் சொல்லி......"

நந்தினி அவனைத் தடுத்து நிறுத்தினாள். தழுதழுத்த குரலில் கூறினாள்:

"இல்லை, ஐயா, இல்லை! சக்கரவர்த்தி நன்றாய்ப் புரிந்து கொண்டுதான் வாளை என்னிடம் கொடுத்தார். என் கண்ணீரைப் பார்த்து நீங்கள் கலங்க வேண்டாம். வீரபாண்டிய சக்கரவர்த்தியின் படுகொலைக்குப் பழி வாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை நினைத்துக் களிப்பு மிகுதியினால் கண்ணீர் விடுகிறேன்!" என்றாள்.

"தேவி! யோசித்துப் பாருங்கள்! நாங்கள் இத்தனை பேர் ஆபத்துதவிப் படையினர் உயிரோடிருக்கும் போது..." என்று சோமன் சாம்பவன் தொடங்கியதை நந்தினி தடுத்து நிறுத்தினாள்.

"யோசிக்க வேண்டியதே இல்லை. அந்தப் பொறுப்பு என்னுடையதுதான். உங்களுக்கும் வேலையில்லாமற் போகவில்லை. உங்களில் பாதிப் பேர் சக்கரவர்த்தியைப் பத்திரமாகப் பஞ்சபாண்டவர் மலைக்குக் கொண்டு போய்ச் சேருங்கள். மற்றவர்கள் கடம்பூருக்கு வாருங்கள். சம்புவரையன் மாளிகைக்குள் வரக்கூடியவர்கள் வாருங்கள். மற்றவர்கள் வெளியில் சித்தமாகக் காத்திருங்கள். வேகமாகச் செல்லக் கூடிய குதிரைகளுடன் காத்திருங்கள். காரியம் வெற்றிகரமாக முடிந்த பின், கூடுமானால் எல்லாரும் உயிருடன் தப்பித்துச் செல்ல வேண்டும் அல்லவா?" என்றாள் நந்தினி.

ரவிதாஸன் முன்வந்து, "அம்மணி! ஒரு விஷயம் சொல்ல மறந்து போய் விட்டது. அதைச் சொல்ல அனுமதிக்க வேண்டும்" என்றான்.

"சொல்லுங்கள், ஐயா! சீக்கிரம் சொல்லுங்கள்! பழுவேட்டரையர் கொள்ளிடக்கரையில் நடக்கும் காளாமுகர்களின் மகா சங்கத்துக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வந்துவிடு

வதற்குள்ளே நான் அரண்மனை போய்ச் சேர வேண்டும்!'' என்றாள் நந்தினி.

''நமது முதற் பகைவன் ஆதித்த கரிகாலன் கடம்பூர் சம்புவரையன் மாளிகைக்கு வந்து சேர்வான் என்று சொன்னீர்கள் அல்லவா? அது அவ்வளவு நிச்சயமில்லை'' என்றான் ரவிதாஸன்.

''எந்தக் காரணத்தைக் கொண்டு அவ்விதம் சொல்கிறீர்!'' என்று கேட்டாள் நந்தினி.

''தகுந்த காரணத்தைக் கொண்டுதான் சொல்கிறேன். கடம்பூர் மாளிகைக்கு எக்காரணத்தைக் கொண்டும் வரவேண்டாம்என்று ஆதித்தகரிகாலனுக்கு ஓலை போகிறது. பழையாறை இளையபிராட்டியும் முதன் மந்திரி அநிருத்தரும் அவ்விதம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்......''

''அந்த விவரம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தீர்?''

''தெரிந்திருந்தும் அவன் கடம்பூருக்கு வருவான் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''ஆம்; அவசியம் எதிர்பார்க்கிறேன். ஆதித்த கரிகாலருடைய இயல்பு அந்தப் பழையாறைப் பெண் பாம்புக்குத் தெரியாது; அன்பில் பிரம்மராட்சதனுக்கும் தெரியாது; மாய மந்திர வித்தைகளில் தேர்ந்த உமக்குக் கூடத் தெரியவில்லை. எந்தக் காரியத்தையாவது செய்ய வேண்டாம் என்று யாரேனும் தடுத்தால், அதைத்தான் ஆதித்த கரிகாலர் கட்டாயமாகச் செய்வார். அது எனக்குத் தெரியும்; நிச்சயமாகத் தெரியும். ஆதித்த கரிகாலர் அருள்மொழி வர்மனைப் போன்ற எடுப்பார் கைப்பிள்ளை அல்ல. மதுராந்தகனைப் போன்ற பயங்கொள்ளிப் பேதை அல்ல. கடம்பூருக்கு வரவேண்டாமென்று தமக்கையும் முதன் மந்திரியும் செய்தி அனுப்பியிருப்பதனாலேயே கட்டாயம் ஆதித்த கரிகாலர் கடம்பூருக்கு வந்து சேருவார்!'' என்றாள் நந்தினி.

''தேவி! அதையும் தாங்கள் பூரணமாக நம்பியிருக்க வேண்டாம். அவர்கள் அனுப்பிய செய்தி காஞ்சிக்குப் போய்ச் சேராது!'' என்றான் ரவிதாஸன்.

''என்ன சொல்லுகிறீர், ஐயா! சற்று விளக்கமாகச் சொல்லும்!'' என்றாள் நந்தினி. அவளுடைய குரலில் இப்போது பரபரப்புத் தொனித்தது.

''தேவி! ஆதித்த கரிகாலனுக்குச் செய்தி யார் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும் தங்களுக்குத் தெரியுமா?'' என்று ரவிதாஸன் கேட்டான்.

''நிச்சயமாகத் தெரியாது; ஆனால் ஊகிக்க முடியும்.''

''நல்லது; ஊகிக்க வேண்டிய அவசியமில்லை. அவனை நாங்கள் பிடித்துக் கொண்டே வந்திருக்கிறோம். சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்தில் அவனும் இருந்தான். நம்முடைய இரகசியங்கள் எல்லாம் அவனுக்குத் தெரியும். அவனை மேலே உயிருடன் போக விடுவது நமக்கு நாமே சர்வநாசத்தைத் தேடிக்கொள்வதாகும். இடும்பன்காரி! எங்கே, அந்த ஒற்றனை இங்கே அழைத்துக்கொண்டு வா!'' என்றான் ரவிதாஸன்.

இடும்பன்காரி பள்ளிப்படைக் கோவிலை நோக்கிப் போனான். அவனுடன் இன்னும் இரண்டு பேரும் போனார்கள். நந்தினி அந்தத் திசையை உற்று நோக்கத் தொடங்கினாள். இத்தனை நேரமும் கடுகடுவென்று இருந்த அவளுடைய முகத்தில் இப்போது மறுபடியும் மோகனப் புன்னகை தவழ்ந்தது.

இடும்பன்காரியும் இன்னும் இரண்டு பேரும் வந்தியத்தேவனை நெருங்கினார்கள். அலுத்துச் சலித்துப்போய் அரைத் தூக்கமாக உட்கார்ந்திருந்த அந்த வீரன் மீது திடீரென்று பாய்ந்தார்கள். வந்தியத்தேவன் அவர்களோடு மல்யுத்தம் செய்யலாமா என்று ஒரு கணம் உத்தேசித்தான். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். என்னதான் செய்கிறார்களோ பார்க்கலாம் என்று சும்மா இருந்தான். ஒரு பெரிய கயிற்றினால் அவனுடைய கைகளைச் சேர்த்து உடம்போடு கட்டினார்கள். பிறகு அவனுடைய இரு தோள்களையும் இரண்டு பேர் பிடித்து நடத்தி அழைத்துக்

கொண்டு வந்து நந்தினியின் முன்னால் நிறுத்தினார்கள்.

வந்தியத்தேவன் நந்தினியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இப்போது தெரியவில்லை. அமைதி குடிகொண்டிருந்தது.

''ஐயா! மறுபடியும்......'' என்று ஆரம்பித்தாள்.

''ஆம், தேவி! மறுபடியும் வந்துவிட்டேன்! ஆனால் நானாக வரவில்லை!'' என்று சொல்லிச் சுற்றிலுமுள்ளவர்களை நோக்கினான்.

நந்தினியின் அருகில் இருந்த சிறுவன் ''அம்மா! இவன்தான் என்னை இருட்டில் பிசாசு விழுங்காமல் காப்பாற்றியவன். இவனை ஏன் கட்டிப் போட்டிருக்கிறது?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறுவனைப் பார்த்து ''குழந்தை! சும்மா இரு! பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே பேசக் கூடாது. பேசினால் உன்னைப் புலி விழுங்கி விடும்!'' என்றான்.

''புலியை நான் விழுங்கி விடுவேன்!'' என்றான் சிறுவன்.

''மீனால் புலியை விழுங்க முடியுமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

அவனைச் சுற்றிலும் இருந்தவர்களின் கண்டங்களிலிருந்து ஒரு பயங்கரமான உறுமல் சத்தம் வெளி வந்தது. அது வந்தியத்தேவனைக் கூட ஒரு கணம் மெய்சிலிர்க்கச் செய்தது.

ரவிதாஸன் உரத்த குரலில் ''தேவி! கேட்டீர்களா? இவனை இனி உயிருடன் தப்பிச் செல்ல விட முடியாது. முன் இரண்டு தடவைகளில் தங்கள் விருப்பத்துக்காக இவனை உயிருடன் தப்பிச் செல்ல விட்டோம். இனிமேல் அப்படி இவனை விட முடியாது'' என்றான்.

வந்தியத்தேவன், ''மந்திரவாதி! இது என்ன இப்படிப் பெரிய பொய்யாகச் சொல்லுகிறாய்? நீயா என்னை உயிருடன் விட்டாய்? நான் அல்லவா உன்னைத் தப்பிப் போக விட்டேன்? தேவி! இந்த மந்திரவாதியைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துச் சொல்லுங்கள்! இவன் உண்மையில் ரவிதாஸன் தானா? அல்லது ரவிதாஸனுடைய பிசாசா?'' என்று கேட்டான்.

ரவிதாஸன் பயங்கரமாகச் சிரித்தான். ''ஆம்; நான் பிசாசுதான்! உன்னுடைய இரத்தத்தை இன்று குடிக்கப் போகிறேன்'' என்றான்.

மீண்டும் அங்கிருந்தவர்களின் தொண்டைகளிலிருந்து பயங்கர உறுமல் குரல் வெளியாயிற்று.

இதற்குள் சிறுவன், ''அம்மா! இவனிடம் ஒரு நல்ல குதிரை இருக்கிறது. அதை எனக்குக் கொடுக்கச் சொல்லுங்கள்!'' என்றான்.

''குழந்தை! நீ என்னுடன் வந்துவிடு! உன்னை என் குதிரையின் மேல் ஏற்றி அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை நோக்கிக் கோரமாக விழித்து, ''அடே! வாயை மூடிக் கொண்டிரு!'' என்று சொல்லிவிட்டு, நந்தினியைப் பார்த்து, ''தேவி! சீக்கிரம் கட்டளையிடுங்கள்!'' என்றான்.

நந்தினி நிதானமாக ''இவர் எப்படி இங்கு வந்தார்? எப்போது வந்தார்?'' என்று கேட்டாள்.

''சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்திலிருந்து அவரை இந்த ஒற்றன் எடுத்துக் கொண்டு ஓடிவிடப் பார்த்தான். நல்ல சமயத்தில் போய் நாங்கள் தடுத்துப் பிடித்துக் கொண்டோம். ஒரு கணம் தாமதித்திருந்தால் விபரீதமாய்ப் போயிருக்கும்'' என்றான் ரவிதாஸன்.

''ஐயா! இவர்கள் சொல்வது உண்மையா?'' என்று நந்தினி கேட்டாள்.

''தங்களைச் சேர்ந்தவர்கள் உண்மை சொல்லக் கூடியவர்களா என்பது தங்களுக்குத்தானே தெரியும்? எனக்கு எப்படித் தெரியும், தேவி?'' என்றான் வந்தியத்தேவன்.

நந்தினியின் முகத்தில் தோன்றிய புன்னகை மின்னலைப் போல் மறைந்தது. அவள் ரவிதாஸனைப் பார்த்து,

''ஐயா! நீங்கள் எல்லாரும் சற்று அப்பால் சென்றிருங்கள். நான் இவரிடம் சில விஷயங்கள் தனியாகக் கேட்டு அறிய வேண்டும்!'' என்றாள்.

''தேவி! நேரம் ஆகிறது. அபாயம் நெருங்குகிறது. இந்த வேளையில்......'' என்று ரவிதாஸன் கூறுவதற்குள், நந்தினி கடுமையான குரலில், ''சற்று முன் நாம் செய்து கொண்ட நிபந்தனையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மறு வார்த்தை சொல்லாமல் உடனே அகன்று செல்லுங்கள். சக்கரவர்த்தியையும் அப்பால் அழைத்துப் போங்கள்!'' என்று கூறி, சிறுவனுடைய காதில் ''குமாரா! சற்று அவர்களுடன் நகர்ந்து போ! உனக்கு இவரிடமிருந்து குதிரை வாங்கித் தருகிறேன்'' என்றாள்.

ரவிதாஸன் முதலியவர்கள் பின்னர் மறு வார்த்தை பேசாமல் அந்தச் சிறுவனையும் அழைத்துக்கொண்டு அவசரமாக அப்பால் போனார்கள்.



நந்தினி வந்தியத்தேவனை இலேசான தீவர்த்தி வெளிச்சத்தில் ஊடுருவிப் பார்த்து, ''ஐயா! உமக்கும் எனக்கும் ஏதோ ஒரு துவந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது!'' என்றாள்.

''அம்மணி! அந்தத் துவந்தம் மிகப் பொல்லாததாயிருக்கிறது; மிகக் கெட்டியாகவும் இருக்கிறது. என் உடம்பையும் கைகளையும் சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

''உம்முடைய விளையாட்டுப் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள். வேண்டுமென்று இங்கு வந்தீரா! தற்செயலாக வந்தீரா?''

''வேண்டுமென்றும் வரவில்லை;



தற்செயலாகவும் வரவில்லை. தங்களுடைய ஆட்கள்தான் பலவந்தமாக என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். இல்லாவிடில், இத்தனை நேரம் கொள்ளிடக் கரையை அடைந்திருப்பேன்.''

''என்னைப் பார்க்கும்படி நேர்ந்ததில் உமக்கு அவ்வளவு கஷ்டம் என்று தெரிகிறது. என்னைப் பிரிந்து போவதற்கு அவ்வளவு ஆவல் என்றும் தெரிகிறது.''

''தங்களைப் பார்க்க நேர்ந்ததில் எனக்குக் கஷ்டம் இல்லை, தேவி! தங்களைப் பிரிந்து போவதற்குத்தான் உண்மையில் வருத்தமாயிருக்கிறது. தாங்கள் மட்டும் அனுமதி கொடுங்கள்; ஒரு பக்கத்தில் அந்தக் கிழட்டுப் பழுவேட்டரையரிடமும் இன்னொரு பக்கத்தில் இந்தப் பயங்கர மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டு தாங்கள் திண்டாடுகிறீர்கள். ஒரு வார்த்தை சொல்லுங்கள். இவர்களிடமிருந்தெல்லாம் தங்களை விடுதலை செய்து அழைத்துப் போகிறேன்.....

''எங்கே அழைத்துப் போவீர்கள்!''

''இலங்கைத் தீவின் காடுகளில் அநாதையைப் போல் அலைந்து கொண்டிருக்கும் தங்கள் அன்னையிடம் அழைத்துப் போய் விடுகிறேன்'' என்றான் வந்தியத்தேவன்.

நந்தினி ஏமாற்றம் தொனிக்க ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

''நானும் அப்படி அநாதையாக அலைய வேண்டும் என்று விரும்புகிறீரா? ஒரு வேளை அத்தகைய காலம் வந்தாலும் வரலாம். அப்போது அன்னையிடம் அழைத்துப் போக உம்முடைய உதவியை அவசியம் நாடுவேன். அதற்கு முன்னால், என்னுடைய எண்ணம் நிறைவேற வேண்டும். அது நிறைவேறுவதற்கு உதவி செய்வீரா?'' என்று கேட்டாள்.

''அம்மணி! தங்கள் மனத்திற் கொண்ட எண்ணம் என்னவென்று தெரிந்தால் அல்லவா அதற்கு உதவி செய்வதைப் பற்றி நான் சொல்ல முடியும்?'' என்றான் வந்தியத்தேவன்.

''உண்மையான பிரியம் உள்ளவர்கள் இப்படிச் சொல்ல மாட்டார்கள். என்

ணம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளாமலே அதை நிறைவேற்று வதற்கு உதவி செய்ய முன் வருவார்கள்.''

''பிரியமுள்ளவர்கள் சமயத்தில் எச்சரிக்கை செய்து ஆபத்திலிருந்து காப்பாற்ற முயல்வார்கள். அம்மணி! தங்களை இந்தக் கிராதகர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து பெரிய அபாயத்தில் சிக்க வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய காரியத்துக்கு உங்களை உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள்.....''

''நீர் கூறுவது தவறு! நான்தான் இவர்களை என்னுடைய காரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறேன்! இதை நீர் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளும்.''

''ஒரு சிறு குழந்தையை எந்தக் காட்டிலிருந்தோ பிடித்துக் கொண்டு வந்து தங்களை ஏமாற்றுகிறார்கள்....''

''குழந்தை எதற்காக என்று உமக்குத் தெரியுமா?''

''பாண்டியன் சிம்மாதனத்தில் ஏற்றி வைத்துப் பட்டம் கட்டுவதற்காக.....'' என்றான்.

''மறுபடியும் தவறாகச் சொல்கிறீர். பாண்டியன் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க மட்டும் அல்ல; துங்கபத்திரையிலிருந்து இலங்கை வரையில் பரந்து கிடக்கும் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாதனத்தில் அமர்த்தி முடி சூட்டுவதற்காக!''

''அம்மம்மா! யாருடைய உதவியைக் கொண்டு இந்த மகத்தான காரியத்தைச் சாதிக்கப் போகிறீர்கள்? இதோ சுற்றிலும் நிற்கிறார்களே? — இந்த நரிக் கூட்டத்தின் உதவியைக் கொண்டா? சோழ சாம்ராஜ்யத்தின் இருபது லட்சம் வீராதிவீரர்கள் கொண்ட மாபெருஞ் சேனையை, பகலில் வளைகளில் ஒளிந்திருந்து இரவு நேரத்தில் வெளிப்பட்டு வரும் இந்தப் பத்து இருபது நரிகளின் துணை கொண்டு வென்று விடுவீர்களா?''

''நான் இவர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை! இதோ என் கையிலுள்ள வாளை நம்பியிருக்கிறேன். இதன் உதவியினால் என் மனத்தில் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவேன்.''

''அம்மணி! அந்த வாளைத் தாங்கள் ஒருநாளும் உபயோகப்படுத்தப் போவதில்லை. அதற்கு வேண்டிய பலம் தங்கள் கையிலும் இல்லை; தங்கள் நெஞ்சிலும் இல்லை!''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்?''

''ஏதோ என் மனத்தில் தோன்றியதைக் கூறினேன்.''

''நீர் சொல்வது முற்றும் தவறு என்று இந்த இடத்திலேயே என்னால் நிரூபித்துக் காட்ட முடியும்.''

''அப்படியானால் நான் பாக்கியசாலிதான். தங்கள் திருக்கரத்தினால் வெட்டுப்பட்டுச் சாவதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா?'' என்று கூறி வந்தியத்தேவன் வெட்டுப்படுவதற்கு ஆயத்தமாவது போல் கழுத்தை வளைத்துத் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''என் திருக்கரத்தினால் வெட்டுப்படுவதற்குத் தானா ஆசைப்படுகிறீர்? கிரீடம் சூட்டப்படுவதற்கு விரும்பவில்லையா?'' என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நிமிர்ந்து பார்த்து, ''தங்கள் வசமுள்ள கிரீடத்தை எத்தனை பேருக்குத்தான் சூட்டுவீர்கள்?'' என்று வினவினான்.

''அது என்னுடைய இஷ்டம். முடிவாக யாருக்குச் சூட்ட வேண்டுமென்று பிரியப்படுகிறேனோ, அவருடைய சிரஸில் சூட்டுவேன்.''

''அப்படியானால், இந்தச் சிறு பிள்ளையின் கதி என்ன ஆவது?''

''அவனுக்கு முடி சூட்டுவதும் சூட்டாததும் என் இஷ்டந்தானே?''

''தேவி! தங்களுக்கு யாருக்கு இஷ்டமோ அவருக்கு முடி சூட்டுங்கள். எனக்கு வேண்டியதில்லை.''

''ஏன்?''

''என்னுடைய சிரஸிலுள்ள சுருட்டை மயிரின் அழகைப் பற்றிப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். கிரீடம் வைத்துக் கொண்டு அந்த அழகைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை.''

''உமது வேடிக்கைப் பேச்சை நீர் விட மாட்டீர். நல்லது, ஐயா! பொன்னியின் செல்வன் கடலில் விழுந்து இறந்த செய்தியைக் கேட்டதும்

இளைய பிராட்டி என்ன செய்தாள்? ரொம்ப துக்கப்பட்டாளா?'' என்று நந்தினிதிடீரென்று பேச்சை மாற்றிக் கேட்டாள்.

வந்தியத்தேவன் சிறிது திகைத்து விட்டு, ''பின்னே, துக்கமில்லாமல் இருக்குமா? ஸ்திரீகள் எல்லோருமே இதயமற்றவர்களாக இருப்பார்களா?'' என்றான்.

''அந்தக் கொடும்பாளூர்ப் பெண் ஓடையில் விழுந்து உயிரை விடப் பார்த்தாளாமே? அது உண்மையா? அவளை யார் எடுத்துக் காப்பாற்றினார்கள்?'' என்று கேட்டாள்.

உடனே வானதிக்கு நேர்ந்த ஆபத்தைக் குறித்து வந்தியத்தேவனுக்கு ஞாபகம் வந்தது. அவளுடைய கதி என்ன ஆயிற்றோ என்ற நினைவில் மூழ்கி வந்தியத்தேவன் கேள்விக்குப் பதில் சொல்லாமலிருந்தான்.

நந்தினி குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு ''சரி; அதையெல்லாம் பற்றி நீர் ஒன்றும் சொல்ல மாட்டீர். எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலர் கடம்பூர் மாளிகைக்கு வராதபடி நீர் தடுக்கப் போகிறீரா?'' என்று கேட்டாள்.

''தடுப்பதற்குப் பிரயத்தனம் செய்வேன்'' என்றான் வந்தியத்தேவன்.

''உம்மால் அது முடியாது என்று நான் சொல்லுகிறேன்.''

''என்னால் முடியும் என்று நானும் சொல்லவில்லை, தேவி! பிரயத்தனம் செய்வேன் என்றுதான் சொன்னேன். இளவரசர் ஒன்று செய்ய நினைத்து விட்டால், அதை மாற்றுவது எளிதன்று.''

''ஆதித்த கரிகாலரின் இயல்பை நீர் நன்றாய் அறிந்து கொண்டிருக்கிறீர்.''

''என்னைவிட அதிகமாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள்.''

''நல்லது; நான் எவ்வளவுதான் சொன்னாலும் நீர் என் கட்சியில் சேர மாட்டீர். என் எதிரியின் கட்சியில்தான் இருப்பீர். அப்படித்தானே?''

''அம்மணி! தங்கள் எதிரி யார்?''

''என் எதிரி யார்? பழையாறை இளவரசி தான்! வேறு யார்?''

''அது தங்கள் மனோ கற்பனை! தேவி! தங்களுக்கு ஒரு உண்மையை, முக்கியமான உண்மையை, தெரிவிக்க விரும்புகிறேன்.....''

''போதும், போதும்! நீர் உண்மை என்று சொல்ல ஆரம்பித்தால் அது வடி கட்டின கோட்டைப் பொய்யாயிருக்கும். எனக்குத் தெரியாதா? உமது உண்மையை நீரே வைத்துக் கொள்ளும்!'' என்று நந்தினி குரோதத்துடன் கூறிவிட்டு, கையைத் தட்டினாள். ரவிதாஸன் முதலியவர்கள் உடனே நெருங்கி வர ஆரம்பித்தார்கள்.

வந்தியத்தேவன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தான் சரியாக உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்தான். இந்த ராட்சஸி என்னைக் கொன்று விடும்படி தான் இவர்களுக்குக் கட்டளையிடப் போகிறாள். கடவுளே! எத்தகைய சாவு! போர்க்களத்தில் எதிரிகளுடன் போராடி வீர மரணம் அடையக் கூடாதா? இப்படியா என் தலையில் எழுதியிருந்தது?

ரவிதாஸன் கோஷ்டியார் அருகில் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

இரையை நெருங்கிய ஓநாய்க் கூட்டம் உறுமுவது போல் அவர்கள் உறுமிக் கொண்டிருந்தார்கள்.

''ராணி! தாங்கள் என்னதான் சொன்னாலும் இவன் வழிக்கு வர மாட்டான் என்று எனக்குத் தெரியும். தாங்கள் உடனே புறப்படுங்கள். இவனை நாங்கள் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் பலி கொடுத்து விட்டுக் கிளம்புகிறோம்'' என்றான் ரவிதாஸன்.

''மந்திரவாதி! ஜாக்கிரதை! என்னுடைய விருப்பம் அதுவன்று. இவரை உங்களில் யாரும் எதுவும் செய்யக் கூடாது. இவரை எவனாவது தொட்டால் அவனை நானே இந்தக் கத்தியினால் வெட்டிக் கொன்று பழி வாங்குவேன்!'' என்று நந்தினி கர்ஜித்தாள்.

ரவிதாஸன் முதலியோர் திகைத்து நின்றார்கள்.

''இவரால் எனக்கு இன்னும் பல காரியம் ஆகவேண்டியிருக்கிறது. தெரிகிறதா? நான் இதோ புறப்படுகிறேன். நீங்களும் புறப்படுங்கள்

இவர் அவருக்கு விருப்பமான வழியில் போகட்டும். யாரும் இவரைத் தடை செய்ய வேண்டாம்!'' என்றாள் நந்தினி.

ரவிதாஸன் ''தேவி! ஒரு விண்ணப்பம்! தங்கள் சித்தப்படி செய்யக் காத்திருக்கிறோம். ஆனால் இவனிடம் குதிரை இருக்கிறது. இவனை முதலில் போக விடுவது நல்லதா? கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள்!'' என்றான்.

''நல்லது; இவரை அந்தப் பள்ளிப் படைக் கோவில் தூணுடன் சேர்த்துக் கட்டி விடுங்கள். கட்டை அவிழ்த்துக் கொண்டு புறப்பட இவருக்குச் சிறிது நேரம் ஆகும். அதற்குள் இந்தப் பள்ளிப்படைக் காட்டை நீங்கள் தாண்டிப் போய் விடலாம்'' என்றாள்.

வந்தியத்தேவன் பள்ளிப்படைத் தூணுடன் சேர்த்துக்கட்டப்பட்டிருந்தான். சற்றுத் தூரத்தில் அவன் குதிரை ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது.

நந்தினி பல்லக்கில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

சிம்மாதனத்தை இரண்டு ஆட்கள் தூக்கிச் சென்றார்கள்.

ரவிதாஸன் கோஷ்டியார் சிறுவனை அழைத்துக் கொண்டு விரைந்து போய் விட்டார்கள்.

அவர்களுடன் சென்ற தீவர்த்தியின் வெளிச்சமும் சிறிது சிறிதாக மங்கி மறைந்து விட்டது.

வந்தியத்தேவனைச் சுற்றிலும் கன்னங்கரிய காரிருள் சூழ்ந்தது.

சிறிது நேரத்துக்கு முன்னால் அங்கு பார்த்த காட்சிகள், நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கனவோ எனத் தோன்றியது.



இருட்டில் ராட்சத வௌவால்கள் சடபடவென்று தங்கள் அகன்ற சிறகுகளை அடித்துக் கொண்டன.

ஊமைக் கோட்டான்கள் உறுமின.

நரிகள் அகோரமான குரலில் முறை வைத்து ஊளையிட்டன.

ஊளையிட்டுக் கொண்டே அவை நெருங்கி நெருங்கி வருவது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

காட்டில் இனந் தெரியாத உருவங்கள் பல நடமாடின.

கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட கனவு நினைவுக்கு வந்தது.

ஆயிரம் நரிகள் வந்து தன்னைச் சூழ்ந்து கொண்டு பிடுங்கித் தின்னப் போவதாக எண்ணி நடுங்கினான்.

அவசர அவசரமாகக் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ளப் பார்த்தான். இலேசில் அக்கட்டுக்கள் அவிழ்கிற விதமாகத் தெரியவில்லை.

வெளிச்சம் இருந்தால் கட்டுக்களை அவிழ்ப்பது சிறிது சுலபமாயிருக்கும்.

ஆனால் வெளிச்சம் என்ற அறிகுறியே அங்கு இல்லை.

மின்னல் வெளிச்சமும் இல்லை; மின்மினி வெளிச்சங்கூட இல்லை.

வானத்தில் ஒருவேளை மேகங்கள் அகன்று நட்சத்திரங்கள் தோன்றியிருந்தாலும் அவற்றின் வெளிச்சம் அந்தக் காட்டுக்குள் நுழைய இடமில்லை.

ஆகா! அது என்ன சத்தம்?

காட்டில் எத்தனையோ ஜந்துக்கள் நடமாடும். அதில் என்ன அதிசயம்?

இல்லை; இது மனிதனுடைய காலடிச் சத்தம் மாதிரி இருக்கிறதே!

குதிரை இலேசாகக் கனைத்தது. கால்களை மாற்றி மாற்றி வைத்து அவஸ்தைப்பட்டது. ஒருவேளை புலி, கிலி வருகிறதா என்ன?

வந்தியத்தேவன் கட்டை அவிழ்க்க அவசரப்பட்டான். பயனில்லை.

அதோ ஒரு உருவம். அந்தக் காரிருளில் ஒரு கரிய நிழல் போன்ற உருவம். மனித உருவமா? அல்லது.... வேறு என்னவாயிருக்க முடியும்?


அது நெருங்கி நெருங்கி வந்தது.

வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தைப் பெற்றிடுவீர் !


வாய் துர்நாற்றம் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. சுவாசம் சுத்தமாக, புத்துணர்ச்சியுடன் திகழவும், பற்கள் உறுதியாக, ஆரோக்கியமாக விளங்கவும் முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்யுங்கள். அதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.



பற்களுக்கிடையே சிக்கிக் கொள்ளும் உணவுத் துணுக்குகளில் பாக்டீரியா வளர்ந்து, வாய் துர்நாற்றத்திற்கும் பற்சிதைவுக்கும் காரணமாகிறது.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயலாற்றல் மிக்க நுரை ஆழமாகச் சென்று, துர்நாற்றம் உண்டாக்கும் உணவுத் துணுக்குகளையும், பற்சிதைவை ஏற் படுத்தும் பாக்டீரியாவையும் நீக்குகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்வதனால், சுத்தமான, புத்துணர்ச்சிமிகு சுவாசத்தையும், உறுதிமிகு, ஆரோக்கிய மான பற்களையும் பெற்றிடுவீர்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !

Rediffusion/CP/5707 f TM

முயற்சி + பயிற்சி =

முன்னேற்றம்

நீங்கள் உங்களுடைய நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் "உங்களில் எத்தனைபேர் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறீர்கள்?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உடனே அனைவரும் கையை உயர்த்துவார்கள். ஏனென்றால் இவ்வுலகில் முன்னேற விரும்பாதவர்கள் எவரும் இல்லை.

அடுத்ததாக "உங்களில் முன்னேறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனைபேர்? என்று மற்றொரு கேள்வியைக் கேளுங்கள். முதற்கேள்விக்கு சட்டென கையை உயர்த்தியவர்கள் இப்பொழுது என்ன பதிலளிக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பெரும்பாலானவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார்கள் ஆனால் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதில்லை. உதாரணமாக நம்மில் பலர் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறோம். விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? அவ்விருப்பத்தை நிறைவேற்றும் வழி என்ன என்று யோசித்து, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு முறையான பயிற்சி பெறவேண்டுமல்லவா?

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இக்கல்வி நிலையம் அளிக்கும் ஓர் எளிய பயிற்சியை மேற்கொண்டால் நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாடவும் இலக்கண பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு."

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை இன்றே ஒரு தபால் கார்டில் எழுதி "விவேகானந்தா கல்வி நிலையம் (Regd.) 9, மேட்லிரோடு, தி. நகர், சென்னை 17. என்ற முகவரிக்கு அனுப்புங்கள் உடனே நாங்கள் இப்பயிற்சி பற்றிய மற்ற தகவல்களை அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முயற்சியும் எங்களது முறையான பயிற்சியும் இணைந்தால் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது, நீண்ட நாளைய விருப்பம் நிச்சயம் நிறைவேறும்.

Ambition without Effort is Like a Bird without wings.

வந்தியத்தேவன் தன்னுடைய மனோ தைரியம் முழுவதையும் சேகரித்துக் கொண்டான்.

தன்னுடைய தேகத்தின் பலம் முழுவதையும் காலில் சேர்த்துக் கொண்டான்.

ஓங்கி ஒரு உதை விட்டான்!

'வீல்' என்ற சத்தமிட்டுக் கொண்டு அந்த உருவம் பின்னால் தாவிச் சென்றது.

சிறிது தூரம் பின்னால் சென்றதும் "டணார்" என்று ஒரு சத்தம். பள்ளிப்படைச் சுவரில் அது மோதிக் கொண்டது போலும்!

பின்னர் அங்கேயே அந்த உருவம் சிறிது நேரம் நின்றது. பள்ளிப் படைச் சுவரில் சாய்ந்து கொண்டு நிற்பதாகத் தோன்றியது.

இருட்டில் விவரம் தெரியா விட்டாலும் அந்த உருவம் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

கட்டுக்களை அவிழ்த்துக் கொள்வதற்கு மேலும் அவசரமாக அவன் முயன்றான். அந்த மந்திரவாதிப் பிசாசுகள் இவ்வளவு பலமாக முடிச்சுக்களைப் போட்டு விட்டன! ஆகட்டும்; மறு தடவை அந்த ரவிதாஸனைப் பார்க்கும் போது சொல்லிக் கொடுக்கலாம்!

அந்த உருவம் இடம் விட்டுப் பெயர்ந்தது. பள்ளிப் படைக்குள்ளே போவது போலத் தோன்றியது.

சிறிதுநேரத்துக்கெல்லாம்பள்ளிப் படைக் கோவிலுக்குள் கூழாங் கற்கள் மோதுவது போன்ற 'டண்' 'டண்' சத்தம் சில முறை கேட்டது.

கோவில் வாசலில் வெளிச்சம்.

அதோ அந்த உருவம் கையில் ஒரு சுளுந்தைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்கு வெளியே வருகிறது.

தன்னை நோக்கி வருகிறது.

அது ஒரு காளாமுக வீர சைவனின் உருவம். நீண்ட தாடியும் சடை முடியும் மண்டை ஓட்டு மாலையும் அணிந்த பயங்கரமான உருவம்.

வந்தியத்தேவன் அருகில் வந்து வெளிச்சத்தைத் தூக்கிப் பிடித்து அவனை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது.

(தொடரும்)

அருள்வாக்கு



'எல்லா உயிர்களும் ஒன்றே; எல்லாவற்றிலும் ஈசுவரன் இருக்கிறான்' என்று ஒருத்தன் உணர்கிற போதுதான் அவனுக்கு அருள் உண்டாகிறது. இவன் தன் மனுஷ்யர்களுடன் ஸமமான நிலையில் இருந்து கொண்டு பிரியம் காட்டுவதைவிட இன்னும் ஒருபடி கீழே இறங்கி, தன்னைக் குறைத்துக் கொண்டு, மற்றவனை ஈசுவரனாக நினைத்து, தான் ஸேவை செய்கிறான். "நைச்சியம்" என்று இதை வைஷ்ணவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். தன்னைத் தாழ்ந்தவனாக, நீசனாக நினைத்து, இன்னொருத்தனுக்கு ஸேவை செய்வதுதான் "நைச்சியம்." இப்படி இவன் தன்னைக் குறைத்துக் கொள்கிற போதுதான் இவனுடைய அன்பு வெறும் பேச்சாக, எண்ணமாக மட்டுமில்லாமல் அதற்குக் காரிய ரூபத்திலேயே தெய்விகமான சக்தி உண்டாகி, அது 'அருளாக' ஆகிவிடுகிறது. கொஞ்சம்கூட மமதையே இல்லாமல் 'நாம் பெரியவர், உபகாரம் பண்ணுகிறோம்' என்ற அகந்தையே இல்லாமல் இவன் ஸமஸ்தப் பிராணிகளிடமும் ஈசுவர ஆராதனையாக அன்பைச் செலுத்துகிற போது அதுவே இவனை ஸகல பிராணிகளுக்கும் மேலே உயர்த்திவிடுகிறது. இவனுடைய அன்பு வெறும் பேச்சாகவும் எண்ணமாகவும் மட்டுமில்லாமல் காரியத்திலேயே ஈசுவராநுக்ரஹத்தை வாங்கித் தரக்கூடிய அருட் சக்தியைப் பெற்று விடுகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஏழு வருடங்கள் வங்கியின் ஒரு சிறிய கிளையில் வேலை பார்த்தபின், அதன் அன்பான குடும்பச் சூழ்நிலையை விட்டு, முந்நூறு பேர் கொண்ட எங்கள் மெயின் ஆபீஸுக்கு மாற்றல் ஆன பொழுது நான் கொஞ்சம் பயந்தேன். யார் எப்படி இருப்பாரோ எனப் பழகத் தயங்கினேன். அங்குதான் வாசுதேவன் சாரைச் சந்தித்தேன். எங்கள் 'ஃபாரின் எக்ஸ்சேஞ்ச்' பிரிவின் தலைவர் அவர். ஓர் அதிசய மனிதர்.

மிதமான உயரம், சிவந்த நிறம். இலேசாக நரை இழையோடிய சுருள்முடி. சிவந்த உதட்டுக்குள் பளீரென வரிசைப் பற்கள், பளபளக்கும் கண்கள், கட்டான உடல்வாகு. வயிறும் முதுகும் ஒட்டியவாறு ஜம்மென்று உடுத்துவார். ஷூவில் முகம் பார்க்கலாம். எப்பவாவது அருகிலிருந்து வேலை பார்க்க நேர்ந்தால் அவர் கை நகங்களையே பார்ப்பேன். அப்படியே ரோஜாத் துண்டுகளாக இருக்கும்.



சுத்தம், ஆரோக்கியம், கம்பீரம், ரசனையுடன் உடை இவை ஒன்று சேர்ந்தால் அவன் ஒரு முழு மனிதன்தானே.

ஆள் அழகு மட்டுமல்ல, அறிவும் கொழுந்து விட்டு எரியும். செம்பூரில் அவர் வீடு என் வீட்டுப் பக்கம், அதனால் ஒரே பஸ்ரூட்தான். அவர் பேசுவதைக் கேட்பதற்காகவே நான் சற்று முன் கூட்டியே கிளம்பி விடுவேன். பஸ் கிளம்பப் பத்து நிமிடங்கள் இருக்கையிலேயே பதற்றமில்லாமல் ஏறி, கண்களால் எல்லோரையும் அளந்தபடி உட்காருவார். தினமும் மூன்று பேராவது 'ஆடியன்ஸ்' உண்டு.

கண்டக்டர் நுழைந்தவுடன் மலர்ந்த புன்னகையுடன் 'நமஸ்கார்' எனச் சுத்த மராத்தியில் விளித்து டிக்கெட் எடுப்பார். சுற்றியிருக்கும் மூன்று பேர், கூட வேலை பார்க்கும் எனக்கும், இன்னொரு பையனுக்கும் சேர்த்துத் தானே டிக்கெட் எடுப்பார். குறைந்தது பன்னிரண்டு ரூபாய் அவுட். பிறகு ஸீட்டில் சாய்ந்துகொண்டு பேசத் தொடங்குவார். இன்ன விஷயம் என்பதில்லை. விளையாட்டில் ஆரம்பித்து விலைவாசிவரை, இலக்கணத்தில் தொடங்கி இன்னிசை வரை.... எந்த சப்ஜெக்ட் ஆனாலும் அவர் ஆதிக்கம் தான். அலசு அலசு என்று அலசுவார். மற்றவர்கள் எப்பவாவது வாயைத் திறந்தாலும் ஒரு முனகலான வாக்கியத்தோடு முடித்துக் கொள்வார்கள். சூரியன் முன் தாரகைகள் எப்படி ஒளி வீச முடியும்..?

''மனுஷனுக்கு என்னய்யா தேவை? உண்ணச் சாத்விகமான உணவு, பருக நல்ல நீர், சுவாசிக்கச் சுத்தமான காற்று, படுக்க ஒரு பாய், மேலே கூரை.... எனக்குத் தேவை கொஞ்சம் அதிகம். நாலு தடவை வெத்தலை போடுவேன். மற்றபடி நானும் சாதாரண ஆசைகளுடைய சராசரி மனிதன்தான். மனிதனின் அடிப்படைத் தேவைகள் மிகச் சாதாரணமானவையே. பாக்கியெல்லாம் வெளிப்பூச்சு. ஊரானை 'இம்பெரஸ்' செய்ய அவனாகப் பூட்டிக் கொள்ளும் விலங்குகள். இந்தப் போலி ஆசைகள் இல்லாதவனே தன்னை வென்றவன்.'' என்று விரக்தியாக ஒருநாள் பேசுவார்.

''ஸ்போர்ட்ஸ், அவுட்டோர் ஆக்டிவிடி இல்லாமல் வாழ்வதில் அர்த்தமேயில்லை. உடம்பு வளர்ந்தாத்தான் அறிவு வளரும். நம்ம நாட்டில் இள வயதில் ஆரோக்கியத்தைக் கவனிக்க மாட்டார்கள். முப்பது வயது வரை சோனி மாதிரி இருப்பான். கல்யாணமாகும். மனைவியைத் திருப்திப் படுத்த நன்றாகச் சாப்பிடுவான். கொஞ்சம் ஊதுவான், தொந்தி போடும். பெண்டாட்டி சமையலில் பருத்துவிட்டான் எனத் தாய் பூரிப்பாள், இல்லை குத்திக் காட்டுவாள். மெதுவாக ஊதிக் கொண்டே வியாதியை

பானுகுமார்

நோக்கிச் செல்வான். வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலும் உடலைப் பாதுகாக்கப் பிரயத்தனமே பண்ண மாட்டான். இள வயதில் படிப்பு, பிறகு வேலை, அப்புறம் கேட்டால் வயசாகிவிட்டது. என்னைப் பாருங்கள். நாற்பத்தைந்து வயதாகிறது. தினமும் மூன்று கிலோமீட்டர் ஓடுகிறேன். அரைமணி எக்ஸர்ஸைஸ் செய்கிறேன். இந்தப் பசங்களை என்னிடம் கொண்டு வாருங்கள். நான் பயிற்சி தருகிறேன். எலும்பை உடைக்காமல், வளைய வைப்பேன்.''

பேச்சில் மட்டுமல்ல, சார் ஆபீஸ் வேலையிலும் புலி. அவருக்குத் தெரியாத வேலையேயில்லை. சட்டங்கள் அத்தனையும் அத்துபடி. யாருக்கும் பயப்படமாட்டார். வாடிக்கையாளர்கள் அனைவரும் இவரைத் தேடி வருவார்கள். இவரும் அவர்கள் வேலையை உடனே முடித்துக் கொடுப்பார். கனிவாகப் பேசுவார். யார் வந்தாலும் காப்பி டீ தராமல் அனுப்பமாட்டார்.

கூடப்பணியாற்றும்எல்லோரிடமும்வயது வித்தியாசம், உத்தியோகக் கெடுபிடி பார்க்காமல் பழகுவார். லஞ்ச் ப்ரேக்கிலும், ஆபீஸ் முடிந்தபிறகும் பலருக்கு பேங்க் பரீட்சைக்குப் பாடம் சொல்லித் தருவார். ஆங்கில இலக்கணத்தை அவர் சொல்லிக் கொடுக்கும் அழகு ஒன்றே போதும். மரமண்டைக்குக் கூடப் புரிந்துவிடும்.

''யாருக்காவது ஏதாவது கற்றுக் கொள்ளவேண்டுமா? அவர்களை என்னிடம் கொண்டு வாருங்கள். கற்றுக் கொடுப்பது என்பது பாடம் படிப்பது மாதிரி. வித்தை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கொடுக்க வளரும்'' என்பார்.

எனக்கு அவர் பேச்சு மிகவும் பிடிக்கும். எனக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும்தான்.

“என்னிடம் கொண்டுவாருங்கள்”



'எல்லோரையும் சந்தோஷப் படுத்தும் இவரது சொந்த வாழ்க்கை ஒரு டிராஜடி தெரியுமா' என என் தோழி ஆரம்பித்தாள்.

"இவர் அறிவுக்குப் பொருத்தமேயில்லாத ஒரு மனைவி வாய்த்திருக்கிறாள். முகத்தில் சாதுவா மக்கா என்பது தெரியாத ஒரு பாவம். ஒரே பிள்ளை. அதுவும் இவரைக் கொண்டு பிறக்கவில்லை. அஜ மக்கு. பாவம்! இவருக்கு இப்படி வாய்க்க வேண்டாம். என்ன செய்வது? வாழ்க்கையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதில்லையே."

இதைக் கேட்டதிலிருந்து எனக்கு அவர் மேல் பரிதாபம் ஏற்பட்டது. அந்தப் பச்சாதாபத்தால் அவரை நோக்கி இன்னும் ஆகர்ஷிக்கப் பட்டேன். மனித புத்தியின் வக்கிரமே இது தான்.

சார் நாலு நாட்களாக ஆபீஸ் வரவில்லை. உடம்பு சரியில்லை என்று போன் வந்தது. என்னவென்று பார்த்துவிட்டு வரலாமென்று அவர் வீட்டிற்குச் சென்றேன். சிறிது நேரம் குசலம் விசாரித்தேன். அவர் மனைவி காப்பி கொண்டு வந்தாள். பழைய நூல்புடைவை, கழுத்திலும் கையிலும் ப்ளாஸ்டிக் நகைகள், ஆனால் முகத்தில் எல்லோரும் சொன்னதுபோல் அசட்டுக் களையில்லை. ஓர் அமைதியான பாவம் இருந்தது. ஏதாவது பேசலாமென்றால், சார் என்னை அறிமுகம் செய்து வைக்கவில்லை. லேசாகச் சிரித்தேன். சிறிது நேரம் சாருடன் பேசி விட்டுக் கிளம்பும் பொழுது உள்ளே எட்டிப் பார்த்தேன். அவள் சமையலறை வாசலில் நின்றிருந்தாள். ஓர் அசட்டுச் சிரிப்புடன் கையை அசைத்தேன். பதிலுக்குக் கையசைத்தாள்.

மறுபடியும் சார் வீட்டிற்கு நான் செல்ல நேர்ந்தது மூன்று மாதங்கள் கழித்துத்தான் சார் ட்ரெயினிங்குக்காக இரண்டு வாரம் கல்கத்தா போயிருந்தார். அவர் பெயருக்கு ஆபீஸ்க்கு வந்த கடிதங்களைக் கொடுக்க அவர் வீட்டிற்குச் சென்றேன். அவர் மனைவி காப்பி தந்தாள்.

ஏதோ பேசணுமே என்பதற்காக... "சார் இல்லாமல் ஆபீஸ் கலகலப்பாகவேயில்லை. அவர் பேச்சைக் கேட்க எங்கள் காதுகள் ஏங்கிப் போய்விட்டன. என்ன அழகாய்ப் பேசுவார்!" — சாரின் அருமை தெரியாத அவளுக்குக் கொஞ்சம் உறைக்கட்டும் என்று சொன்னேன்.

"எனக்குத் தெரியாதா. அவர் பேச்சைப் பற்றி. அதைக் கேட்டு மயங்கிக் கழுத்தை நீட்டியவள்தானே. கல்யாணமான பிறகு தான் சுயரூபம் தெரிந்தது. மணமான புதிதில் அதீத உற்சாகத்தால் பேசி நான் வாங்கிக் கட்டிக் கொண்ட வசவுகள் எத்தனையோ. அவருக்கு நான் எதிலும் கலந்துரைப்பதோ, பேசுவதோ எதுவும் பிடிக்காது. பெண்கள் சமையற்கட்டோடு நிற்க வேண்டும் என்பார். மெதுவாகச் சுருங்கிச் சுருங்கி நத்தை ஓட்டுக்குள் ஒளிவதுபோல நான் இந்தச் சமையலறையில் ஒடுங்கிவிட்டேன்."

என்னால் நம்ப முடியவில்லை. கூடப் பணியாற்றும் பல பெண்களை ஊக்குவிக்கும் சாரா இப்படி? ஒருவேளை அவர்கள் படிப்புக்கு மதிப்பு தருகிறாரோ?

"என்னைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். நான் அறிவில் அவருக்கு ஈடு இல்லை என்று தானே. நானும் எம். ஏ. படித்தவள்தான். 'கோல்ட்மெடலிஸ்ட்'. ஆனால் அதுஎனக்கே ஞாபகமில்லை. ஏதோ போன ஜன்மத்தில் நடந்தது போல் இருக்கிறது. ஓசிக் காப்பி கிடைக்கிறது என்று இவர் பேச்சை ஓங்கி ரசிக்கும் கூட்டத்துக்கு என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாது. நான் காப்பியே குடிப்பதில்லை, தெரியுமா! கட்டுப்படியாகவில்லை. இவருக்கு நல்ல சம்பளம்தான். ஆனால் போலி கௌரவத்துக்காகத் தாம் தூம் என்று செலவழிப்பதால் வீட்டு பட்ஜெட்டில் துண்டு விழுகிறது. நானும் முடிந்தவரை சமாளிக்கப் பார்க்கிறேன். வேலைக்காரி கூட வைத்துக் கொள்ளாமல் எல்லா வேலைகளையும் நானே செய்கிறேன். ஆனாலும் முழி பிதுங்கி விடுகிறது."

"ஆனால் சாரைப் பார்த்தால்.... அவர் போடும் ட்ரெஸ்களைப் பார்த்தால்... ஏதோ பணத்தில் புரள்பவர்போல இருக்கே..." என்று இழுத்தேன்.

"அவருக்கு நல்ல உடைகள் அணிவதில் அலாதிப் பிரியம்... அதனால் என்ன பணக் கஷ்டமானாலும் அவர் துணிமணிகளில் குறைப்பதில்லை. நாலு இடங்களுக்கு போகிறவர். ஆடை நன்றாக இருந்தால்தானே அவர் தன்னம்பிக்கை வளரும். எனக்கென்ன? வீட்டில் அடைந்து இருப்பவள் தானே. பழைய சேலை பத்தாதா" என்று அவள் பேசப் பேச எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என் கணவர் ஒரு ஜீனியஸ். நானும் ஓரளவு புத்திசாலிதான். ஆனால் ஏதோ பண்ணின பாவம். எங்களுக்குப் பிறந்த

"காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு... நேற்று என் வீட்டுக்கு வந்த திருடன், 'பணத்தையெல்லாம் எங்கே ஒளிச்சு வச்சிருக்கே, திருட்டு ராஸ்கல்'ங்கறான்..."

— ஏ. ஆர். வீரராகவன்.



பிள்ளைகொஞ்சம்புத்திமட்டு. இவர்பேச்சைக் கேட்டுக் கேட்டு அவனுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையும் வந்து விட்டது. நீயே சொல்லு. ஒரு பெரிய மரத்தின் நிழலில் சிறிய செடிகள் எப்படி வளர முடியும்? எந்த நேரமும்நெகடிவ் அறிவுரை, மட்டம்தட்டுதல் எல்லோருமே நன்றாகப் படித்து முதல் ரேங்க் வாங்கிவிட்டால், பாக்கி உள்ள ரேங்க்கு களை யார் வாங்குவது? என் பிள்ளைக்குப் படிப்பு வராது. ஆனா அருமையா படம் வரைவான். எந்த வேலையையும் ஒரு தடவை கண்ணால் பார்த்தால் கை செய்யும். அவனை வேறு எந்தத் துறையிலாவது ஊக்குவிக்கலா மென்றால்.... இவர் கேட்க மாட்டார். ஒரு நாள் கூடக் கிட்ட கூப்பிட்டு அருமையாகப் பேசமாட்டார். இவரைக் கண்டாலே அவ னுக்கு பயம். அந்தப் பயத்திலேயே இன்னும் கீழே போகிறான். தெய்வம்தான் அவனுக்கு ஒரு வழி காட்டணும்.''

எனக்கு என்ன பேசுவது என்று தெரிய வில்லை. அந்தக் கசப்பான உண்மைகளை விழுங்க முடியாமல் தவித்தேன். கனத்த மனத்துடன் விடை பெற்றுக் கொண்டேன்.

இரண்டு வாரங்கள் கழித்து வாசுதே வன் சார் கல்கத்தாவிலிருந்து திரும்பி ஆபீஸ் வந்தபொழுது எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டு பேசினார்கள். அவரும் உற்சாகத் துடன் ரசகுல்லா விநியோகித்தார்.

''நீங்கள் இல்லாதபோது உங்கள் வீட் டிற்குச் சென்றிருந்தேன். உங்கள் மனைவி யுடன் பேசினேன். எப்பேர்ப்பட்ட மனுஷி அவள். உங்களுக்குக் கிடைத்த வரப்பிரசா தம்.'' என்று அவரிடம் ஓடிப் போய் முறை யிட மனம் துடித்தது.

'ஏதோ தமிழ்ப் பெண்ணாக இருக்கிறாயே என்று படபடவென்று பேசி விட்டேன். நான் மனம் விட்டுப் பேசிப் பல வருடங் களாகின்றன. எனக்குச் சிநேகிதர்களே கிடையாது. 'ஐ கான்ட் அஃபோர்ட்தெம்.' ஏதோ மன வேதனையில் வேகமாகப் பேசி விட்டேன். தப்பித் தவறிக் கூட அவரிடம் கேட்டு விடாதே. அவர் ஈகோ அடிபட்டுப் போய்விடும்' என்று கண்ணீருடன் அவர் மனைவி கூறியது ஞாபகம் வந்தது.

''என்ன உமா, வந்ததிலிருந்து பார்க்கி றேன்.... பேசாமல் தனியாக நிற்கிறாய்...'' என்றவாறு சார் என்னிடம் ரசகுல்லா டின்னை நீட்டினார்.

''எதைக் கேட்டாலும் 'என்னிடம் கொண்டு வாருங்கள்' என்று பீத்திக் கொள் ளும் நீ. உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு உள்ளங்களை நசுக்கிக் கொன்று விட்டாயே... நீயெல்லாம் ஒரு மனுஷனா?'' என்று மனம் ஆங்காரத்துடன் ஓலமிட்டுப் புலம்பியது.

அதைக் கஷ்டப்பட்டு அடக்கிவிட்டு..... ''வேண்டாம் சார், ரசகுல்லா. இன்னிக்கு நான் விரதம்'' என்று மேல்பூச்சாக அவரைப் பார்த்துச் சிரித்தேன். அந்தச் சின்ன எதிர்ப் பைத்தான் என்னால் காட்ட முடிந்தது.

7

பாரட்டில் ஸ்லோ மோஷனில் இறங்குகிற கதாநாயகி போலவே ஷில்பா இறங்க, வினாடியில் ஆயிரத்தில் ஒரு பாக நேரம் உறைந்திருந்த பிருத்விராஜ் ஷில்பாவை நோக்கி ஓடத் தொடங்கினான்.

"பாப்பா, பாப்பா" என்று நின்ற இடத்தை விட்டு நகராமல் பதறினார் ஜூபிடர் ரத்தினம்.

அஸ்வின் குமார் தான் முந்திக் கொண்டவன். பைனாகுலர்ஸ் வழியாக, ஷில்பா இறங்குவதை, ஷில்பாவின் கால் இடறுவதைக் கவனித்தவன் யாவருக்கும் முன்னால் ஓடி, சரிவில் ஏறினான்.

அதற்குள் ஷில்பா தடை செய்யப்பட்டு விட்டான். மலைச்சரிவில் வளர்ந்திருந்த ஓர் அடர்த்தியான மரம் அவளைத் தடுத்தது. கீழே விழும் குழந்தைகளைப்பூமிமாதாதாங்குவது போல் தாங்கியது. அணைத்து நிறுத்தியது.

அஸ்வின்குமார் ஒரு முறை தடுக்கி விழுந்தான். சுண்டு விரலில் நகம் பெயர்ந்தது. ரத்தம் வெளிப்பட்டது.


முழங்கால் பான்டை ஈரமண் அழுக்காக்கியது. கையை ஊன்றியதால் முழங்கையில் 'சிர்' என்று ஒரு சிராய்ப்பு. உடன் கையில் ஒரு சிவப்பு குல்மொஹர் பூத்தது.

ஷில்பா, சுவரில் இருந்து கீழே விழுந்த பல்லி போல் சற்று நேரம் அசையாமல் இருந்தாள். மூச்சிரைத்தாள். எழுந்து கொண்டாள். உடலில் அங்கங்கே சிராய்ப்புகள். நல்லவேளை, ஒன்றும் நடக்கவில்லை. ச்சே. இப்படியே செத்துப் போயிருக்கலாமே. என்ன வாழ்க்கை இது? என்ன பசி இது?

ஷில்பா அங்கிருந்து கீழே நோக்கினாள். சரிவில் ஏறிக் கொண்டிருந்த பிருத்விராஜ் அவள் எழுந்து நின்றதைப் பார்த்ததும் உறைந்து நின்றான். ஷில்பா அவனைப் பார்த்தாள். எனக்காகக் கவலைப்படும் ஒரே ஓர் உன்னதமான ஆத்மா!

ஷில்பா அங்கிருந்தே பிருத்விராஜைப் பார்த்து அகலமாகச் சிரித்தான். கையை அசைத்தான். சரிவில் மெல்ல மெல்லக் கீழே இறங்கத் தொடங்கினாள்.

புதுமுகம் ஷில்பா நடிக்கும்



நீரில் மிதக்கும் நிலா


டைரக்ஷன்: இளங்குமரன



ஷில்பா சிரித்து, கையசைத்து, கீழே இறங்கத் தொடங்கியதைப் பார்த்தவுடன் பிருத்விராஜ் ஏனென்று தெரியாமலேயே ஒரு முறை கைதட்டினான். 'ஹப்பா' என்று ஒரு பெருமூச்சு விட்டான். வேக வேகமாக அவளை நோக்கி முன்னேறத் தொடங்கினான்.

கீழே நின்று கவனித்துக் கொண்டிருந்த யூனிட் மொத்தமும் அஸ்வின்குமார் விழுந்ததைப் பார்த்ததும் கோரஸாக ஒரு பயக்குரலை எழுப்பியது.

அஸ்வின்குமாரை நோக்கி அத்தனை பேரும் ஓடினார்கள். இளங்குமரன் அஸ்வின்குமாரின் தோளைப் பற்றி அவனை எழுப்பினான்.



"அஸ்வின், அடி பலமாகப் பட்டுவிட்டதா?"

"சேச்சே," என்று அஸ்வின்குமார் அழுக்காகி இருந்த பான்ட்டைத் தட்டி விட்டுக் கொண்டான்.

"மை காட். ரத்தம் அஸ்வின். காலில் ரத்தம்."

"அண்ணனுக்குக் கால்ல சரியான அடிங்க... எவ்வளவு ரத்தம் பாருங்க..."


"சச்சி. ஆப்பிள் ஜூஸ்."

"சச்சிதானந்தம்... சச்சிதானந்தம். எங்கேய்யா சச்சிதானந்தம்? சோடா கொண்டு வாய்யா... ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் ஏதாவது வெச்சிருக்கீங்களா? இருக்காதே. இருக்காதே. போன தடவையே படிச்சிப் படிச்சிச் சொன்னேனே... கேட்டீங்களா...? போங்கய்யா, எங்கேயாவது போய் ஃபர்ஸ்ட் எய்ட் கிட் எடுத்துட்டு வாங்க. ஓடுங்க... ஓடுங்க... வாம்மா... ஷில்பா... வா... இந்தப் படம் முடியறதுக்குள்ளே எம் பேரை ரிப்பேராக்கிடுவே... உனக்காக ஓடிவந்து ஹீரோவுக்கு அடி.... படுத்துட்டார்னா படமே படுத்துடும்... வட்டிக்கு வாங்கிக் காசைக் கொட்டியிருக்கிற டிஸ்ட்ரிப்யூட்டருங்க அத்தனை பேரும் என் தோலை உரிச்சி, உப்பு, மிளகு தூவி சாப்ட்ருவானுங்க... உங்களுக்கு அடி ஏதும் படலையே அஸ்வின்... உனக்கு என்னம்மா... ரத்தக் காயமா."

இளங்குமரன் இரண்டு பேரிடமும் மாற்றி மாற்றிக் கேட்டுக் கொண்



சுபா



கடலுக்கடியில் அமைந்த, உலகிலேயே மிக நீளமான சுரங்க ரயில் பாதை ஜப்பானில் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டது. ஜப்பானின் இரு தீவுகளை இது இணைத்துப் போக்குவரத்தைச் சுலபமாக்குகிறது. ஸெய்க்கான் சுரங்க ரயில் பாதையின் மொத்த நீளம் 53.85 கி. மீட்டர். இதில் கடலுக்கடியில் அமைந்த பகுதியின் நீளம் 23.3 கி. மீ.!

— பஸிஃபிக் ஃபிரெண்ட்.

டிருக்க, பிருத்விராஜ் ஷில்பாவின் அருகில் வந்து நின்று அவளை முழுமையாகப் பார்த்தான். 'நல்லவேளை' என்று பெருமூச்சு விட்டான். அடி ஒன்றும் பலமாக இல்லை.

"பாக்-அப்" என்றான் இளங்குமரன். ஷில்பாவின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் இருந்த வலி வேதனை அவனைத் தாக்கியது. பளிச் என்று அவன் மூளையில் ஒரு மின்னல். இப்படிச் செய்யலாமே...

"ஷில்பா... இன்னிக்கு இதுக்கு மேல வேணாம். நீ என்ன பண்றே... மாடர்ன் காஸ்ட்யூம் ஒரு நாலஞ்சு போட்டு போட்டோவுக்கு போஸ் குடுக்கற. போஸ் கொடுத்து முடிச்சப்பறம் உடம்புல வெளிய தெரியற மாதிரி இருக்கிற எடங்களில அங்கங்கே ப்ளஸ், ப்ளஸ்ஸா பிளாஸ்திரி ஒட்டிக்கறே. நெத்தியில ஒரு பாண்டேஜ் போட்டுவுடச் சொல்றேன். அந்தப் போஸையும் ஒரு நாலஞ்சி எடுத்துக்க. அஸ்வின் குமார்... நீங்க கூட பாண்டேஜ் சுத்திக்குங்க. முடிஞ்சா ஃப்ராக்சர் மாதிரி வெளிய தெரியறது நல்லது. நான் இந்தச் சம்பவத்தை வெச்சிகிட்டே நாளைக்குப் பேப்பர்ல தூள் கிளப்பச் சொல்றேன்.

'இளங்குமரனின் 'நீரில் மிதக்கும் நிலா' படப்பிடிப்பில் புதுக் கதாநாயகி ஷில்பா விபத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பினார். ஷில்பாவைக் காப்பாற்றிய 'கலைஞானி' அஸ்வின் குமாரும் மயிரிழையில் உயிர் தப்பினார்!

எப்படி இருக்கு நியூஸ்? அஸ்வின், ப்ளீஸ் கோவாப்ரேட். அஸ்வின் குமார் அடிபட்டாருன்னா ஜனங்களுக்குத் தங்களுக்கே அடிபட்ட மாதிரி ஒரு துடிப்பு வந்துரும். நாளைக்குப் பேப்பர்ல இந்த நியூஸ் வந்தாகணும். தமிழ்நாட்டையே ஒரு கலக்கு கலக்கிடணும்.... யாருப்பா அது ஸ்டில் ஃபோட்டோகிராஃபர்... வாய்யா... கைல ஃபிலிம் வெச்சிருக்கியா இல்லியா?"

இரவு. ஷில்பா அந்தப் பெரிய அறையில் எங்கே போவது, என்ன செய்வது என்று தெரியாமல் வளைய வளைய வந்தாள். பணம். பணம் ஒன்று போதும். அத்தனையும் விலைக்கு வாங்கி விடலாம் என்று நினைத்தாள்.

அவள் இருந்த அறையில் தரையில் கால் படாமல் இருக்க கார்ப்பெட் விரிக்கப்பட்டிருந்தது. நல்ல தேக்கில் அலங்காரக் கட்டில். அலங்கார ட்ரெஸ்ஸிங் டேபிள். பெல்ஜியம் தேசத்துக் கண்ணாடி. ஷாண்டலியர். நைட்லாம்ப். உட்கார்ந்தால் காணாமல் அடிக்கிற ஃபோம்களுடன் சோஃபா. கட்டில். திரை.

ஜூபிடர் ரத்தினம் கணப்புக்கு எதிரில் உட்கார்ந்து வெகு சுவாரசியமாகப் பல்லிடுக்கில் மாட்டிக் கொண்டிருந்த சிக்கன் ஸிக்ஸ்டி ஃபைவை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

ஷில்பா மேஜை மேல் ஒரு பேப்பரும், கையில் ஒரு பேனாவுமாக இருந்தாள்.

"அன்புள்ள ராணி அக்காவிற்கு....

என்ன எழுதலாம்? பிருத்விராஜன் கதை சொல்லியே தன்னை அவன் பக்கம் ஈர்த்துக் கொண்டிருப்பதையா? அஸ்வின் குமார் பார்வையாலேயே அவளுடைய உடைகள் அத்தனையையும் உருவுவதையா? இளங்குமரன் ஒரு செகண்ட் கோபத்தில் வெடித்து விட்டு அடுத்த செகண்ட் சிரிப்பதையா? அவளை விதவிதமான கோணங்களில் விதவிதமான ஆடைகளில் க்ளிக், க்ளிக், க்ளிக் என்று காமிரா கண் திறந்து, கண் திறந்து, பகுதி பகுதியாகச் சாப்பிட்டதையா? இளங்குமரன் அவள் ஃபோட்டோக்களை வைத்து எல்லோர் முன்னிலையிலும் விளம்பர டிஸைன் செய்து 'சரியா இருக்கா, சரியா இருக்கா, சரியா இருக்காடா முண்டமே' என்று கேட்டதையா? ராணி அக்கா சரியாகச் சாப்பிடுகிறாயா ராணி அக்கா? திலகா, நீ எப்படி இருக்கிறாய் திலகா? அப்பாவைப் பற்றி, அவருடைய உண்மையான நோக்கத்தைப் பற்றி எழுதினால் நீ என்ன சொல்லுவாய் அக்கா? சாப்பிட்டீர்களா? இரண்டு பேரும் மூன்று வேளையும் நன்றாகச் சாப்பிட்டீர்களா?

ஷில்பா பேனாவை மேஜையில் போட்டாள். பல் குத்திக் கொண்டிருந்த அப்பாவைப் பார்த்தாள். ட்ரெஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் பார்த்தாள். கண்ணாடி ஷில்பாவின் முகத்தில் அசூயை. தன்னிச்சையாகத் தன் தலைமயிரை மெதுவாக பிரஷ் வைத்து வருடினாள். ஒரு சின்ன ரிப்பன் வைத்து முடிந்து, தலைமுடியைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் நேரத்தில் அழைப்பு மணி அவளை அழைத்தது.

பிருத்விராஜ்! பிருத்விராஜ்! இதே ஹோட்டலில்தானே இருக்கிறான். அவளை விசாரிக்க வந்திருப்பான். அப்பா போய் அவனிடம் பேசக் கூடாத ஏதாவதைப் பேசி அவனைத் துரத்துவதற்குள்...

ஷில்பா கதவைத் திறந்தாள்.

அஸ்வின் குமார் நின்றிருந்தான். கையில் விரலிடுக்கில் சிகரெட் புகைந்தது. முகத்தில் இலேசான வியர்வை. ஷில்பாவைப் பார்த்த

தும் சிரித்தான். சிரிப்பில் மயக்கம் இருந்தது. அவன் வெறும் ஐஸ் கட்டிகளை மட்டும் சேர்த்துக் கொண்டு 'ரா'வாக அடித்த ஸ்காட்ச் மயக்கம்.

''என்ன ஷில்பா... என் ரூமுக்கு வரச் சொன்னேனே.... உனக்கு ட்ரெய்னிங் குடுக்கறேன்னு சொன்னேனே... நீ வரலை. அதான்... அதான் நான் வந்துட்டேன். உனக்கு ட்ரெய்னிங் குடுக்கறதுக்கு. எனக்கு ஸீனியர், ஜூனியர்ங்கற வித்தியாசமெல்லாம் கெடையாது... வா... இந்த ரூம்லயே உனக்கு ட்ரெய்னிங் குடுக்கறேன். இந்த ரூமும் சௌகரியமாத்தான் இருக்கு... கட்டில்ல ஃபோம் இருக்குதில்ல...?''

ஷில்பா படாரென்று கதவைச் சாத்தப் போக, அஸ்வின் குமார் தன் ஷூக்காலை இடையில் நுழைத்துக் கதவைத் தடுத்தான்.

''அப்பா....'' என்று ஆவேசமாகக் கத்திக் கொண்டு அறைக்குள் போனாள் ஷில்பா.

ஜூபிடர் ரத்தினம எழுந்து வந்திருந்தார். அஸ்வின்குமாரைக் கதவருகே பார்த்ததும் நத்தை போல் உடலைக் குறுக்கினார்.

''வாங்க அஸ்வின்... வாங்க... வாங்க..''

''நீ மூட்டும் சொல்லுய்யா... ஏன்யா நான் உங்கூட என்ன பண்ண முடியும்?''

''ஷ்'' என்றார் ஜூபிடர் ரத்தினம் உதட்டில் ஒரு விரலைப் பொருத்தி. ''பாப்பாவுக்கு எதுவும் இன்னும் சரிவரப் பழகலைங்க...''

''ஏன்யா நீ முப்பது வருஷமா மேக்கப் மேனுன்னு மாரைத் தட்டிக்க மாட்டே...? ஃபீல்டைப் பத்தி ஒனக்குத் தெரியாது....? இன்னுமா சொல்லலை....! இன்னுமா கத்துக் கொடுக்கலை! அவளைக் காப்பாத்தப் போய் என் உயிரையே விடறதுக்கு இருந்தேன் இன்னிக்கு. அந்த நன்றி வேணாம். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகளிர்க்கு. பொம்பளைக்குத்தான்யா வள்ளுவர் சொல்லியிருக்காரு. நான் ஷில்பா மேல உயிரையே வெச்சிருக்கேன்... இன்னிக்கு நான் இங்கருந்து சும்மா போகப் போறதில்ல... ஷில்பா... ஆ-ஆ-ஆ.....''

காரிடார் மூலையில் நின்றிருந்த நைட்—டூட்டி ரூம்பாய் அஸ்வின் குமாரின் வசனத்தில் காதைப் பதித்துச் சிரித்தான். ஏதோ ஓர் அறைக்கதவு திறந்து, யாரோ ''வாட்டீஸ் திஸ் நான்சென்ஸ்?'' என்றார்கள்.

ஜூபிடர் ரத்தினம் அஸ்வின் குமாரின் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டார்.

''உள்ள வாங்க. வெளிய நின்னுகிட்டு அசிங்கமா பேசிக்கிட்டு....''

''ஒம் பொண்ணு என்னய்யா ஊர்வசி, திலோத்தமை, ரம்பைக்கு மேலயா? இந்த பிகு பண்ணிக்கறா...! டாய்... இன்னிக்கு நான் சும்மா போகப் போறதில்ல...''

ஷில்பா தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த படுக்கையறையை ஒட்டிய உள்ளறையில் இருந்தாள். கதவைச் சாத்திக் கொண்டிருந்தாள். நடுங்கிக் கொண்டிருந்தாள்.

சுற்றுமுற்றும் பார்த்தாள். தப்பிக்க வழி தேடும் பூனைக்குட்டிப் பார்வை.

பாத்ரூம் கதவைத் திறந்தாள். பாதுகாப்பான ஹோட்டல். ஒரு படையே திரண்டு வந்தாலும் உடைக்க முடியாத கோட்டை போல் பாத்ரூம்.

பாத்ரூமில் இரண்டு சுவர்கள் இணையும் ஒரு மூலையில் ஒரு ஆஸிட் பாட்டில் இருந்தது. அதில் முக்காலுக்கு மேல் ஆஸிட் இருந்தது.

'எனக்குப் போய் ராணின்னு பெயரை வச்சாங்களேடி... நீதாண்டி ராணி...'

ஷில்பா அந்த ஆசிட் பாட்டிலைக் கையில் எடுத்தாள். இவ்வளவு அழகாய் இருப்பதால் தானே இந்த நிலைமை? இவ்வளவு அழகாய் இருப்பதால்தானே இந்த நிலைமை?

ஷில்பாவின் அழகிய முகம் வேறு வேறு கோணங்களில், வேறு வேறு வண்ண உடைகளில் ஒரு பக்கம் முழுவதும் பரவி, ஆஃப்செட் இயந்திரத்தின் ராட்சசத்தனமான வேகத்தில் புதுமுகம் ஷில்பா நடிக்கும், 'நீரில் மிதக்கும் நிலா' என்ற அறிவிப்புடன் மறுபடி, மறுபடி, மறுபடி ந்யூஸ் பிரிண்டில் பதிவாகிக் கொண்டிருக்க....


இளங்குமரன் வெகு திருப்தியாகத் தூங்கிக் கொண்டிருக்க....

'படப்பிடிப்பில் அஸ்வின் குமார் மயிரிழையில் உயிர் தப்பினார். புதுமுகம் ஷில்பாவும் மயிரிழையில் உயிர் தப்பினார்' ஐ ஒரு பத்திரிகையின் ப்ரூஃப் ரீடர் உற்சாகத்துடன் ப்ரூஃப் திருத்திக் கொண்டிருக்க....

பிருத்விராஜ் ஏதோ ஒரு கெட்ட கனவால் துரத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஷில்பா ஆசிட் பாட்டிலின் மூடியைத் திறந்தாள்!

(தொடரும்)



பேச்சாளர்:

''ஜனங்க தொடர்ந்து கை தட்றாங்களே, இதற்கு என்ன அர்த்தம்?''

மேடையில் ஒருவர்: ''அடுத்தது 'கல்லடி' என்பதுதான் அர்த்தம்.....!''

— அ. தெய்வசிகாமணி.

அன்பு நிறைய உடையவர்கள்



பேருந்தை விட்டு இறங்கியதும், சந்தோஷமாய் இருந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின் என் சொந்த ஊருக்கு வருகிறேன். நகரத்தில், தனியார் தொழிற்சாலையொன்றில் ஃபிட்டராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். சம்பளம் திருப்தியளிப்பதாய் இருந்தாலும் அசுத்த காற்றும், கடும் வெய்யிலிலும், அருகருகே இருந்தாலும் அறிமுகமற்ற தன்மையுமான நகரத்தில் வசிப்பது நரகமாய் இருந்தது. இப்போது அமைதியாய், இதமாய் என் கிராமத்தில்... பத்து நாட்கள்... ஓ.....!

ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினேன். இடது கையில் சின்னதாய் சூட்கேஸ்... மனம் முழுக்க உற்சாகம்....

''என்ன மாப்ளே. ரொம்ப நாளைக்கப்புறம் ஊருக்கு வாறாப்பல.''

சட்டென்று நிமிர்ந்தேன்.

சீனி மாமா.

''ஆமாம் மாமா! லீவே எடுக்கலையா.... அதான் ஒரு பத்து நாள் லீவு போட்டுட்டு வந்தேன்.''

''சரி சரி வீட்டுக்குப் போ. சாயந்திரமா பேசிக்கலாம். சௌக்கியந்தானே மாப்ளே?''

''சௌக்கியந்தான் மாமா.''

நடை தொடர்கிறேன். சினி மாமா. எனக்கு எந்த உறவு வழியிலும் மாமா இல்லை. பார்க்கப் போனால் அவர் ஜாதியைச் சேர்ந்தவன் கூட இல்லை நான். எனினும் இப்படி முறைவைத்துப் பழகுகிறோம். இதுதான் என் கிராமம்!

மத்தியானம் பன்னிரண்டு மணியாகிறது. உறுத்தாத வெய்யில். இரண்டு பக்கமும் தென்னந் தோப்புக்கள். சைக்கிளிலோ, கால்நடையாகவோ சென்று கொண்டிருக்கும் ஒரு சில மனிதர்கள். தூரத்தே வாழைத்தார் ஏற்றிய இரட்டை மாட்டு வண்டி. ஏழெட்டு ஆடுகளை ஓட்டிக் கொண்டு ஒருவர்.

அட... நம்ம சோமு அண்ணன்!

அவரும் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

''என்ன பட்டணத்துத் தம்பியா? வா... வா... இப்பத்தான் வாறீயா?''

''ஆமாண்ணே. எங்க இந்நேரத்துக்கு ஆட்டை ஓட்டிக்கிட்டுக் கௌம்பிட்டீங்க?''

''நாளைக்குச் சந்தையில்ல... இப்பவே ஓட்னாத்தானே போய்ச் சேர முடியும். அதான்....''

''வரட்டுமாண்ணே.''

''வாப்பா, ரொம்ப எளச்சிப்போயிருக்கே. உடம்பைப் பார்த்துக்க!'' — நெகிழ்ந்து போனேன். இவரும் என் உறவுக்காரர் இல்லை! ஆயினும் அண்ணன் தம்பியாய் முறைவைத்த பழக்கம். இன்று நேற்றல்ல... காலம் காலமாய்... நான் சிறுவனாக இருக்கும்போதே அவர் அப்பாவைப் பெரியப்பா என்பேன். சோமு அண்ணனும் என் அப்பாவைச் சித்தப்பா என்பார். இருவரின் அப்பாக்களும் — 'வாண்ணே', 'என்ன தம்பி' என்றுதான் அழைத்துக் கொள்வார்கள்.

உற்சாகமான நடையில் ஒன்றரை மைல் போனதே தெரியவில்லை. ஊர் வந்து விட்டது. காளியம்மன் கோவில் திண்ணையில் பேப்பர் படித்துக் கொண்டு மூன்று பேர். நேசத்துடன் புன்னகை செய்தார்கள். கோயிலுக்குப் பக்கத்திலேயே கட்சிகளின் கொடிக் கம்பம். அதிலே புதிதாய் ஒரு கம்பம். பளீரென்று ஒரு கொடி.

என்ன இது?

உடனே புரியவில்லை. நடை தயங்கி யோசித்தேன்.

ஓ.....

இது எந்தக் கட்சியின் கொடியுமில்லை. ஒரு குறிப்பிட்ட ஜாதி சங்கத்தின் கொடி. புதிதாய் என் ஊரில் ஏற்றியிருக்கிறார்களே... ஏன்?

ஏனோ லேசாய்ச் சங்கடமாயிருந்தது. இன்றுதான் எங்கள் ஊரில் முதன் முதலாய் ஒரு ஜாதி சங்கக் கொடியைப் பார்க்கிறேன்.''

ஊர் வெறிச்சிட்டிருந்தது. அவரவர் விவசாய வேலைகளுக்குப் போயிருப்பார்கள். என் வீட்டுக் கதவு ஒருக்களித்திருந்தது. முன்பே கடிதமெழுதியிருந்ததால் ஆச்சரியப்பட் ஒன்றுமில்லை. கதவைத் திறந்தேன். கூடத்தில் அம்மா படுத்திருந்தாள். உண்ட களைப்பு கண் செருகியிருந்தது.

''அம்மா....!''

திடுக்கென விழித்தெழுந்தாள்.

''வாடா.... வாப்பா. நீ ராத்திரிதான் வருவேன்னு இருந்தேன்... என்னடா இப்படி இளைச்சுப் போய்ட்டே. அதான் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கடா, பண்ணிக்கடானு கடுதாசி மேல் கடுதாசியா போடுறோம்; கேக்குறியா? வாய்க்கு ருசியா ஆக்கிப் போட்டா இப்படி இருப்பியா...?'' புலம்பிக் கொண்டே, என் சூட்கேஸை வாங்கி வைத்தாள்.

— இதுதான் தொந்தரவு. மனிதன் நாலு காசைப் பார்த்து விட்டால் போதும். பெற்றவர்களுக்குப் பொறுக்காது. உடனே ஒரு கல்யாணம் பண்ணிப் பார்த்தால்தான் பெற்ற பலனை அடைவார்கள்! சே....!

''அப்பா எங்கேம்மா?''

''வாழைக் கொல்லைக்குப் போயிருக்கார். இப்ப வந்துடுவார்றா... அங்க வேலையெல்லாம் ஒண்ணும் கஷ்டமில்லையே. எல்லோரும் நல்லா பழகுறாங்களா?''


— வேலை கஷ்டமில்லை. ஆனால் நான்கு பேராய்ச் சேர்ந்து, அநியாய வாடகையில், நம் சமையலறை மாதிரியான இடத்தில் தங்கி இருக்கிறோம். யாரும், யாருடனும் பழகுவதில்லை. யந்திரமாய்ப் புன்னகை செய்து, ''நாளைக்கு டே ஷிப்ட்தானே ஒங்களுக்கு, இல்ல நைட் ஷிப்டா?'' — என்று தெரிந்தும் கேள்விகள் கேட்டு, அறையைப் பகிர்ந்து கொள்ளும் நான்கு பேருக்கும் ஒரு நாள் கூடச் சேர்ந்து பழகாத வாழ்க்கை.

— இப்படியெல்லாம் மனத்துக்குள் நினைத்துக் கொண்டேனேயொழிய அம்மாவிடம் நல்லவிதமாகவே இருப்பதாகச் சொன்னேன். இங்கே 'முணுக்' கென்றால் நூறு மனிதர்கள் கூடிவிடுவார்கள். என்ன? ஏது? என்று பரிவான விசாரிப்பு. தங்களால் இயன்ற உதவி என்று அத்தனை பேரும் தன் காரியமாய் எடுத்துக் கொள்வார்கள். அங்கே பக்கத்து வீட்டில் 'கொலையென்றால், 'என்னது? எனக்குத் தெரியாதே' என்பார்கள். ஏதோ கத்தரிக்காய் விலை தனக்குத் தெரியாதே என்பது போல.

— பயண அலுப்பு தீர, வீட்டுக் கிணற்றில் குளித்தேன். பக்கத்தில்தான் காவேரி. நாளைக்குப் போக வேண்டும். சாப்பிட்டு விட்டுச் சின்னதாய் ஒரு தூக்கம் போட்டு, மாலையில் எழுந்து.... காலார நடந்துவிட்டு வரலாமென்று கிளம்பினேன்.

''என்ன மருமகப்புள்ளையை பார்த்தே ரெண்டு வருஷமாவுது. பட்டணத்துல யாரையாச்சும் வளச்சிப் போட்டுட்டியா...? இங்கே நான் ஒருத்தி இருக்கேங்கிறத மறந்திடாதே ராஜா.

பேரூர்காஞ்நிதராஜ்



வீட்டுக்காரர்: ஏம்பா நீ நிதானத்தோடே தான் வந்தியா, இல்லே கலக்கமா?

திருடன்: ஏன்யா அப்படிக் கேட்கிறே?

வீட்டுக்காரர்: கையில் கத்தியை வச்சுக்கிட்டு 'சத்தம் போட்டால் சுட்டுடுவேன்'னு சொல்றே?

— மீனம் தனுசு.

— நாகம்மா அத்தை. எப்பவும் இதே கேலியும், கிண்டலும்தான். நடுத்தர வயதைக் கடந்து விட்டாலும் என்னிடம் மட்டும் இப்படித்தான் பேசுவாள். நான் சிரித்துக் கொண்டேன்.

— இவளும் என் நிஜ அத்தை இல்லை. பழக்கத்தால் ஏற்பட்ட அன்னியோன்னியமே குடும்ப, ஜாதி உணர்வுகளைக் கடந்து எங்களிடையே பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

"பத்து நாள் லீவுல வந்தேன்த்தே. வரட்டுமா?" என்று என் வழியே நடந்தேன்.

வாசலுக்கு வாசல், தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள் இளம் பெண்கள். ஊர்க் கடைசியை அடைவதற்குள் ஏறக்குறைய பத்துப் பன்னிரண்டு பேருக்கு மேல் "தம்பி எப்ப வந்தாப்ல..." என்று பரிவுடன் விசாரித்து விட்டார்கள். எல்லோருக்கும் பதில் சொல்லி விட்டு, ஓடை வாய்க்கால் மதகில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தேன். மனம் நிறைந்து கிடந்தது. இவர்களுக்குத்தான் எவ்வளவு அன்பு, பரிவு....! பேசாமல் தஞ்சாவூர் பக்கமாய் ஏதேனும் வேலை பார்த்துக் கொண்டு தினமும் இங்கு வந்து போனால் நன்றாக இருக்குமென்று தோன்றியது.

இரண்டு நாட்கள் கழித்து, ஒரு விடியலில் எழுந்து, காவேரியில் குளித்து விட்டு வரும் போது அப்படியே வாழைக் கொல்லையைப் பார்த்து விட்டு வரலாமென்று போனேன். படல் திறந்து கிடந்தது. உள்ளேயிருந்து இருபது முப்பது குருத்து இலைகளைச் சுமந்து கொண்டு அவசரமாய் வந்தான் அவன்.

ராமசாமி! நாட்டாண்மையின் தம்பி மகன். பதினேழு, பதினெட்டு வயசுதானிருக்கும்... இப்படி திருடக் கிளம்பி விட்டானே....!

"எலே... என்னடா இது பட்டப்பகல்லேயே கொல்லைக்குள்ள பூந்து திருடிக்கிட்டு வர்றே" — ஆத்திரத்துடன் கேட்டேன்.

"யோவ் ஒன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போய்யா....!" என்றவனிடமிருந்து பட்டை நெடி முகத்திலறைந்தது.

"நல்ல நியாயம்பா நீ பேசுறது! என் வீட்டுக் கொல்லையில திருடிட்டு என்னையே வேலையைப் பார்த்துகிட்டுப் போங்கறியே....!"

அவன் அலட்சியமாய்த் தோளில் இலை சுருட்டுடன் நடந்து கொண்டே சொன்னான்.

"ஒத்தவூட்டுக்காரப் பயலுக்கு இந்தத் திமிறா...? இரு போய்ட்டு வந்து கவனிச்சிக்குறேன்....

அவ்வளவுதான்.... ஒரே தாவலில் அவனைப் பிடித்து ஓர் அறை அறைந்து விட்டேன்.

மெல்ல எழுந்தான். சட்டையிலிருந்த மண்ணையெல்லாம் தட்டிவிட்டு:

"டேய் என்னை அடிச்சிட்டியில்ல....! ஊருக்குள்ள வா பார்த்துக்கிறேன்" — என்று திரும்பி ஓடினான்.

நான் கீழே கிடந்த இலைகளை எடுத்து, கொல்லைக்குள் போட்டு விட்டு, கொல்லையை ஒரு சுற்று சுற்றி விட்டுப் புறப்பட்டேன்.

அன்று மாலை காளியம்மன் கோயிலுக்குப் போய் வரலாம் என்று புறப்பட்டேன்.

முக்கு திரும்பி, கோயில் இருந்த தெருவுக்குள் நுழைந்த போது, வடக்கு பக்க மைதானத்து வழியே குறுக்காக ஒரு சிறு ஜனக் கூட்டம். தேனீக்கள் கூட்டம் போல் நெருக்கமாய் வருவது தெரிந்தது. பலர் கையில் மூங்கில் கழிகள் இருந்தன. மாலை சூரியன் வெளிச்சத்தில் ஒரிரு அரிவாள்களும் மின்னின.

கூட்டம் நெருங்க நெருங்க என்னுள் ஒரு வித கலக்கம் ஏற்பட்டது. கூப்பிடு தூரத்தை அடைந்ததும் கூட்டத்தில் முன்னணியில் இருந்தவர் கத்தினார்:

"எலே அடியான் வர்றார்டா....! எவ்வளவு தைரியமிருந்தா எங்க ஜாதிப் பையனையே அடிப்பே... அடக்........"


நான் சார்ந்திருந்த ஜாதியைக் கேவலமாய்க் குறிப்பிட்டார். அப்படி ஆவேசத்துடன் பேசியவர் வேறு யாருமில்லை; நான் ஊருக்குள் நுழைந்த போது என்னைக் கரிசனத்துடன் விசாரித்த சோமு அண்ணன்தான்.

"ஏண்டா பாத்துக்கிட்டு நிக்கிறீங்க... போடுங்கடா ஆளுக்கு ரெண்டு..." — சீனி மாமா சீற்றத்துடன் சொன்னார்.

கண்கள் குரோதத்தை உமிழ என்னை வெறித்த கூட்டத்தில் பல முகங்களை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. அவையெல்லாமே நான் ஊர் வந்து சேர்ந்த அன்று என்னை அன்புடன் நலம் விசாரித்து, அன்னியோன்னியத்தால் என்னை நெகிழச் செய்தவர்களின் முகங்கள்.

கூட்டம் முன்னேறியது. பின்னணியில் ஜாதி சங்கத்தின் கொடி காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது!

இருபத்தோராம் நூற்றாண்டு இந்தியன் எப்படி இருப்பான்? — ஒரு கற்பனை



இருள் வரும் நேரம்



23

ஏறக்குறைய அவர் காலடியில் விழுந்த பால்குண்டுவையும் பாபுவையும் பார்த்துப் பிரமித்தார் ராம்பிரகாஷ்! "என்ன சோமசேகர் இதெல்லாம்?" — பாபு, பால்குண்டு இருவரும் விலங்கு போட்டு ஒரு பொதுக் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்தார்கள். கால்கள் கட்டப்பட்டிருந்தன. நகர்வதற்கு, இருவரும் ஜந்துக்கள் போல ஊர்ந்தால்தான் சாத்தியம்.

அவர் கேட்டதைக் கவனிக்காமல் சோமசேகர் இருவரையும் பூட்ஸ் காலால் உதைத்தார். தர்மராஜன் தம் பெல்ட்டைக் கழற்றி உதறிக் கொண்டார். "என்னடா? அவ்வளவு கலபத்தில் பாலிடிக்ஸ் கொண்டாந்து தப்பிச்சுரலாம்னு பார்க்கறீங்களா. உங்களைக் கொலை பண்ணிட்டுத்தாண்டா விடப் போறேன்!"

ராம்பிரகாஷ் நம்பிக்கையில்லாமல், "தர்மராஜன், வாட்ஸ் ஆல் திஸ்?" என்றார்.

"மன்னிக்கணும். இவங்க ரெண்டு பேத்தையும் ட்ரேஸ் பண்ணிக் கண்டுபிடிக்க நாங்க அரும்பாடு பட்டோம்! இப்போ, ஒரு வக்கிலுடைய பொய்களினால், அயோக்கியத்தனத்தால் தப்பிச்சுக்கறாங்க. என்ன அநியாயம்!"

"அதுக்காக?"

தர்மராஜன் அவர் அருகில் வந்து, கண்களை விரித்து ராம்பிரகாஷைப் பார்த்து, "இவங்க ரெண்டு பேரும் உங்க மனைவியைக் கற்பழிச்சிருக்காங்க ப்ரொபஸர்! இதோ உங்க முன்னால நிக்கறாங்க! அடிங்க! ஜஸ்ட் பீட் தெம்! பீட் தி ஹெல் அவுட் ஆப் தெம்! வேற வழியே இல்லை. இவங்களைத் தண்டிக்க! நாங்க பார்க்கவே மாட்டோம். அந்தப் பக்கம் திரும்பிக்கிறோம்! அடிங்க! நிமித்துங்க! அடுத்த ஒரு மணி நேரத்துக்கு யாரும் கண்டுக்கப் போறதில்லை. என்ன சத்தம் போட்டாலும் யாருக்கும் கேட்காது! என்ன ஆயுதம் வேணும், தர்றேன். டயர், சங்கிலி, இரும்புத் தடி... நாங்க வெளியே காத்திருக்கோம். ப்ளீஸ் மேன் ப்ரொபஸர்! கொலை மட்டும் செய்துராதீங்க! பாக்கி எல்லாக் காயங்களையும் நாங்க பார்த்துக்கறோம்!"

அந்த வார்த்தைகளின் அதிர்ச்சி உரைக்கு முன்பே ப்ரொபஸரைத் தனியாக அவர்களுடன் விட்டுவிட்டு இரு போலீஸ் அதிகாரிகளும் விலகிக் கொண்டார்கள்.

"உள்ளே போங்கம்மா. நீங்களும் செருப்பால அடிங்க. பரவாயில்லை!"

அம்ரு திகைத்து, ஓரத்தில் புடைவைத் தலைப்பைக் கடித்துக் கொண்டு, நடுங்கிக் கொண்டு நின்றாள். "எனக்குப் பயமா இருக்கு" என்றாள்.

ராம்பிரகாஷ் அவர்களை ஆர்வத்துடன் பார்த்தார்.

"ரெண்டு பேரும் ஒண்ணும் செய்ய முடியாது அம்ரு. விலங்கு மாட்டியிருக்காங்கல்ல? நாயைப் போல் கட்டிப் போட்டிருக்காங்க!"

நடுவே கீழே கிடந்தார்கள். பாபுவின் வாயோரத்தில் ரத்தம் தெரிந்தது. "அய்யா, அய்யா, இவன் பேச்சைக் கேட்டுத்தான் செய்தேன்யா!"

பால்குண்டுவைப் பார்த்தார். அவன் எதிர்த்துப் பார்த்தான் விரோதமாக. "ஏதாவது செய்திங்க, பின்னிருவேன் தெரியுமில்லை!" என்றாலும் அவன் குரலில் நடுக்கம் இருந்தது.

"அம்ரு, இவங்களை என்ன செய்யலாம்? வா, அம்ரு, பயப்படாதே அம்ரு. உன்னை அன்னைக்கு வீழ்த்தினவங்க இப்ப வீழ்ந்து கெடக்கறாங்க! பாரு, வா அம்ரு! என்ன செய்யலாம் இவங்களை? கிட்ட வா! ஒண்ணும் பண்ணாது. கட்டிப் போட்டிருக்காங்க. எதை வெச்சுக்கிட்டு இவங்களை அடிக்கலாம் அம்ரு? சொல்லு என்ன ஆயுதம்? எது வேணா தருவாங்க!"

சுஜாதா

இருவரும் மிரளப் பார்க்க, "அம்மா, தெரியாத்தனமா செய்துட்டேம்மா. மன்னிச்சுக்கோங்கம்மா, நீங்க இவ்வளவு நல்லவங்கன்னு தெரிஞ்சிருந்தா...." என்றனர்.

அம்ரு. கிட்டே வந்து அவர்களைக் கவனித்துப் பார்த்தாள்.

"உம் பேர் என்ன?" என்றாள்.

"பாபு."

"நீ?"

"பால்குண்டு."

"அக்கா தங்கச்சி இருக்காங்களா?"

"இல்லை, அம்மாதான்!"

"உனக்கு?"

"எனக்கு அதுவும் கிடையாது!"

"உங்கம்மா பேரு என்ன?"


"லட்சுமி!"

"சிக்கபேட்டைல பொம்பிடி அடிக்கிறாங்க அய்யா! பெரியவரே, பாருங்க, பெரியவரே! நாங்க ஏன் இப்படியெல்லாம் செய்யறோம்... கொஞ்சம் கேட்டுப் பாருங்க! எனக்குப் படிப்பு தந்தாங்களா? உங்க புள்ளைங்க மாதிரி கான்வெண்டுக்கு அனுப்பிச்சாங்களா? இவன் — பாபு — சின்ன வயசிலிருந்தே அம்மா தேவடியா வேலை செய்யறதையே பார்த்துக்கிட்டு இருக்கான்! எப்ப லேர்ந்துடா, பாபு?"

"சின்னப்புள்ளைல கட்டிலுக்கு அடியில் ப்ராந்தி கொடுத்துப் படுக்க வெச்சிருவா. கால் மட்டும் தெரியும். அம்மா காலு. அப்புறம் ராத்திரி வந்து போய்க்கினே இருப்பாங்க. அவங்க கால் தெரியும். நிறைய கால் பார்த்திருக்கேன்!"

"இதான் இவன் பள்ளிக்கூடம்! நான்... இவனாவது அம்மான்னு பார்த்திருக்கான். பொறக்கறப்பவே அம்மா இல்லைங்க எனக்கு. அப்பா ஜெயில்ல இருக்கார். நான் ஒரு வீட்டுக்குள்ள ஒரு கூரைக்குக் கீழ் இது வரை ஒரு ராத்திரி படுத்ததில்லை. ப்ளாட் பாரம்தான்! சுக்சாகர் இருக்கு பாருங்க. அங்கேதான் பிச்சை எடுத்துக்கிட்டு இருப்பேன். அப்புறம் குப்பை பொறுக்கினேன்! எச்சி எலை தின்னேன்... கொடி கட்டினேன், தோரணம் கட்டினேன், அப்புறம் லாரி க்ளீனர், அப்புறம் நஞ்சப்பா கிட்டே இருந்தேன். அவருக்குச் சீராமபுரத்தாண்டை சாராயக்கடையும் யசவந்தபுரத்தில் தென்னந்தோப்பும் இருக்குது. அங்கேதான் ரெண்டு கொலை நடந்திருக்குது. என் கண்ணாலப் பார்த்திருக்கேன். பதினெட்டு பார்பர் சாப்பு கடை வெச்சிருக்காரு. பி.டி.ஏ. சைட்டு எம்பது சைட்டு வெச்சிருக்காரு. இந்த வக்கீலுக்குக் கூட அவருதான் ஏற்பாடு பண்ணாரு! அம்மா நான் செஞ்சது ரைட்டுன்னு சொல்ல வரலைம்மா! தப்பு. ரைட்டு தெரியாம காரியங்கள் பழக்கிக் கொடுத்துட்டாங்கம்மா. உங்க மாதிரி பெரிய மனுசங்களுக்குக் கொடுக்கறா மாதிரி சந்தர்ப்பம் கொடுத்திருந்தா ப்ளாட்பாரம் பொறுக்கிங்களா வளர்ந்திருப்போமா, சொல்லுங்கம்மா? உங்களைத் தொட்டது ரைட்டுன்னு சொல்லலை. இப்ப, உங்க முகத்தைக் கிட்ட சரியாப் பார்த்ததும் 'அட! என்ன காரியம் செஞ்சுட்டடா படுபாவி' ன்னு எனக்கு உள்ளுக்குள்ளே வெள்ளம் பொங்கறா மாதிரி எம் மேலேயே வெறுப்பு வந்திருச்சும்மா... திருந்திட்டேன்னு சொல்ல வரலை; திருந்திடுவேன்னு காரண்டியாச் சொல்லலை; ஆனா செய்த தப்புக்கு எனக்கு உள்ளார ரொம்ப வருத்தப்படறேன்! அவ்வளவுதான் காரண்டியாச் சொல்ல முடியும். என்னடா, பாபு?" என்றான் பால்குண்டு.

"பாபு லேசான அழுகையுடன் சொன்னான்: "எங்கம்மாவை வெறுக்கணும் போலத்தாங்க தோணும். ஒரு சமயம் கொன்னுரலாம்னு தோணும். ஒரு சமயம் அவ



மேல பாவமா, ஏன் ஆசையாக்கூட இருக்கும்.... என்னங்க சொல்வேன், உங்களாலல்லாம் பீல் பண்ணிப் பார்க்க முடியாதுங்க: சொந்த அம்மாளுக்கே ஆள் புடிச்சுக்கிட்டு வரணும்னா என்ன வெறுப்பா இருக்கும்! அதாங்க எல்லாப் பொம்பளைங்க மேலேயும் வெறுப்பாயிடுச்சு! ஆனா அம்மா, எனக்கு ஏதாவது தண்டனை கொடுங்க! அய்யா, உங்க சம்சாரத்தை என்னை அடிக்கச் சொல்லுங்க, வாங்கிக்கறேன்...''

"நாங்க செஞ்சதுக்குச் சப்பைக்கட்டு கட்ட வரலை. நாங்க வேறே ஏதும் செய்திருக்க முடியாது! எங்களுக்கு ரௌடி வேலையைத் தவிர யாரும் ஏதும் கத்துத் தரலைங்க!''

அவன் சொன்னதை சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த ப்ரொபஸர் ராம்பிரகாஷ், "வா, அம்ரு போகலாம்!'' என்றார்.

"அம்மா, போகாதீங்க. ஏதாவது தண்டனை கொடுங்க. அப்பதான் எங்களுக்கும் நிம்மதி!''

"அடிச்சிடுங்கம்மா!''

அம்ரு மெல்ல மெல்ல அவர்கள் அருகே சென்றாள்.

"அம்ரு, வேண்டாம்!''

அம்ரு சுற்றுமுற்றும் பார்த்தாள். ஓரத்தில் நாற்காலி இருந்தது.

"வேண்டாம் அம்ரு! தேர் இஸ் நோ பாயிண்ட்!'' என்றார் ராம்பிரகாஷ்.

கிட்டச் சென்றாள். அம்ருதா கையைப் பலமாக ஓங்கி, பாபுவின் கன்னத்திலும் பால்குண்டுவின் கன்னத்திலும் லேசாக, மிக லேசாகத் தட்டினாள். "அடிச்சாச்சு! போகலாம்.''

அவர்கள் இருவரும் அறையை விட்டு வெளியே வந்தபோது வானம் வெண்பஞ்சு மேகங்கள் அத்தனையையும் புறக்கணித்து விட்டுச் சுத்த நீலமாக இருந்தது.

"என்ன சத்தத்தையே காணோம்? தண்டனை கொடுக்கவே இல்லையா, நீங்க?'' என்றார் தர்மராஜன்.

"ஆச்சு.''

சோமசேகர் அறைக்குச் சென்றார்கள். அவர் அப்போதுதான் கிளாஸில் காப்பி ஊற்றிக் கொண்டிருந்தவர், "வாங்க, வாங்க!'' என்றார்.

"என்ன ஆச்சு?''

"ஒண்ணும் ஆகலை.''



"ஆ மீன் நீங்க அவங்களை..."

"அடிக்கலை!"

"நான் அடிச்சாச்சு!"

"நீங்களா?"

"கன்னத்தில் ரெண்டு அடி செல்லமாத் தட்டினா!"

"என்ன ப்ரொபஸர் இது? தர்ம ராஜன்!"

இல்லை. சோமசேகர். தண்டனை கொடுக்கப்பட வேண்டியது அவங்களே இல்லை!"

"பின்னே யாரு?"

"அது பெரிய லிஸ்டுங்க!"

"என்ன சொல்றீங்க ப்ரொபஸர்?"

"அவங்களைப் படிக்க வைக்காத இந்த தேசம், அவங்களை உருவாக்கின இந்த சமூகம் — அதைத்தான் தண்டிக்கணும்!"

"சமூகத்தைச் சாட்சிக்கூண்டில் கொண்டு வந்து நிறுத்த முடியாது ப்ரொபஸர்!"

சமூகம்னு எல்லாரும் பேசறீங்க. அது யாரு. என்ன, எது...? ப்ரொபஸர்?"

"நீங்க. நானு. அம்ரு எல்லாரும்தான்! நாம பார்க்கற சினிமா. படிக்கிற பத்திரிகை எல்லாம்தான்."

"இதிலே குற்றவாளி யாரு?"

"நம்முடைய ஒட்டுமொத்தமான அலட்சியம்! apathy! இதை வீட்டில் போய் யோசிச்சுப் பாருங்க புரியும்." — ராம்பிரகாஷ் இப்போது தெளிவாகப் பேசினார்:

"சோமசேகர். நாம எல்லாரும் ஒவ்வொரு தடவை கனிவில்லாம. கருணையில்லாம இருக்கிற போதும், ஒவ்வொரு ஓட்டு போடாத போதும், ஒவ்வொரு முறை லஞ்சம் தர்றபோதும் ஒவ்வொரு முறை அநியாயங்களைச் சகிச்சுக்கிற போதும், ஒரு பாபுவையோ, பால்குண்டுவையோ உருவாக்கறோம்! நான் வர்றேன். தாங்க்ஸ்!"

ப்ரொபஸர் தம் காரில் ஏறிக் கொண்டு முன் கதவைத் திறந்துவிட. அம்ரு ஏறிக் கொண்டாள். இருவரும் மௌனமாகவே சென்றார்கள். விதான் சௌதா அருகில் ட்ராபிக் விளக்குக்காக நின்றபோது. பக்கத்தில் "ஹாய்!" என்று குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கையில், மோட்டார் சைக்கிளில் பாலாவை ஹெல்மெட்டைக் கழற்றியதும் தான் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. பின் சீட்டில் வர்ஷா தொத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். "ஹாய். ப்ரொபஸர்!" என்றாள். "ஹலோ வர்ஷா! எப்படி இருக்கே?" என்றார் ப்ரொபஸர்.

"இன்விடேஷன் கிடைச்சுதா?"

"என்ன இன்விடேஷன்?"

"கல்யாணம்." — தன்னையும் பாலாவையும் விரலால் காட்டினாள்.

"அப்படியா? கங்கிராட்ஸ்!"

"கட்டாயம் வரணும்! உட்லண்ட்ஸ். நோ ரிஸப்ஷன்!"

பச்சை விளக்கு கிடைக்க. இருவரும் ஒருவராக ஒட்டிக் கொண்டு சீறிப் புறப்பட. "பொருத்தமா இருக்கும் இல்லை?" என்றாள் அம்ருதா.

"ஆமாம் அம்ரு! ரொம்ப."

அம்ருதா ராம்பிரகாஷின் கையைப் பற்றிக் கொள்ள, அவர் அதை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டார்.

(முற்றும்)





துப்பறியும்
சூர்யா-கிரண்
நவின்
பிரதாப்
முல்லிக்
கல்தான் சமிக்ஞை காட்ட, அவன் ஆள் கிரண் வாயில் துணி அடைத்தான்.
கிரண் போலவே தோற்றமளித்த இன்னொரு பெண் அங்கு தருவிக்கப்பட்டாள்.
அந்தப் பெண் கிரண் உடைகளை அணிந்தாள். கிரணிடமிருந்த ஃபைல்களை எடுத்துக் கொண்டாள்.
கல்தான் இன்னொரு முறை புகைப்படத்துடன் ஒப்பு நோக்கினான்.
பேஷ்! யாருக்குமே நம் தந்திரம் தெரிய வராது!
அந்தப் பெண் மற்ற பயணிகளுடன் சேர்ந்துகொண்டாள்.
எல்லோரும் விமானத்தில் ஏறுங்கள்! நாங்கள் தேடிய நபர் இந்த விமானத்தில் இல்லை!
© INDIAN FEATURES SYNDICATE Bombay-400092
அவர்களுடைய ரகசியங்களையெல்லாம் இனி நமது கிரண் அறிந்து கொண்டு நமக்குத் தெரிவிப்பாள்!
விமானத்தைக் கடத்தியது என் பொருட்டுத்தானா...!
என்னைப் போலவே தோற்றமளிக்கும் ஒரு பெண் அவர்களுக்கு எங்கே கிடைத்தாள்?
7
(தொடரும்)

• பல்வேறு மாநில சட்டசபைகளில் நிறைவேற்றப்பட்ட 77 மசோதாக்கள், ஜனாதிபதியின் ஒப்புதலுக்காகக் காத்துக் கிடக்கின்றன — பார்லிமெண்ட் செய்தி.


(ஜனாதிபதி சட்டுபுட்டென்று கையெழுத்துப் போட வேண்டும் என்று ஒரு மசோதா நிறைவேற்றி விட்டால் போச்சு)

• வைகை, தாமிரபரணி பாசனப் பகுதிகளுக்கு உயர்மட்டக் குழு வருகை — செய்தி.

("அது சரி! தண்ணி எப்பங்க வரும்?" என்கிறார் ஒரு விவசாயி)

• போலீஸார் தன் புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்காதது பற்றி கவர்னரிடம் புகார் கொடுத்த வாலிபரை போலீசார் அடித்து, உதைத்தனர் — சேலத்துச் செய்தி.

(இரண்டாவது புகார் மீது இத்தனை சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிச்சயம் அந்த



கிண்டல்



வட்ட மேஜை

எல்லாம் எதிர்கால நன்மைக்குத்தான்!

• ஹெக்டே எனும் உத்தமத் தலைவனின் பார்வை இனி தேசம் முழுமைக்கும் தேவை. இது காலத்தின் கட்டாயம். இத்தனையும் நடந்தது எதிர்கால நன்மைக்குத்தான்.

புன்செய்புளியம்பட்டி. ஆர். ரத்தினசாமி.

• ஹெக்டே ராஜினாமாவிற்குப் பிறகு கர்நாடக அரசியல் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைத் தங்களின் நேரடி ரிப்போர்ட் அப்படியே படம் பிடித்துக் காட்டி விட்டது. காலம் கடந்து வந்தாலும் ஒரு



பயனுள்ள கட்டுரைத் தொகுப்புதான்!

வேலாயுதம்பாளையம். எம். குணசேகரன்.

• ஹெக்டே பற்றி மற்றவர்கள் எப்படி விமர்சித்தாலும், கர்நாடக மக்கள் இன்னும் அவரைத் தூய்மையானவர் என ஒருமித்த குரலில் அபிப்பிராயப் படுகிறார்களே, அதுவே ஹெக்டேவுக்கு அசுர பலம்!

திருத்துறைப்பூண்டி. ஜெயந்திப்ரியன்.

• ஒரு பிரதமர், ஒரு முதல்வரின் காலை வாரி விடுவதும், அவரைக் கவிழ்க்க நினைப்பதும் வேதனைப்பட வேண்டிய ஒன்று! சீரியஸான விஷயத்தை நகைச்சுவையாக அட்டையில் அளித்த சுபா பதிக்கு ஜே!

குத்தாலம். எஸ். ராஜா.

• சாகாவரம் பெற்ற சாதனைகள் படு ஜோர்! மிஸ்டர் செம்பியன்! தொடரட்டும் உங்கள் பணி!

வேலூர். பொ. பொற்செல்வன்.

• 'பூகம்பத்தை விடப் பயங்கரம்' என்ற தங்களது

வாலிபர் எதிர்பார்த்திருக்க மாட்டார்!)

• அமெரிக்க டெலிவிஷனில் ராமாயணம் — செய்தி.

(அங்கேயாவது மணமகன் இடையென்று முகூர்த்தத்தையும் மறந்து விட்டு, டி.வி. பார்க்கப் போகாதிருப்பார் என நம்புவோம்)

• ஒரே நேரத்தில் இரு நிகழ்ச்சிகளைப் பார்க்க வசதியாய் டெலிவிஷன் அறிமுகம் — செய்தி.

சுண்டல்

(ஒற்றைத் தலைவலியே தாங்க முடியாத போது, இரட்டைத் தலைவலியா என்று பெருமூச்சு விடுகிறார் ஒரு குடும்பத் தலைவி)

• கன்றை இழந்த பசுவுக்காகத் தன் மகனையே தேர்ச் சக்கரத்தில் பலியிட்ட மனுநீதிச் சோழன் சிலை உயர்நீதிமன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

(அடக்கடவுளே! தூக்குத் தண்டனையே ஒழிக்கப் பட வேண்டும் என்று உலக முழுதும் கருத்து வலுத்து வரும் இந் நாளில் நமது நீதிபதிகளுக்கு இப்படி ஒரு முன்னுதாரணத்தையா ஞாபகப் படுத்துவது?)

— மௌஷ்மி.



தலையங்கம் கண்டேன். பொது வாழ்வில் அக்கறை கொண்டவர்களின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

திண்டுக்கல், சோ. குப்பண்ணா.

• பரிசு பெற்ற நால்வரின் பேட்டி நெஞ்சைத் தொட்டது. ஓர், 'எழுத்தாளன்' ஆவதற்கு என்னென்ன பாடுபட வேண்டும் என்பதைக் கட்டுரையிலிருந்து அறிந்தோம்! என் போன்ற இளைஞர்களுக்கு, இக் கட்டுரை போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய, அரிய பொக்கிஷம்!

குத்தாலம், வி. சுந்தரராமன்.

• 120 வயது சூப்பர் தாத்தா டாக்டரிடமே செல்லாமல் இருப்பதில் வியப்பொன்றுமில்லை... அவர்தான் ஒரு சினிமா கூடப் பார்க்கவில்லையே! அதுதான் ரகசியம்!!

கோவை, க.மார்த்தி.

• 'தொடுவான உறவுகள்' சிறுகதை சிவசி சூப்பர்! மிகவும் நாசூக்காக, சாதுர்யமாக, திருமண உறவு எப்படி இருக்க வேண்டும் என்று விவரித்த ஆசிரியர் தமயந்தியை நிச்சயமாக அனைவரும் பாராட்டியே ஆக வேண்டும்.

தக்கோலம், ஆ. புகாரி.

• வையவனின் 'என் சின்னக் குருவியின் சங்கீதம்' மனித நேயத்தைப் பிரதிபலித்த சத்தான சிறுகதை. கமியின் அந்த கணநேர சந்தோஷத்திற்காக, அவள் கணவன் சுரேந்திரனின் மரணத்தையே காலாவதியாக்கும், நிவேதிதாவின் பாத்திரம் நெஞ்சைத் தொட்டது.

சென்னை — 52, ஜமால் மொய்தீன்.

• 'காயப்படுத்தும் அஸ்திரங்கள்' உண்மையிலேயே உள்ளத்தைக் காயப்படுத்தியது! 'கடமைகளைச் செய்வதற்கும் நியாயமாக நடப்பதற்கும் தண்டனைகள் கிடைக்கக் கூடுமானால் அத்தகைய தண்டனைகள் பெருமைக்குரியவை அன்றோ!' என்ற வாக்கியத்திலேயே கதாபாத்திரம் உயிர் பெற்று விட்டது.

அவினாசி, பி. சாந்தாமணி.

• காதல், வீரம், நட்பு, நகைச்சுவை — இவற்றின் கலவைத் தேன்பாகாக இனித்த ஓர் இலவச இணைப்பை அளித்ததற்கு மிக்க நன்றி.

ஸ்ரீரங்கம், வி. சௌந்திரராஜன்.

• காதல் இழையில் ஒரு சுதந்திரப் போராட்ட சரித்திரத்தைப் பின்னிய அமரர் கல்கியின் 'மாடத்தேவன் சுனை' மனத்தை விட்டு நீங்காத ஒரு கதை.

ஸ்ரீரங்கம், மேகதூதன்.

• பத்திரிகைகளின் ஆதார உரிமைகளைப் பறிக்கும் அவதூறு சட்ட மசோதா பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ளதையும், அதன் தன்மைகளையும் அறிவோம். இது ஏதோ பத்திரிகையாளர்களுக்கும், அரசுக்கும் இடையே ஆன பிரச்னை மட்டும் அன்று. நம்மைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்பதை ஒரு குடிமகன் அறிந்து கொள்ளும் உரிமையும் — right to know — மறுக்கப்படுவதால், இது ஒவ்வொரு குடிமகன் சம்பந்தப்பட்ட பிரச்னையும் ஆகும்.

ஜனநாயக அமைப்பிற்கும், அதன் காரணமாகப் பொது மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதி ஆகும். எனவே இந்த மசோதாவிற்கு ஒப்புதல் மறுக்கும்படி ஜனாதிபதி அவர்களை வற்புறுத்தி கல்கி வாசகர்கள் ஒவ்வொருவரும் கடிதம்/தந்தி அனுப்ப வேண்டும்.

சென்னை — 20, மாலன்

ராஜமோகன் காந்தி

ஆந்திரத்தை அளித்தார்; சென்னையைக் காத்தார்!

ஆந்திரா பிரிவினைக்குரிய காலம் வந்துவிட்டது. தேர்தலுக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, அநேகமாக எல்லா தெலுங்கு எம். எல். ஏக்களும் தனி ஆந்திர மாநிலத்துக்காகப் போராட்டக் குரல் எழுப்பியிருந்தனர். இப்போது சட்டசபையில் எதிர் அணியில் இருந்த ஆந்திர எம். எல். ஏக்கள் அனைவரும் அவையில் தெலுங்கிலேயே பேசினார்கள். ஆந்திர மாநிலம் அமைவதைத் துரிதப்படுத்த அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. ராஜாஜி, அவர்கள் பேச்சைப் புரிந்து கொண்டதோடு சில சமயம் தெலுங்கிலேயே பதிலும் அளித்தார். மொழி வாரி மாநிலங்கள் அமைவதால் நன்மைகள் உண்டு என்று மகாத்மா கருதினார். ஆனால் ஸி. ஆர். இதில் மாறுபட்ட கருத்து உடையவர். பல்வேறு மொழியினர் ஒருவரோடு ஒருவர் உறவாடி, தேசிய ஒருமைப்பாடு வளர்வதும், நாட்டின் பொருளாதார மேம்பாடும் மொழிவாரி மாநிலங்கள் அமைவதால் தாமதப்படுத்தப்படும் என்றே கருதினார். ஒரு சமயம், மொழிவாரி மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கருத்து 'நாடோடித்தனமானது' (tribal) என்று அவர் குறிப்பிட்டார். இது பெரும் சலசலப்பை உருவாக்கியது. நேரு மட்டுமின்றி, காலஞ்சென்ற பட்டேலும் கூட ராஜாஜியின் கருத்தைத்தான் கொண்டிருந்தனர். ஆனால் எல்லா எதிர்ப்பையும் தெலுங்கு மொழி அபிமானமும் ஆந்திரப் பிரதேசப் பற்றும் வெற்றி கொண்டுவிட்டன. ஆந்திர மாநிலம் அமைய வேண்டும் என்பதற்காக உண்ணாநோன்பிருந்து காலமானார் பொட்டி ஸ்ரீராமுலு. இதையொட்டி நடந்த கலவரங்கள் ஒரு திருப்புமுனையாக விளங்க, ஆந்திர மாநிலம் அமைவதற்கான சில அடிகளைப் புதுதில்லி எடுத்து வைத்து, அறிக்கையும் விட்டது.

'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆந்திர மாநிலத்தை அமைப்பது நல்லது' என்பது 1952 டிசம்பரில் நேருவுக்கு ஸி. ஆர். வழங்கிய யோசனை. இதற்கு நேருவும் ஒப்புக் கொண்டார். கூடவே ஸி. ஆர்., 'சென்னை மாநகர் ஆந்திராவுக்குப் போவது என்ற பேச்சுக்கே இடமில்லை' என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தார். மாநகரில் தமிழர்கள், எண்ணிக்கையால் தெலுங்கர்களை விட மிக அதிகமான அளவில் இருந்தனர் என்பதை ஜனசங்கியை உறுதிப்படுத்தியிருந்தது. ஆனால் சென்னை அருகாமையில் இருந்தாலும், அதனுடன் தெலுங்கர்களுக்கு இருந்த பழங்காலத் தொடர்பாலும், சரித்திரத்தை அவர்கள் படித்திருந்த விதத்தாலும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்ட பல தெலுங்கர்கள், சென்னையை ஆந்திரத்திலிருந்து பிரிக்கவே முடியாது என்பதாகக் கருதினார்கள். ஸி. ஆர். இதனை ஒப்புக் கொள்ளக் கண்டிப்பாக மறுத்தார். சென்னையை இரட்டைத் தலைநகராக்க வேண்டும் என்றும், மத்திய ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாக்க வேண்டும் என்றும் கூறப்பட்ட யோசனைகளையும் நிராகரித்தார். ஆந்திர மாநிலத்தின் தாற்காலிகத் தலைநகராகச் சென்னையைப் பயன்படுத்திக் கொள்ளக்கூட அவர் அனுமதிக்கத் தயாராக இல்லை.

நேரு உள்படப் பலர், இவ் விஷயத்தில் ராஜாஜி வீண் பிடிவாதம் காட்டுகிறார் என்றும், ரொம்பக் கடுமையாக நடந்து கொள்கிறார் என்றும் கருதினார்கள். ஆனால் பிரிவினை என்று ஏற்பட்டால், அது, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போலிருக்க வேண்டும்; முடிந்த முடிவாக விளங்க வேண்டும் என்று ராஜாஜி எண்ணினார். அரைகுறையாகக் காரியம் செய்தால், நீடித்த சண்டை பூசலுக்கு வித்திட்டதாகும் என்பதை உணர்ந்திருந்தார். தாற்காலிகத் தலைநகருக்கு இப்போது சம்மதித்தால் அதையே நிரந்தரத் தலைநகருக்கான முதல்படியாகத் தெலுங்கு அரசியல்வாதிகள் கருதக்கூடும். தமிழர்கள் பலத்த எதிர்ப்புக் காண்பிப்பார்கள். பிரகாசம், சென்னையை இரு மாநிலங்களுக்கும் பொதுவான நகரம் என்று வர்ணித்ததோடு, அதனை ஆந்திராவுக்கே பின்னால் உரிமையாக்கிக் கொள்ள ஒரு போராட்டக் குழுவும் அமைத்திருந்தார். ஸி. ஆருடைய உறுதியான நிலையில் விவேகம் இருந்தது. ஆனால் வெளிப்பார்வைக்கு அவரை நடுநிலையற்றவராகவும் நெஞ்சில் ஈரமற்றவராகவும் காண்பித்தது. தெலுங்கர்கள் கண்களுக்குத் தாம் இப்படி தோற்றமளிப்பதாக ராஜாஜியே சொன்னார். அவருடைய ஆந்திர நண்பர் காளேஸ்வர ராவ், "சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டு உயர்ந்து, இரு சாராருக்கும் பொதுவான தலைவராக நீங்கள் விளங்க வேண்டும்" என்று வற்புறுத்தினார். இதற்கு நேர்மாறாக அன்று தில்லியில் எம்.பி.யாக

இருந்த இன்றைய ஜனாதிபதி ஆர். வேங்கடராமன், ராஜாஜிக்குப் பின்வருமாறு எழுதினார்: "சென்னை நகரம், ஆந்திராவுக்கும் தாற்காலிகத் தலைநகரமாக விளங்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை உருவாக்கி, வளர்ப்பதற்காக ஆந்திர அரசியல்வாதிகள் இப்போது தில்லிக்கு வந்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு தவறான முடிவு எடுக்கப்படாமலிருக்க நீங்கள் உங்களுடைய முழு செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும் என்பதில் நான் குறியாக இருக்கிறேன்."

தமிழ்நாட்டுக்குச் சென்னையைக் காத்துத் தருவதில் ராஜாஜி வெற்றி கண்டார். அதே நேரத்தில், தாம் நடுநிலை பிறழ்ன்று நடந்து கொள்வதாகத் தம் மீது குற்றம் சுமத்த வேண்டாம் என்றும் ஆந்திரர்களை வருந்திக் கேட்டுக் கொண்டார். இதே சமயத்தில், திருப்பதி தமிழ்நாட்டுக்கே உரியது என்று தமிழர்கள் பலர் எழுப்பிய கோரிக்கையையும் நிராகரித்தார். அங்கே தெலுங்கு மக்கள்தான் அதிகம் வசித்தனர். "என்னுடைய மூதாதையரில் ஒருவரான நல்லான் சக்கரவர்த்தி திருப்பதியில் வசித்திருக்கலாம். பழைய இலக்கிய ஏடுகள் திருப்பதியைத் தமிழ் நாட்டின் வடக்கு எல்லையாகக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் இன்று நாம் கவனிக்க வேண்டியது தெலுங்கு, தமிழ் மக்களின் எண்ணிக்கையைத்தான்" என்று விளக்கினார் ஸி.ஆர்.

"தெளிவாகவும் எளிமையாகவும் சொல்வதென்றால் எனக்கு எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லை" என்று ஸி.ஆர். சட்டசபையில் ஆந்திரா பிரச்னை பற்றிப் பேசுகையில் கூறினார். "ஆனால் என் மீது சுமத்தப்பட்டிருக்கும் அவதூறுகள் என்னைக் காயப்படுத்துகின்றன. ஒரு தமிழ் வெறியனாக நான் நடந்து கொண்டிருக்கிறேன் என்ற பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் நான் ஆந்திரர்களை மதிக்கிறேன். அவர்கள் நல்லெண்ணத்தைப் பெறவே விரும்புகிறேன்."

ஆந்திர மாநிலம் உருவாகும் என்பது உறுதியானதுமே, சென்னை மாகாணத்தை ஜனாதிபதி ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்து விடலாம் என்று ஸி.ஆர். நேருவுக்கும் ஸ்ரீ பிரகாசாவுக்கும் யோசனை கூறியிருந்தார். தாம் ராஜினாமா செய்து விடுவதாகவும், அதிகாரிகள் பிரிவினை சம்பந்தப்பட்ட காரியங்களைக் கவனிக்கலாம் என்றும் சொல்லியிருந்தார். இவ்வாறு செய்தால் ஸி.ஆர். பாரபட்சமாக நடந்து கொண்டார் என்றும், அநீதி இழைத்து விட்டார் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழ இடமிராது. ஆனால் நேரு இத்தகைய யோசனையை ஏற்பவரல்ல. கவர்னரோ, "நீங்கள் விலகுவதானால் நானும் விலகிக் கொள்ள அனுமதியுங்கள்" என்று ஸி.ஆரைக் கேட்டுக் கொண்டார். நல்லவேளையாக அவநம்பிக்கைகள் மறக்கப்பட்டு, 1953 அக்டோபர் முதல் தேதி ஆந்திரா பிரிவினை அமுலுக்கு வந்த போது நல்லெண்ணம் நிலவியது. சட்டசபையில் தமிழர்கள் ஆந்திர மாநிலத்தை வரவேற்று வாழ்த்தினார்கள். தெலுங்கு எம்.எல்.ஏக்கள் தங்கள் லட்சியம் ஈடேறிய மகிழ்ச்சியுடன் ஆங்கிலத்தில் பேசி விடைபெற்றார்கள்.

"நமக்குத் தொந்தரவு கொடுக்க யாருமில்லை என்பதை நாம் உணரும் போது நமது வருத்தம் அதிகரிக்கும்!" என்றார் ஸி.ஆர். "ஆந்திர கம்யூனிஸ்டுகளின் பிரகாசமான, இளம் முகங்களை இனி நாம் பார்க்கப் போவதில்லை. அவர்களுடன் சொற்போர் நிகழ்த்தப் போவதில்லை."

அந்தக் கம்யூனிஸ்டுகளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களைத் துறந்து விட்டு, பிரகாசம் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்து விட்டார்! ஆந்திராவின் முதல், முதல் மந்திரியாகவும் ஆகி விட்டார்! அவரை வரவேற்று ஆதரிப்பது தவிர ஆந்திரா காங்கிரஸுக்கு வேறு வழியில்லை. அவர்கள் ஆதரிக்காது போனால் கம்யூனிஸ்டுகள் பிரகாசத்தை ஆதரித்து முதல்வராக்கத் தயாராயிருந்தனர். பார்க்கப் போனால் ஆந்திர மாநிலம் அமைய வேண்டும் என்பதற்காகப் பிரகாசத்தை விட அதிகமாகப் பாடுபட்டவர்கள் யாருண்டு? இப்படித்தான் நடக்க வேண்டும் என்று ஸி.ஆர். நண்பர்களிடம் மட்டுமின்றிப் பகிரங்கமாகவே கூடப் பேசியிருந்தார்.

"கம்யூனிஸ்டுகளின் துரதிர்ஷ்டம், பிரகாசம் அவர்களைத் துறந்து காங்கிரஸில் மீண்டும் சேர்ந்து விட்டார்" என்று ஸி. சுப்ரமணியம் சட்டசபையில் பேசினார். "இதில் ராஜாஜியின் பங்கு மிக அதிகம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே!"

தாம் முதல்வராவது உறுதி என்பது தெரிந்தும் பிரகாசம், ராஜாஜி வீட்டுக்குப் போனார். தம்மை விட ஆறு வயது மூத்தவரான பிரகாசத்தை ஸி.ஆர். படிகளில் ஏறி வர அனுமதிக்கவில்லை. தாமே இறங்கி வந்து, பிரகாசத்தின் காரிலே ஏறி அமர்ந்தார். நடந்தவை குறித்துத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். ஆந்திர கேசரியின் கண்கள் குளமாயின.

(தொடரும்)



• ஸி. எஸ்: சட்டசபையில் கிண்டல்.



• ஆர். வி: தில்லியிலிருந்து எச்சரிக்கை.



''என் வீட்டில் மூணு தலைமுறையா ஒரு குடும்பம் குடியிருக்குது!''

''இதை ஏன் வருத்தமா சொல்லுறீங்க?''

''இரண்டு தலைமுறையா வாடகை பாக்கி வச்சுருக்காங்களே....''


— மணியன் தர்மலிங்கம்.

''என் மனைவிக்கு எல்லா மதமும் சம்மதம்!''

''அப்படியா?''

''ஆமா! தீபாவளியோ, ரம்சானோ, கிறிஸ்துமஸோ, எதானாலும் தன்னுபடியைக் காரணம் காட்டிப் புடைவை வாங்கிடுவா!''

— பொடுசி.





''பால் வியாபாரத்தில்'' கிடைத்த இலாபத்தை வச்சு என்ன பண்ணப் போறீங்க...?

எனக்குச் சொந்தமா ஒரு பெரிய வாட்டர் டேங்க் கட்டப் போறேன்....!


— சரடிகுளம் ஜெயபாரதிப்ரியா.

தொடர்ந்து நான்கு வருடங்களாகப் பிச்சைக்காரரே இல்லாமல், ஒரு பிச்சைக்கார விடுதியை நடத்தி வரும் பெருமை திருச்சி முனிசிபாலிடிக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறது. எடமலை பட்டிப்புதூர் என்ற இடத்தில், ஏழு ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கும் இந்த விடுதிக்காக வருடம் தோறும் சுமார் 31 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது. இந்த விடுதியின் கைவினைத் தொழில் ஆசிரியர், சமையல்காரர் மற்றும் காவல்காரர் ஆகியோர் வேலையில்லாமலேயே தங்கள் சம்பளத்தை பெற்று வருகிறார்களாம். நாம் கஷ்டப்பட்டு செலுத்தும் வரிப்பணம் இப்படியா வீணடிக்கப்பட வேண்டும்....?

— லதா.

ஆதாரம்: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'





ஒலிம்பிக் வளையங்கள் ஐந்து உண்டல்லவா. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நிறமுண்டு: அந்த நிறங்களில், நீலம் ஐரோப்பாவுக்கு, மஞ்சள் ஆசியாவுக்கு, கறுப்பு ஆப்பிரிக்காவுக்கு, பச்சை அமெரிக்காவுக்கு, சிவப்பு ஆஸ்திரேலியாவுக்குமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

— ஆர். ஆர். பூபதி.

71-ல் ஏழு!



கலிவரதன்!

தி.மு.க.வுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கருதும் ஜனதா பிரிவினர், கலிவரதனைத் தாக்கி, அவர் சட்டையைக் கிழித்தனர் என்பது சமீபத்திய செய்தி. புதிதாக உருவாகியுள்ள தேசிய முன்னணியில் வேறு பல கட்சிகளுடன் ஜனதாவும் தி.மு.க.வும் உறுப்பினர்கள். தேசிய முன்னணி தமிழகத்தில் பலம் பெற உழைப்பவரில் ஜனதா கலிவரதன் ஒருவர். செப்டம்பர் 17–ம் தேதி முன்னணியின் துவக்க விழா சென்னையில் நடக்கவிருக்கிறது. கலிவரதனைச் சந்தித்து, "71 அம்சங்களில் கட்சிகள் இணைகின்றனவாமே? அவற்றில் முக்கியமான ஏழினைக் குறிப்பிடுங்களேன்" என்று கேட்ட போது, மூப்பனாரின் தவறான பிரசாரத்தை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, முதலில் அவர் குறிப்பிட்டது மொழிக் கொள்கையைத்தான்:

மொழி

1. மொழிக் கொள்கையில் பண்டித நேரு அளித்த உறுதிமொழி அமுல் நடத்தப்படும். அதாவது இந்தி பேசாத பகுதியில் உள்ள மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்கும். இந்தி திணிக்கப்பட மாட்டாது. இந்திய மொழிகளை வளர்க்க, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேச ஒற்றுமை; ஒருமைப்பாடு

2. தேச ஒற்றுமை, ஒருமைப்பாடு, மற்றும் பாதுகாப்பு ஆகியவை பலப்படுத்தப்படும். வகுப்புவாத, பிரிவினை வாத மற்றும் சீர்குலைவுச் சக்திகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்படும்.

பொருளாதாரத் திட்டங்கள்

3. வறுமை ஒழிப்பு, வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல், சம்பளங்கள், வருமானங்கள் ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதன் மூலம் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பது பொருளாதாரக் கொள்கையின் லட்சியமாக இருக்கும். பிராந்திய ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படும். லஞ்ச ஊழல் மடியும்.

4. பொருட்களையும், தொழில் நுட்ப முறைகளையும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உண்மையான சுதேசி இயக்க உணர்வின் அடிப்படையில், அவற்றை இங்கேயே உற்பத்தி செய்ய ஊக்கம் அளிப்பதன் மூலம் அந்நியச் செலாவணி நிலவரத்தில் உள்ள ஆபத்தான நிலைமை சீர்ப்படுத்தப்படும்.

5. பொருளாதார சக்தியைப் பரவலாக்கும் ஒரு சாதனமாக சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் ஊக்கம் அளிக்கப்படும். கிராமங்களில் வேலை வாய்ப்பு பெருக வழி உண்டாகும்.

சிவில் உரிமைகள்

6. தேர்தல்களில் பண பலம், அடியாள் பலம், அரசாங்க அமைப்புக்களின் துஷ்பிரயோகம் ஆகியவற்றை அகற்றுவதற்காகத் தேர்தல் சீர்திருத்தங்கள் உடனடியாகச் செய்யப்படும்.

அயல்நாட்டுக் கொள்கை

7. இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து எல்லா தரப்பினருக்கும் திருப்தியளிக்கும் வகையில் பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படும்.

"ஏழுபத்தோரு அம்சங்களுமே முக்கியமானவைதான்: எடுத்துக்காட்டாக ஏழு" என்று முடித்தார் கலிவரதன்.

பேட்டி: ப்ரியன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

ஒற்றை ரோஜா

அமரர் **கல்கி**



18-9-88 இதழ்

கல்கி இலவச இணைப்பு

ஒன்றாம் அத்தியாயம்

ஒரு சமயம் நான் பாபநாசத்துக்குச் சென்றிருந்தேன். எதற்காகப் போனேன் என்று கேட்டால் நீங்கள் ஒருவேளை சிரிப்பீர்கள்; சிலர் அனுதாபப்படுவீர்கள். பி. ஏ. பரீட்சைக்கு மூன்று தடவை போய் மூன்று தடவையும் தவறிவிட்டேன். இதனால் வாழ்க்கை கசந்து போயிருந்தது. ஒரு மாதிரி பிராணத் தியாகம் செய்துவிடலாம் என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். திடீர் திடீர் என்று நமக்குத் தெரிந்தவர்கள் யார் யாரோ இறந்து போய்விட்டதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், நாம் அவர்களைப் பின்பற்றலாம் என்றால், அதற்கு வழி வகை தெரிவதில்லை. யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். பாபநாசத்தில் கல்யாணி தீர்த்தம் என்பதாக ஓர் இடம் இருக்கிறதென்றும், அதிலேதான் ஆசிரியர் வ.வே.சு. ஐயர் விழுந்து உயிரை இழந்தார் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அந்தப் பெரியாரைப் பின்பற்றலாம் என்று எண்ணிக் கொண்டுதான் பாபநாசம் போனேன்.

இரண்டு காரணங்களினால் நான் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்ற முடியவில்லை. முதலாவது, அந்தக் கல்யாணி தீர்த்தம் இருக்கிறதே, அது பார்க்க மிகப் பயங்கரமாயிருந்தது. தென்னைமர உயரத்திலிருந்து மூன்று தண்ணீர்த் தாரைகள் 'சோ' என்ற சப்தத்துடன் கீழேயுள்ள அகண்ட பள்ளத்தில் விழுந்து கொண்டிருந்தன. அந்தப் பள்ளத்தில் தண்ணீர் நிறைந்து ததும்பி அலை மோதிக் கொண்டிருந்தது. சிறிய மரக்கிளை ஒன்று அத்தடாகத்தில் விழுந்து அங்குமிங்கும் சுழன்று அலைக்கழிக்கப்படுவதைப் பார்த்தேன். இதிலே விழுந்தால் நம்முடைய தேகமும் இப்படித்தானே அலைக்கப்படும் என்று நினைத்த போது என் தைரியம் குலைந்து விட்டது. அன்னை பெற்றெடுத்த நாளிலிருந்து எத்தனை கஷ்டப்பட்டு வளர்த்த உடம்பு இது!

அங்கிருந்து இறங்கி வந்து, கீழே பாபநாசம் கோவிலுக்குப் பக்கத்தில் பளிங்கு போன்று தெளிந்த நீரோடும் நதியின் கரையில் உட்கார்ந்து யோசித்த போது, எதற்காக உயிரை விடவேண்டும் என்றே தோன்றிவிட்டது. நதியின் வெள்ளத்தில் மந்தை மந்தையாகத் தங்கநிற மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. அவை மேலே வரும் போதும் புரண்டு விழும் போதும் என்னமாக ஜொலித்தன! இந்த மீன்கள் இவ்வளவு குதூகலமாக விளையாடிக் கொண்டு திரிகின்றனவே, பி. ஏ. பரீட்சை தேறாததனாலே இவற்றுக்கு என்ன குறைவு வந்துவிட்டது! இதோ இந்த மரங்களில் எத்தனை விதமான பட்சிகள் எவ்வளவு ஆனந்தமாகப் பாடிக் கொண்டு வாழுகின்றன! இவை பி. ஏ. பரீட்சையில் தேறவில்லையே! இதோ இந்தக் குரங்குகளைத்தான் பார்க்கலாமே! பி. ஏ. பட்டம் பெறவில்லையே என்று அவை கொஞ்சமாவது கவலைப்படுகின்றனவா?

அறிவில்லாத பிராணிகளும் பட்சிகளும் இவ்வளவு உல்லாசமாக வாழ்க்கை நடத்தும் போது நாம் மட்டும் பி. ஏ. பரீட்சை தேறவில்லை என்பதற்காக ஏன் உயிரை விட முயல வேண்டும்?

இத்தகைய முடிவுக்கு வந்து திரும்பித் திருநெல்வேலி போய்ச் சேர்ந்தேன். சென்னைக்கு இரண்டாம் வகுப்பு டிக்கட் எடுத்துக் கொண்டு ரயில் வண்டியில் ஏறினேன்.

நான் ஏறி இருந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் நான் ஒருவனேதான். ஆகையால், உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போய் விட்டது. ரயில் நின்ற ஒவ்வொரு நிலையத்திலும் வண்டியிலிருந்து கீழே இறங்கிப் பிளாட்பாரத்தில் சிறிது நேரம் உலாவி விட்டு ரயில் புறப்படும் சமயத்தில் மறுபடியும் ஏறிக் கொண்டேன். ரயில் நிலையங்களில் சாதாரணமாய் நடமாடும் பலதரப்பட்ட ஜனங்களைப் பார்ப்பதில் ஒருவித உற்சாகம் ஏற்பட்டது...

விருதுநகர் சந்திப்பில் அந்த உற்சாகம் சிகரத்தை அடைந்தது. ஆம்; முதலில் நான் பார்த்தது — என் கண்ணையும் கவனத்தையும் கவர்ந்தது — ஓர் ஒற்றை ரோஜாப் பூதான்!

அந்த ஒற்றை ரோஜாப்பூ ஒரு பெண் மணியின் எடுத்துக் கட்டிய கூந்தல் மீது வீற்றிருந்தது. 'கொலு வீற்றிருந்தது' என்றும் சொல்லலாம்.

அருகில் சென்ற போது சட்டென்று அவள் முகம் என் பக்கம் திரும்பியது. ஆகா! பார்க்கிறவர்களின் கண்ணில் வந்து தாக்கி வேதனை உண்டாக்கும் சௌந்தரியமும் உண்டோ! அத்தகைய அபூர்வ சௌந்தரியமுள்ள முகத்தை அவள் என் பக்கம் திருப்பினாள். ஒரு புன்னகையும் புரிந்தாள். நிலா வெளிச்சத்தில் முல்லை பளீரென்று மலர்ந்தது போலிருந்தது. நான் எப்போதும் சங்கோசமோ கூச்சமோ அதிகம் இல்லாதவன்தான். ஆயினும் அவளிடம் அப்போது நானாக ஒரு வார்த்தை பேசமுயன்றிருந்தால்என் பிராணனே போயிருக்கும். பாபநாசத்தில் நடந்திருக்க வேண்டியது விருதுநகர் ரயில்வே நிலையத்தில் நடந்திருக்கும். அந்த மாதரசி அதற்கு இடம் வையாமல் என்னிடம் அவளாகவே பேசி விட்டாள். "தயவு செய்து சிற்றுண்டிச் சாலைக்காரனை எனக்கு ஒரு கப் டீ கொண்டு வரும்படி சொல்ல முடியுமா?" என்றாள். "பேஷாகச் சொல்கிறேன்!" என்று சொல்லி விட்டு, வேகமாக நடந்து போய், ஸ்பென்ஸர் ஆள் ஒருவனைப் பிடித்து, பிஸ்கோத்தும் டீயும் கொண்டு போய்க் கொடுக்கும்படி சொன்னேன். அப்புறம் ஏதோ சந்தேகம் தோன்றவே இந்தியச் சிற்றுண்டிச் சாலைக்கும் போய்ச் சிற்றுண்டி காப்பி கொண்டு போய்க் கொடுக்கும்படியும் சொன்னேன். பிறகு சற்றுத் தூரம் பிளாட்பாரத்தில் நடந்து விட்டுத் திரும்பினேன். திரும்பு காலையில் அந்தப் பெண்ணின் வண்டிக்கருகில் நின்று, "டீ வந்ததா?" என்று கேட்டேன். அவள் திரும்பிப் பார்த்து முகமலர்ச்சியுடன், "ஓ! ஒன்றுக்கு இரண்டு மடங்காக வந்தது. நீங்கள் கூட வந்து சாப்பிடலாம்!" என்றாள்.



ஒரு கணம், அந்த வண்டியில் ஏறிக் கொள்ளலாமா என்ற பைத்தியக்கார எண்ணம் உண்டாயிற்று. நல்ல வேளையாக, வண்டியின் வெளிப்புறத்தில் 'பெண்களுக்கு மட்டும்' என்று போட்டிருப்பதைப் பார்த்திருந்தேன். ஆகையால், "இல்லை! நான் சாப்பிட்டாயிற்று!" என்று சொல்லி விட்டு என் வண்டியில் போய் ஏறிக் கொள்வதற்கு நகர்ந்தேன். அந்தப் பெண் மறுபடியும், "இன்னும் ஓர் உதவி எனக்காகச் செய்ய முடியுமா? இந்த ரயிலில் காக்கி புஷ்கோட் அணிந்த மூன்று மனிதர்கள் எந்த வண்டியிலாவது இருக்கிறார்களா? அவர்களில் ஒருவர் கடற்படையைச் சேர்ந்தவர் மாதிரி தொப்பி அணிந்திருப்பார்! ஆனால்... ஒரு வேளை, வண்டி புறப்படும் சமயம் ஆகிவிட்டதோ, என்னவோ?" என்றாள்.

"வண்டி புறப்படப் போகிறது! அதனால் பாதகமில்லை. நீங்கள் சொல்வது போன்ற மூன்று ஆசாமிகள் இந்த வண்டியில் இருக்கிறார்கள். என் ஜினுக்குப் பக்கத்து வண்டியில் அவர்கள் இருப்பதைச் சற்று முன்னால் பார்த்தேன்!" என்றேன். நான் சொன்னது உண்மையேதான். அதைக் கேட்ட அந்தப் பெண்ணின் புருவங்கள் வெகு இலேசாக நெரிந்தன. "சரி, ரொம்ப வந்தனம்" என்றாள். நான் போய் என் வண்டியில் ஏறிக் கொண்டேன்.

விருதுநகரிலிருந்து மதுரைக்கு ரயில் போனதே எனக்குத் தெரியவில்லை. அப்பெண்ணைப் பற்றிய சிந்தனையில் லயித்துப் போனேன்.

மதுரைச் சந்திப்பு வந்தது. கீழே இறங்கினேன். கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு உலாவத் தொடங்கினேன். 'பெண்கள் வண்டி'யில் அந்தப் பெண்ணைக் காணவில்லை. சிறிது ஏமாற்றத்துடன் மேலே நடந்தேன். என் ஜினுக்கு அருகில் பிளாட்பாரத்தில் ஒரு சிறிய கும்பல் நின்றது. யாருக்கோ மாலை போட்டு வழியனுப்பிக் கொண்டிருந்தார்கள். 'ஹிப் ஹிப் ஹுர்ரே!' என்ற கோஷமிட்டார்கள். அதில் என் கவனம் செல்லவில்லை. அந்தக் கும்பலுக்குச் சற்று அப்பால் நாலு பேர்

நின்று பேசிக் கொண்டிருந்த இடத்தில் என் கவனம் சென்றது. அவர்களில் மூன்று பேர் காக்கி 'புஷ்கோட்' ஆசாமிகள். நாலாவது நபர், என்னையறியாமல் என் கண்கள் தேடிக் கொண்டிருந்த பெண். அப்போது அவள் என் பக்கம் பார்க்கவில்லை. தலையில் அணிந்த ஒற்றை ரோஜாவிலிருந்துதான் அவள் என்று தெரிந்து கொண்டேன். அவள் ஏதோ வேடிக்கையாகப் பேசியிருக்க வேண்டும். மற்ற மூன்று பேரும் நகைத்தார்கள். எனக்கு ஒரே எரிச்சலாயிருந்தது. அவர்களிடையே போவதற்கும் தைரியமில்லை. அங்கிருந்து நகருவதற்கும் மனம் வரவில்லை. அவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள ஆவல் உண்டாயிற்று. நிற்கலாமா நகரலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த போது அவள் திரும்பினாள். என்னைப் பார்த்து விட்டாள். உடனே பழையபடி ஒரு முல்லைப் புன்னகை அவள் முகத்தில் பூத்தது. மறுபடி திரும்பி அவர்களுடன் பேசத் தொடங்கினாள். அங்கிருந்து அகல்வதே நலம் என்று தீர்மானித்தேன். திரும்பிப் போய் என் வண்டியில் ஏறிக் கொண்டேன். என்ஜின் இருந்த திக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன். எதற்காக என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா!



வண்டி புறப்படும் நேரம் ஆகிவிட்டது. இன்னும் அவள் ஏன் திரும்பி வரவில்லை? அந்த 'புஷ்கோட்' மனிதர்களுடன் அவர்களுடைய வண்டியில் ஏறிவிட்டாளா என்ன?.... இல்லை, அதோ அவள் வருகிறாள். வேகமாகவே நடந்து வருகிறாள். என்ன அழகான நடை! அவள் நடப்பதாகவே தோன்றவில்லை; மிதப்பதாகத் தோன்றியது. என் வண்டிக்கு அருகில் வந்ததும் என்னைப் பார்த்தாள். சற்றுத் தயங்கி நின்றாள். "வண்டி புறப்படப் போகிறதே!" என்றேன். என்னத்தைச் சொல்ல? அவள் சட்டென்று வண்டிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். வந்தவள் எனக்கு எதிரில் உட்கார்ந்து, என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

என் நெஞ்சு அபார வேகமுள்ள விமான என்ஜினைப் போல் அடித்துக் கொண்டது.

"பாருங்கள்! இப்போதெல்லாம் ரயிலில் தனியாகப் பிரயாணம் செய்வது அபாயம் என்று சொல்கிறார்களே! பெண்கள் வண்டியில் இன்னும் யாராவது பெண்கள் ஏறுவார்கள் என்று பார்த்தேன். ஒருவரும் ஏறவில்லை. ரயிலில் கொலைகூட நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். நானும் இந்த வண்டிக்கே வந்து விடலாமா என்று பார்க்கிறேன். நீங்கள் மதராசுக்குத்தானே போகிறீர்கள்!" என்று கேட்டாள்.

எல்லையில்லாத உற்சாகத்துடன் நான், "ஆமாம்; மதராஸுக்குத்தான் போகிறேன். நீங்கள் பேஷாக இந்த வண்டிக்கே வரலாம். சாமான்களைக் கொண்டு வரச் சொல்லட்டுமா? ஏ, போர்ட்டர்!" என்றேன்.

"இப்போது வேண்டாம்; அடுத்த ஸ்டேஷனில் பார்த்துக் கொள்ளலாம்!" என்று சொல்லி விட்டு அந்தப் பெண் இறங்கிச் சென்றாள்.

அவள் இறங்கிய உடனே, யாரோ ஒருவர் சடக்கென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். கையில் ஒரு பிரயாணப் பெட்டியும் வைத்துக் கொண்டிருந்தார். பெட்டியைப் பலகையில் வைத்து விட்டு என்னையும் போய்க் கொண்டிருந்த பெண்ணையும் இரண்டு மூன்று தடவை மாற்றி மாற்றிப் பார்த்தார். தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "மன்னிக்க வேண்டும்! ஒருவேளை இந்த வண்டி ரிஸர்வ் ஆகியிருக்கிறதோ?" என்றார்.

"ஆமாம்" என்று ஒரு பொய் சொல்லி அவரை இறங்கிப் போகச் சொல்லலாமா என்று என் மனத்தில் ஒரு கெட்ட எண்ணம் உதித்தது.

இதற்குள், கார்டு குழல் ஊதும் சத்தம் கேட்டது. ரயில் புறப்படுவதற்குள் அவள் வண்டியில் ஏறிவிடுகிறாளா என்று எட்டிப் பார்த்தேன். அந்த அழகிய ஒற்றை ரோஜாப்பூ கண்ணைக் கவர்ந்தது. அந்தப் பூவை

அணிந்தவள் வண்டியில் ஏறியதும், ரயிலும் நகர்ந்தது.

இரண்டாம் அத்தியாயம்

என் வண்டியில் ஏறிய மனிதர் "அப்பா! பயங்கரம்!" என்றார். அவரை ஏறிட்டுப் பார்த்தேன். படித்த நாகரிக மனிதராகக் காணப்பட்டார். வயது நாற்பது இருக்கும். ஐரோப்பிய உடை தரித்திருந்தார். அவருடைய கண்கள் ரயிலின் அபாய அறிவிப்பு விளக்கைப் போல் சிவப்பாக ஜொலித்தன.

சட்டைப் பையிலிருந்து ஒரு புட்டியை எடுத்து அதிலிருந்த பானத்தைக் கடகடவென்று வாயில் விட்டுக் கொண்டு குடித்தார்.

"ஐயோ! என்ன வெப்பம்! மரண தாகம் எடுத்து விட்டது!" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

பிறகு, என்னை நோக்கி, "அந்த அற்புதத்தைப் பார்த்தீரா?" என்றார்.

"எந்த அற்புதத்தை?" என்று கேட்டேன்.

"இந்த ஒற்றை ரோஜாப் பூவைத் தான்!" என்றார்.

"அதில் அற்புதம் என்ன?" என்று சிறிது கோபமான குரலில் கேட்டேன்.

"அற்புதம் என்னவா! ஆம், உமக்குத் தெரியாது. தெரிகிறதற்கு நியாயம் இல்லை. அந்த ஒற்றை ரோஜாப் பூவிலேதான் என் உயிர் இருக்கிறது!" என்று சொல்லி விட்டு, ஒரு விகாரமான புன்னகை புரிந்தார்.

அவர் ஏதோ அநுசிதமான பரிகாசம் செய்யப் போகிறார் என்று எண்ணினேன். ஆகையால், ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

"இன்னமும் எனக்குப் புரியவில்லை!" என்று கடுமையான குரலில் கூறினேன்.

"ஆமாம்; அந்த ஒற்றை ரோஜாப் பூவில்தான் என் உயிர் இருக்கிறது. ஆகையினாலேயே மூன்று நாளாகியும் அது வாடாமலிருக்கிறது!" என்றார்.

ஒற்றை ரோஜாப்பூ சிறிதும் வாடாமலிருப்பதின் அதிசயத்தை அது வரையில் நான் எண்ணிப் பார்க்கவில்லை. அது நிஜ ரோஜாப் பூவாயிருக்க முடியாது; நிஜ ரோஜாவைப் போல் அபூர்வ வேலைப்பாட்டுடன் செய்த செயற்கை ரோஜாப் பூவாகத்தான் இருக்க வேண்டும்.

இம்மாதிரிச் சிந்தனையில் நான் ஆழ்ந்திருந்த போது அந்த மனிதர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இது இரண்டாம் வகுப்பு வண்டியா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றேன்.

"அதுதானே பார்த்தேன்! என்னிடம் முதல் வகுப்பு டிக்கட் இருக்கிறது. திண்டுக்கல்லில் முதல் வகுப்பு வண்டிக்குப் போய் விடுகிறேன்" என்றார்.

உடனே எனக்கு ஒரு மகிழ்ச்சி உண்டாயிற்று. அதை அவரும் தெரிந்து கொண்டார். "அதற்குள் உமக்கு ஒரு எச்சரிக்கை செய்துவிட விரும்புகிறேன்!"

"என்ன எச்சரிக்கை?" என்று கேட்டேன்.

"அந்த ஒற்றை ரோஜாப் பூக்காரியைப் பற்றித்தான். அவளுடைய ஊர், பெயர் உமக்குத் தெரியுமா?" என்றார்.

"தெரியாது; தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை!" என்றேன்.

ஆனாலும் அந்த மனிதர் விடவில்லை. "அவள் பெயர் மனோகரி; அவளுடைய ஊர் கொழும்பு!" என்றார்.

மனோகரி என்ற பெயரைக் கேட்டதும் என் உள்ளம் பூரித்தது. என்ன அழகான பெயர்! 'மனோகரி', 'மனோகரி' என்று இரண்டு மூன்று தடவை வாய்க்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன்.

"உங்களுக்கும் கொழும்புதான் போலிருக்கிறது. அந்தப் பெண் கொழும்பில் உங்கள் அக்கம் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவளோ?" என்று கேட்டு விட்டேன்.

உடனே அவர் தம்முடைய கதையை ஆரம்பித்தார். பயங்கரமான விஷயங்களைப் படிக்க விருப்ப

மில்லாத வாசகர்கள் இந்தப் பகுதியை இங்கேயே விட்டுவிட்டு, அடுத்த பகுதியிலிருந்து படிக்கத் தொடங்குவது நலம்.

அவர் கூறியதாவது:

'அவளும் நானும் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் அல்ல. கொழும்பு நகரம் மிகப் பெரியது. அதில் நான் ஒரு பக்கத்திலும் அவள் ஒரு பக்கத்திலும் இருக்கிறோம். கண்டியிலிருந்து கொழும்புக்கு வரும் ரயிலில்தான் அவளை முதலில் சந்தித்தேன். அந்தப் பாதையில் வரும் போது இரு பக்கத்திலும் உள்ள அழகிய காட்சிகளைப் பற்றிப் பேசாவிட்டால் நெஞ்சு வெடித்துவிடும்! நீர் இலங்கைக்கு வந்ததில்லை. வந்திருந்தால், கண்டி—கொழும்புப் பாதையில் பிரயாணம் செய்திருந்தால், உமக்கு நான் சொல்வது விளங்கும். அவ்வளவு அழகான இயற்கைக் காட்சிகளை உலகில் வேறு எங்கும் காண முடியாது.

''நாங்கள் ஏறியிருந்த வண்டியில் எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகையால், அவளுடன் நான் பேசவேண்டியதாயிற்று. அவளும் உற்சாகமாகவே பேசிக் கொண்டு வந்தாள். கொழும்பு ஸ்டேஷன் சமீபித்ததும் ஒருவருடைய விலாசத்தை ஒருவர் கேட்டுத் தெரிந்து கொண்டோம். அவளுடைய வாசம் வெள்ளவத்தை என்று தெரிந்து கொண்டேன். மதராஸுக்கு மாம்பலம் எப்படியோ, அப்படி கொழும்புக்கு வெள்ளவத்தை. தன்னுடைய வீட்டுக்கு ஒரு நாள் வரும்படி கேட்டுக் கொண்டாள். 'அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகிறேன்' என்று ஒப்புக் கொண்டேன். அந்தப்படியே மறு ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை சென்று, அவளுடைய வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தேன். நான் போன போது அவள் வீட்டில் இல்லை. வேலைக்காரன் ஒருவன் இருந்தான். 'இப்போது வந்துவிடுவார்கள்; உட்காருங்கள்!' என்றான். வீட்டுத் தாழ்வாரத்தில் போட்டிருந்த சாய்மான நாற்காலி ஒன்றில் அமர்ந்தேன். கடற்காற்று சுகமாக வந்து கொண்டிருந்தது. வீட்டு வாசலில் இருந்த சிறிய தோட்டத்தில் புஷ்பச் செடிகளும் அலங்கார குரோடன்ஸ் செடிகளும் கொழுகொழுவென்று வளர்ந்திருந்தன. அவற்றில் ஒரே ஒரு ரோஜாச் செடியும் இருந்தது. அந்தச் செடியில் ஒற்றை ரோஜா ஒன்று மலர்ந்து, 'நான்தான் புஷ்பங்களின் ராஜா' என்று பறையறைந்து கொண்டிருந்தது.

''நேரமாக ஆக என் மனத்தில் ஒரு பனிதி பதைப்பு ஏற்பட்டது. 'இது யார் வீடோ, என்னவோ? அந்தப் பெண்ணுக்குச் சொந்தக்காரர்கள் எப்படிப் பட்டவர்களோ? அவள் அழைத்தாள் என்று நாம் வந்து விட்டோமே! இது சரியான காரியமா?' என்ற எண்ணங்கள் தோன்றி என் உள்ளத்தைக் குழப்பின.

''சிறிது நேரத்துக்கெல்லாம் மனோகரி வந்தாள். என்னைப் பார்த்ததும் அவள் 'வாருங்கள்! வாருங்கள்! நீங்கள் வருவதாகச் சொன்னதை மறந்து விட்டேன்'' என்றாள். பிறகு, அவளுடன் வந்தவருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தாள். பிறகு என்னை உள்ளே அழைத்துப் போய், விருந்தினரை வரவேற்பதற்குரிய விசாலமான முன்னறையில் உட்கார வைத்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவளும் வந்து எதிரில் உட்கார்ந்து கொண்டாள். வேலைக்காரன் டீ கொண்டு வந்து கொடுத்தான். நான் டீ சாப்பிட்டுக் கொண்டேயிருக்கையில் என் பின்னால் வந்து யாரோ நிற்பதை உணர்ந்தேன். உடனே என் மண்டையில் 'படீர்' என்று ஒரு அடி விழுந்தது. அவ்வளவுதான்; செத்து விழுந்து விட்டேன்.... ஆமாம், ஐயா, ஆமாம்! செத்துத்தான் விழுந்தேன். உமக்கு நம்பிக்கைப்படாதுதான். கதையைப் பூராவும் கேட்டுவிடும். செத்து விழுந்த என் பேரில் ஒரு கம்பளத்தைப் போட்டு மூடினார்கள். நான் செத்துப் போய் விட்டேன் என்று எனக்கு நன்றாகத் தெரிந்தது. ஆனால், என் உயிர் மட்டும் அங்கேயே சுற்றி வந்து கொண்டிருந்தது. என் உடம்பை இவர்கள் என்னதான் செய்யப் போகிறார்கள் என்று அறிந்து

கொள்ள விரும்பினேன். அதனால் தான் அங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தேன். அன்று நள்ளிரவில் இந்தப் பெண்ணும் அவளோடு வந்த ஆடவனும் என் உடலைத் தூக்கிக் கொண்டு போனார்கள். தோட்டத்தில் ஒரு பெரிய குழி வெட்டப்பட்டிருந்தது. அதில் என் உடம்பைப் போட்டுப் புதைத்தார்கள். எல்லாம் முடிந்ததும் மனோகரி ஒரு பெருமூச்சு விட்டு 'ஐயோ! பாவம்!' என்றாள். அவள் கண்களில் கண்ணீர்த் துளிகளும் வந்தன. எனக்கு என்னவோ பரமதிருப்தி ஆகிவிட்டது. பிறகு, அவர்கள் கொஞ்ச தூரத்தில் பூச்சட்டியில் இருந்த ஒரு ரோஜாச் செடியைப் பெயர்த்து எடுத்து, என்னைப் புதைத்த இடத்தின் மேல் அதை நட்டு விட்டார்கள். மனோகரி ஒரு சிறிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினாள். அந்தத் தண்ணீரோடு அவளுடைய கண்ணீர்த் துளிகளும் கலந்ததாக எனக்குத் தோன்றியது.



''என் உயிருக்கு இன்னமும் அவ்விடத்தை விட்டுப் போக மனமில்லை. அந்தக் குழியையும் அதன் மேலிருந்த செடியையும் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்த ரோஜாச் செடியில் ஒரு மொட்டு விட்டது. அந்த மொட்டுக்குள் போய் என் உயிர் புகுந்து கொண்டது. மொட்டு மலர்ந்து பூவாயிற்று. நானும் அதிலேயே காத்திருந்தேன். மனோகரி அந்த ரோஜாவைப் பறித்துத் தன் கூந்தலில் சூடிக் கொள்வாள் என்ற ஆசையோடு காத்திருந்தேன். அம்மம்மா! அப்படிக் காத்திருக்கும் போது ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாக இருந்தது. கடைசியில், அவள் வந்து, தன் தங்கக் கரத்தினால் அந்த ரோஜாவைப் பறித்துத் தன் தலையிலே சூடிக் கொண்டாள். அப்புறந்தான் என் ஆத்மா சாந்தி அடைந்தது.

''தம்பி! உன்னைப் பார்த்தால் நல்ல அறிவாளியாகத் தோன்றுகிறது. ஆகையால், நீயே ஒரு வேளை ஊகித்துக் கொண்டிருப்பாய். அவர்கள் வீட்டுத் தாழ்வாரத்தில், சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு சிறிது நேரம் தூங்கி விட்டேன். அப்போது நான் கண்ட கனவையே இத்தனை நேரம் சொன்னேன். மனோகரி திரும்பி வந்த பிறகு அப்படியெல்லாம் என்னை ஒன்றும் செய்து விடவில்லை. மரியாதையாகப் பேசித் திருப்பி அனுப்பினாள். அதன் பிறகு அடிக்கடி நாங்கள் சந்திப்பதுண்டு. இருந்தபோதிலும், அவளுடைய கூந்தலில் ஒற்றை ரோஜாப் பூவைக் கண்டால் மாத்திரம் எனக்கு ஒரு திகில் உண்டாகி விடுகிறது. அன்று கண்ட கனவு நினைவுக்கு வந்து விடுகிறது...''

அம்மனிதர் பாதிக் கதை சொல்லிக் கொண்டு வந்த போது, அவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்தவராயிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டேன். 'அவனுடன் இவ்வண்டியில் தனியாக மாட்டிக் கொண்டோமே' என்று கொஞ்சம் கவலையாகவும் இருந்தது. அவ்வளவும் கனவு என்று அவர் கதையை முடித்த போது என்னையறியாமலே பெருமூச்சு விட்டேன். இவர் ஒரு விளையாட்டு மனிதர் என்று முடிவு செய்து கொண்டேன். ஆனாலும், இதையெல்லாம் [illegible]மாக ஏன் கற்பனை செய்ய வேண்டும்? அவருடைய மூளையில் ஏதேனும் கொஞ்சம் கோளாறு இருந்தாலும் இருக்கலாம்.

ரயில் வண்டி தண்டவாளம் மாறும் கடபுட சத்தம் கேட்கலாயிற்று. திண்டுக்கல் ஸ்டேஷனுக்குள் வண்டி போய்க் கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டேன்.

''இதோ பாரும்! நான் திண்டுக்கல்லில் இறங்கி, முதல் வகுப்பு வண்டி ஏதாவது காலியிருக்கிறதா என்று பார்த்து வருகிறேன். அது வரையில் இந்தப் பெட்டி இங்கேயே இருக்கட்டும். ஒரு விஷயம்; அந்தப் பெண் உம்முடன் பேச மறுபடியும் வருவாள் என்று தோன்றுகிறது. அவள் கூந்தலில் உள்ள ஒற்றை ரோஜாப்பூவை எப்படியாவது நீர் எடுத்து வைத்திருந்து என்னிடம்

ஒப்பித்தால், ஆயிரம் ரூபாய் உமக்குக் கொடுக்கிறேன். இல்லை ஆயிரம் ரொம்பக் குறைவு, இரண்டாயிரம் ரூபாய் தருகிறேன். சரிதானே! ஆனால், அவளுக்கு மட்டும் தெரியக் கூடாது. தெரிந்தால் உயிருக்கே ஆபத்து! தெரிந்ததா?''

இந்த மனிதருக்கு மூளைக் கோளாறுதான்! சந்தேகமில்லை. பெட்டியையும் எடுத்துக் கொண்டு தொலைந்து போகக் கூடாதோ! மறுபடியும் இவர் இங்கேயே வருவதாயிருந்தால் நாம் இறங்கி வேறு வண்டி பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்தேன்.

மூன்றாம் அத்தியாயம்

திண்டுக்கல் ஸ்டேஷனில் வண்டி நின்றது. ''சிறுமலை வாழைப்பழம்'', ''சாம்பார் சாதம்'', ''பிரியாணி'' என்னும் கூக்குரல்கள் காதைத் துளைத்தன. அந்த மனிதர் இறங்கி அவசரமாகப் போனார். பெட்டியை வைத்துத் தொலைத்து விட்டுத்தான் போனார். அந்தப் பெண் ஒரு வேளை இந்த வண்டியில் ஏறிக் கொள்ளலாம் என்று வந்தால், இந்தப் பெட்டி ஒரு தடையாயிருக்கலாமல்லவா? அவர் கூறியவற்றில் ஏதேனும் கொஞ்சமாவது உண்மையிருக்குமா? அந்தப் பெண்ணின் ஊர் கொழும்பு, அவள் பெயர் மனோகரி என்பவையேனும் நிஜமாயிருக்குமா?

அதிக நேரம் நான் யோசிக்க முடியவில்லை. அவளே வந்து விட்டாள். என் வண்டியில் அருகில் வந்து நின்றாள். நானும் மரியாதைக்காகக் கீழே இறங்கினேன்.

''இங்கே ரயில் எத்தனை நேரம் நிற்கும்?'' என்று கேட்டாள்.

''ஐந்து நிமிஷந்தான் நிற்கும்.''

''அப்படியானால் என் சாமான்களை இங்கே ஏற்ற முடியாது. திருச்சினாப்பள்ளியில்தான் மாற்ற வேண்டும். இந்த வண்டியில் வந்து ஒருவர் ஏறினாரே, அவர் இறங்கிப் போவதைப் பார்த்தேன். அவர் என்னைப் பற்றி ஏதாவது சொன்னாரா?'' என்றாள்.

''ஆம். ஏதேதோ சொன்னார். அதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை.''

''அவர் என்னதான் சொன்னார்?'' என்று கேட்டாள்.

''உங்கள் ஊர் கொழும்பு என்றும், பெயர் மனோகரி என்றும் சொன்னார். உங்களை அவருக்குப் பழக்கம் உண்டு என்றும் கூறினார்.''

''அவ்வளவு வரை அவர் கூறியவை உண்மைதான். வேறு ஒன்றும் சொல்லவில்லையா?''

''இன்னும் ஏதோ உளறினார்! அதையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்?''

''ஆம், என்னைப் பற்றி ஏதாவது அவதூறு சொல்லியிருப்பார். அதையெல்லாம் நீங்கள் நம்பாததற்காக ரொம்ப வந்தனம்! நான் பயந்தது உண்மை ஆயிற்று. அங்கே 'புஷ் கோட்' மனிதர்கள் மூன்று பேர்; இங்கே ஸூட் போட்ட ஒருவர். ஆக, நாலு பேர் என்னைத் தொடர்ந்து இந்த வண்டியில் வருகிறார்கள். நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!''

''எதற்காக உங்களைத் தொடர்ந்து வருகிறார்கள்! எதற்காக நீங்கள் பயப்பட வேண்டும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! உண்மையில் அபாயம் ஏற்படுவதாயிருந்தால், சும்மா இருந்து என்ன பயன்? ரயில்வே போலீஸாரிடம் சொல்லலாமே!'' என்றேன்.

''வேண்டாம், வேண்டாம்! போலீசாரிடம் மட்டும் சொல்ல வேண்டாம். அதைக்காட்டிலும்...''

இவ்விதம் கூறிய மனோகரி, பேச்சை நடுவில் நிறுத்தி, என் வண்டிக்குள் எட்டிப் பார்த்தாள். அங்கே வைத்திருந்த பெட்டி அவளுடைய கவனத்தை அடியோடு கவர்ந்து விட்டதாகத் தெரிந்தது. அதை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றாள். அப்போது அந்த அழகிய பால் வடியும் முகத்தில் பீதியின் சாயை பரவியதைப் பார்த்தேன். எனக்கு அவளிடம் பரிதாபமும் உண்டாயிற்று; ஒருவித வியப்பும் உண்டாயிற்று.

''ஆமாம்; அது அந்த மனிதருடைய பெட்டிதான். பிற்பாடு வந்து எடுத்

துக் கொள்வதாகச் சொல்லி விட்டுப் போனார்!'' என்றேன்.

''திருச்சியில் உங்கள் வண்டியில் வந்து ஏறிக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன். அதுவும் முடியாது போலிருக்கிறது!'' என்றாள்.

''ஏன் முடியாது? அந்த ஆசாமி மறுபடி வந்தால் அவரை விரட்டியடித்து விடுகிறேன். அல்லது இரண்டு பேரும் வேறொரு வண்டியைப் பார்த்து ஏறுவோம். மூன்றாம் வகுப்பில் வேண்டுமானாலும் ஏறிக் கொண்டு போவோம். நீங்கள் கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம். நான் இருக்கும் போது உங்களுக்கு ஒருவித அபாயமும் வருவதற்கு விட மாட்டேன்!'' என்றேன்.

''சரி, எல்லாவற்றுக்கும் திருச்சி ஜங்ஷனில் யோசித்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு, மனோகரி திரும்பி அவள் வண்டிக்குப் போனாள்.

அவள் தலையிலிருந்த ஒற்றை ரோஜாப்பூ மீண்டும் என் கண்ணில் பட்டது. இந்தத் தடவை அது ஏதோ மர்மம் நிறைந்த பொருளாக எனக்குத் தோன்றியது.

பெட்டியை எடுத்துக் கொண்டு போக அந்த மனிதர் வரவேயில்லை. ரயில் புறப்பட்டு விட்டது. கொந்தளிக்கும் கடலில் அலைகள் எழுந்து விழுவது போல், என் மனத்தில் எண்ண அலைகள் வந்து மோதின.

மனோகரியும் அவளைத் தொடர்ந்து அதே ரயிலில் வருவதாக அவள் கூறிய நான்கு பேரும் அந்த அலைகளில் புரண்டு புரண்டு எழுந்தார்கள்.

ஏதோ ஒரு மர்மச் சுழலில் நான் சிக்கிக் கொண்டு விட்டதாகத் தோன்றியது. அது என்னவாயிருக்குமென்று எவ்வளவோ யோசித்தும் தலைகால் ஒன்றும் புரியவில்லை.

அந்தப் பெண் ஏதோ ஒரு சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாள் என்பது மட்டும் நிச்சயம். எது எப்படியிருந்தாலும், அவளுக்கு ஆதரவாக நின்று, உதவி செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். அந்த முயற்சியில் உயிரையே கொடுக்க வேண்டியிருந்தாலும் சரிதான். பாபநாசம் அருவியில் விழுந்து உயிர் துறந்து அநாதைப் பிணமாவதைக் காட்டிலும் இப்படிப்பட்ட ஒரு நிராதரவான பெண்ணுக்கு உதவி செய்து உயிரை விடுவது மேல் அல்லவா? ஒருவேளை, அதற்காகவே தான் கடவுள் பாபநாசத்தில் நம்முடைய புத்தியை மாற்றி அருளினாரோ என்னவோ? ஆனால்; மனோகரி கொஞ்சம் நம்மிடம் அதிக நம்பிக்கை வைத்து எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னால், நம்முடைய அறிவைப் பூரணமாகப் பயன்படுத்தி அவளுக்கு உதவி செய்யப் பார்க்கலாம். எல்லாவற்றுக்கும் திருச்சினாப்பள்ளி வரட்டும்; பார்ப்போம். கேட்டால் சொல்லாமலா போகிறாள்? இப்படியெல்லாம் நான் எண்ணிக் கொண்டிருக்கையில் அந்த ஒற்றை ரோஜாப்பூ மட்டும் என் மனக் கண் முன்னால் இடைவிடாமல் தோன்றிக் கொண்டேயிருந்தது.

திருச்சி ஜங்ஷன் வந்தது. ஐந்தாம் நம்பர் பிளாட்பாரத்தில் இன்ன வண்டி வந்திருக்கிறது என்றும், ஆறாம் நம்பர் பிளாட்பாரத்திலிருந்து இன்ன வண்டி புறப்படப் போகிறது என்றும் ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருந்தது.

வண்டியிலிருந்து இறங்கி நின்றேன். என் கண்கள் இரண்டு பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்தன. பெட்டிக்கு உடைய மனிதர் வருகிறாரோ என்று ஒரு பக்கம் பார்த்தன; ஒற்றை ரோஜாப்பூவை இன்னொரு பக்கம் ஆவலுடன் எதிர்பார்த்தன.

முதல் வகுப்புப் பெண்கள் வண்டியிலிருந்து அவளுடைய முகம் எட்டிப் பார்த்தது.

பிறகு, அவள் வண்டியிலிருந்து இறங்கினாள். பிளாட்பாரத்தில் அதிக வெளிச்சமில்லாதிருந்த ஓர் இடத்துக்குப் போய் நின்றாள். அப்படியும் இப்படியும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சற்று நேரம் நான் பொறுத்துப் பார்த்து விட்டு இறங்கிப் போனேன்.

அவளருகில் சென்று, "என்ன தீர்மானம் செய்தீர்கள்?" என்று கேட்டேன்.

"இன்னமும் யோசித்துக் கொண்டுதானிருக்கிறேன். ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை."

"எனக்கு என்னவோ, நீங்கள் அநாவசியமாகப் பயப்படுகிறீர்கள் என்று தோன்றுகிறது."

"அப்படித்தான் எனக்கும் ஒரு சமயம் தோன்றுகிறது. இன்னொரு சமயம்,...... அந்த மூன்று புஷ்கோட் ஆசாமிகளை நினைத்தால் பயமாயிருக்கிறது."

"எதுவாயிருந்தாலும்இருக்கட்டும். உங்களுக்கு அப்படிப் பயமாயிருந்தால் என் வண்டியில் வந்து ஏறிக் கொள்ளுங்கள்......"

"வந்துவிடலாம். ஆனால், அந்தப் பெட்டிக்காரர் வந்து, பெட்டியை எடுத்துக் கொண்டு போய் விட்டாரா?"

"இன்னும் இல்லை."

"அதனால்தான் யோசிக்கிறேன். வண்டி புறப்படும் சமயத்தில் அவர் திடீரென்று வந்து ஏறிக் கொண்டால்?"

"ஏறிக்கொண்டால் என்ன, நான் இருக்கும் போது?"

"அதைவிடப் பெண்கள் வண்டியில் நான் தனியாக இருப்பதே நல்லது."

"உங்களுக்கு என்னதான் தோன்றுகிறது? எதற்காக இவர்கள் எல்லோரும் உங்களைத் தொடர்கிறார்கள்? ஒரு காரணமும் ஊகிக்க முடியவில்லையா?"

"மதுரை ஜங்ஷனில் அவர்களுடைய பேச்சில் இரண்டொரு வார்த்தை என் காதில் விழுந்தது."

"ஆ! அதிலிருந்து ஏதாவது ஊகிக்க முடிந்ததா?"

"ஏதோ விலை உயர்ந்த வைரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவர்கள் சுங்க இலாகா அதிகாரிகள் என்று தோன்றுகிறது. நான் ஏதோ வைரங்களை ஒளித்து எடுத்துப் போகிறேன் என்று அவர்கள் சந்தேகிக்கிறார்கள் போலிருக்கிறது" என்றாள் மனோகரி.

இதைக் கேட்டு நான் சிரித்து விட்டேன்.

மனோகரியும் சிரித்தாள்: அவள் சிரித்த அந்தச் சிரிப்பு என் காதில் கிண்கிணி நாதமாக ஒலித்தது.

"என்ன முட்டாள்தனம்! நீங்கள் தான் அது விஷயத்தில் மிகப் பரிசுத்தமாக இருக்கிறீர்களே! ஒரு குன்றிமணி எடை தங்கமோ, ஒரு சிறிய மூக்குத்திருகு வைரமோ உங்கள் உடம்பில் இல்லையே! அதனாலேயே உங்களை எனக்கு.ரொம்பப் பிடித்திருக்கிறது. மதராஸில் சில பணக்கார வீட்டு ஸ்திரீகள் உடம்பெல்லாம் வைரமாக வருகிறார்கள். அந்த அவலட்சணத்தைப் பார்த்துக் கூசிய என் கண்களுக்கு உங்களைப் பார்த்தால்..... சேச்சே! என்னமோ சொல்லிக் கொண்டு போகிறேனே!"

"எல்லாம் சரியாகத்தான் சொல்கிறீர்கள். பாக்கியையும் சொல்லி முடியுங்கள்! ஆ! அதோ!..."

திரும்பிப் பார்த்தேன். என் வண்டிக்குப் பக்கத்தில் இருவர் வந்து நின்றார்கள். ஒருவர், பெட்டியை வைத்து விட்டுப் போனவர். இன்னொருவர், புது மனிதர்.

பெட்டிக்குரியவர் இன்னொருவரிடம் ஏதோ சொன்னார்.

இருவரும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். பிறகு அங்கிருந்து அகன்றார்கள்.

பெட்டி, வண்டிக்குள்ளேயே இருந்தது.

ஆர்வத்துடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மனோகரி, "நான்கு பேருடன் இன்னொருவரும் சேர்ந்தாயிற்று!" என்றாள்.

அவளுடைய அழகிய முகத்தில் பீதி ததும்ப அங்குமிங்கும் அவள் மிரண்டு பார்த்த போது நான்கு புறமும் வேடுவர்களால் சூழப்பட்ட மானின் மருண்ட பார்வை என் நினைவுக்கு வந்தது. சுற்றிலும் வலைகள் நெருங்கி வருவதை உணர்ந்த மீன், துவண்டு துடிப்பதைப் போல் அவளுடைய நயனங்கள் துடித்துக் கொண்டிருந்தன.

எனக்கும் சிறிது கலக்கமாகத் தானிருந்தது. ஆயினும் வெளியில்

காட்டிக் கொள்ளவில்லை. அவளுக்குத் தைரியம் கூறவும், கூடுமான உதவி செய்யவும் விரும்பினேன்.

''ரயில்வே ஜங்ஷனில் எத்தனையோ பேர் வருவார்கள், போவார்கள். எல்லாரும் உங்களைத் தேடுவதாக ஏன் எண்ணிக் கொள்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''காரணமில்லாமல் பயப்படும்படியான அவ்வளவு பெரிய அசடு என்று என்னைப் பார்த்தால் தோன்றுகிறதாக்கும்.''

''மன்னிக்க வேண்டும். அப்படி நான் சொல்லவில்லை. அவர்கள் — தங்களைத் தேடி வருகிறவர்கள் — மூடர்களாக இருக்கலாம் அல்லவா?''



''அவர்கள் எல்லாரையுமே மூடர்கள் என்று நான் ஒத்துக் கொள்ள முடியாது.''

''ஏன்?''

''அவர்களில் ஒருவர் என் தகப்பனார்!''

''என்ன! என்ன!''

''ஆமாம்; கடைசியாக வந்தவர் என் தகப்பனார். அவர் பெயர் எழுதிய பெட்டிதான் தங்கள் வண்டியில் இருந்தது. திண்டுக்கல்லில் இறங்கியவர் என் தகப்பனாரின் உதவிக்கு வந்தவராயிருக்க வேண்டும்.''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போலிருக்கிறது. தங்கள் தகப்பனார் தங்களை எதற்காகத் தேடி வர வேண்டும்?'' என்றேன்.

''மகளிடம் தகப்பனாருக்கு இருக்கக்கூடிய வாஞ்சையினால்தான். **'நான் காதலனுடன் இந்தியாவுக்குப் போகிறேன். கவலைப்பட வேண்டாம்'** என்று அப்பாவுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு வந்தேன். உடனே புறப்பட்டு ஓடி வந்திருக்கிறார். இவ்வளவு சீக்கிரம் வந்து விடுவார் என்று நான் நினைக்கவில்லை. ஆகாய விமானம் ஒன்று இருக்கிறது என்பதையே மறந்து விட்டேன்.''

ஆகாயம் இடிந்து என் தலையில் விழுந்தது போலிருந்தது. ஆனாலும், அதில் என்ன வியப்பு? இப்படிப்பட்ட அழகிக்கு ஒரு காதலன் இருப்பதில் வியப்பில்லைதான்! கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்பட்டு ஆவதென்ன?

''அப்படியானால், நான் விடை பெற்றுக் கொள்ளட்டுமா?'' என்றேன். அப்பொழுது என்னை அறியாமலே என் குரலில் ஒருவித ஏக்கம் தொனித்தது.

''நீங்கள் உதவி செய்வீர்கள் என்று நினைத்தேன். என்னைக் கைவிட்டு விடப் போகிறீர்களா?''

''நான் என்ன உதவி செய்ய முடியும், உங்கள் தந்தையே வந்திருக்கும் போது?''

''ஓர் உதவி உங்களால் செய்ய முடியும்.''

''முடிந்தால் அவசியம் செய்கிறேன்.''

''சிறிது நேரத்துக்கு என் காதலனாக நடிக்க வேண்டும். அதாவது, என் தந்தையின் முன்னிலையில்...''

இதெல்லாம் நிஜமாக நடக்கிறதா, அல்லது ஆங்கில நாவல் ஆசிரியர் வோட்ஹவுஸின் கதை படித்துக் கொண்டிருக்கிறேனா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

''முன் பின் காதலனாக நடித்து எனக்குப் பழக்கம் இல்லை. முயன்று பார்க்கிறேன். ஆனால், இதெல்லாம் எதற்காக? உங்கள் அசல் காதலன் எங்கே?''

''அசல் காதலனுமில்லை; அப்பீல் காதலனுமில்லை. அப்பாவுக்காக அப்படி வெறுமனே எழுதி வைத்து விட்டு வந்தேன். இப்போது அதை உண்மைப்படுத்த வேண்டியிருக்கிறது. தங்களைத்தான் நம்பியிருக்கிறேன்.''

''நம்பினவர்களை நான் கைவிடுவதில்லை. என்னாலியன்ற உதவி செய்கிறேன். பரிசு என்ன தருவீர்கள்?''

''பரிசா? என்னிடம் என்ன இருக்கிறது கொடுப்பதற்கு?'' என்றாள் மனோகரி.

''தங்கள் தலையில் சூடியிருக்கும் ரோஜாப் பூவைக் கொடுத்தால் போதும். இன்றைய சம்பவத்தின் ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்வேன்...''

மனோகரியின் பால் வடியும் முகத்தில் அப்போது ஓர் இலேசான நிழலின் சாயை படர்ந்ததைக் கவனித்தேன். அப்போது என் உள்ள நிறைவிலும் ஒரு கள்ளம் புகுந்தது. இவள் உண்மையாக அபாயத்தில் சிக்கிக் கொண்டிருப்பவள்தானா? அல்லது எல்லாம் வெறும் நடிப்பா? ஒரு பெரிய கபட நாடகத்தின் அங்கமா...?

மனோகரி அந்த ஒற்றை ரோஜாவைத் தன் கூந்தலிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, ''இது வெறும்வர்ணக்காகிதம்.தங்களுடைய உதவிக்கு இதையா பரிசாகக் கொடுப்பது? தயவு செய்து மன்னியுங்கள். நான் மட்டும் பத்திரமாகச் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தால் புத்தம் புதிய மணமுள்ள ரோஜா மலர்களை வாங்கி மாலையாகத் தொடுத்துத் தருகிறேன்!'' என்றாள்.

எனக்கு மெய்சிலிர்த்தது. அவள் தன் தங்கக் கையினால் என் கழுத்தில் ரோஜா மாலை சூட்டுவதாகவே கற்பனை செய்து கொண்டு மகிழ்ந்தேன். உண்மையாகச் செய்யட்டும், செய்யாமற் போகட்டும், இவ்வளவு ரஸனையுடன் பேசும் பெண்ணுக்காக என்னதான் செய்யக்கூடாது?

''தங்களைப் பத்திரமாகச் சென்னை கொண்டு போய்ச் சேர்ப்பது என் பொறுப்பு. சிறிதும் அதைப் பற்றிக் கவலை வேண்டாம்'' என்றேன்.

இப்படி நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஏழெட்டுப் பேர் எங்களை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அப்படி வருபவர்களில் இரண்டு பேர் போலீஸ்காரர்கள் என்பதும் தெரிந்தது.

எனக்குத் திக், திக் என்று அடித்துக் கொண்டது. ஆயினும் பக்கத்தில் மனோகரியிருப்பதை முன்னிட்டு மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டேன்.

அவர்கள் எங்கள் அருகில் வருவதைப் பார்த்ததும் மனோகரி அவர்களை எதிர் கொள்பவர்களைப் போல் முன்நோக்கி நடந்தாள். நானும் சென்றேன். இருவரும் தூண் ஓரத்து நிழலிலிருந்து நல்ல வெளிச்சத்துக்கு வந்துவிட்டோம்.

கைப்பெட்டிக்காரர் என்னைப் போலீஸ்காரர்களுக்குச் சுட்டிக் காட்டினார். ''இந்த ஆள்தான்; இவனைக் கைது செய்யுங்கள்!'' என்றார்.

''எதற்காக?'' என்று மனோகரி, பெண் சிங்கத்தைப் போல் கம்பீரமாக முன்னால் நின்று கேட்டாள்.

''உன்னை உன் தகப்பனாருக்குத் தெரியாமல் ஏமாற்றி அழைத்து வந்ததற்காகத்தான்!''

''அது பொய்! நான் என் இஷ்டத்தினால் வந்தேன்!''

இப்படி அவர்கள் வாதமிட்டுக் கொண்டிருக்கும் போதே போலீஸார் இருவரும் என் இருபக்கத்திலும் வந்து நின்று, ''மரியாதையாக வந்துவிடு!'' என்றார்கள்.

நானும் மரியாதையாக அவர்களுடன் நடந்தேன். போலீஸ் விவகாரங்களில் சிக்கி வழக்கமில்லாதவனாதலால், ஒரு பக்கம் திகிலாயிருந்தது. மற்றொரு பக்கத்தில், மனோகரிக்காக இதைச் செய்கிறோம் என்ற திருப்தியும் ஏற்பட்டது. சீக்கிரத்தில் இந்தக் குழப்பம் நீங்கிவிடும், நம்மைப் போலீஸார் ஒன்றும் செய்துவிட முடியாது என்று திடப்படுத்திக் கொண்டு நடந்தேன்.

நான்காம் அத்தியாயம்

ரயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னைக் கொண்டு போனார்கள். என்னுடைய பெட்டி, படுக்கையும் கொண்டு வரப்பட்டன. 'புஷ்கோட்' மனிதர்கள் மூவரும் வந்து பெட்டி, படுக்கைகளைச் சோதனை போட்டார்கள். என்னையும் சோதித்தார்கள். துணிகளைக் கிழித்து மட்டும் பார்க்கவில்லை. மற்றபடி சாங்கோபாங்கமாகத் தேடினார்கள். என்னிடமிருந்து ஒன்றும் அகப்படவில்லை. அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிந்தது.

அன்றிரவு நான் தூங்கவில்லையென்று சொல்லவும் வேண்டுமா? என் எண்ணமெல்லாம் மனோகரி

யின் பேரிலேயே இருந்தது. அந்த ஒற்றை ரோஜாப் பூவின் ஞாபகமும் அடிக்கடி வந்தது.

காலை மூன்று மணி சுமாருக்கு என்னை விடுதலை செய்து விட்டார்கள். பெரிய போலீஸ் அதிகாரி ஒருவர் வந்து, "தவறுதல் நடந்து விட்டது. உம்மைப் பிடித்து வைப்பதற்கு எவ்வித முகாந்தரமும் இல்லை. அந்த முட்டாள்கள் உம்மைப் பிடித்து அடைத்தார்கள். அதற்காக ரொம்பவும் வருந்துகிறேன்!" என்றார்.

"அதனால் பாதகமில்லை; இது எனக்கு ஒரு நல்ல அனுபவம்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன். காலை நாலு மணிக்குத் திருச்சியிலிருந்து புறப்படும் பாஸஞ்சர் வண்டியில் ஏறிச் செல்லத் தீர்மானித்தேன். மறுபடியும் அதே பிளாட்பாரத்துக்குப் போனேன். மனோகரியும் நானும் நின்று பேசிக் கொண்டிருந்த அதே தூண் மறைவுக்கு மறுபடியும் சென்றேன். நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தூண் ஓரத்தில் இருந்த அந்த ஒற்றை ரோஜாப்பூ — காகிதப்பூ — கிடந்தது. மனோகரி அதைக் கையில் எடுத்து எனக்குக் காட்டி விட்டு மறுபடியும் தலையில் வைத்துக் கொண்டாள் அல்லவா? சரியாக வைத்துக் கொள்ளவில்லை. ஆகையால், அது கீழே விழுந்து விட்டது. விழுந்ததை அவள் கவனிக்கவில்லை; ஆனால் நான் கவனித்தேன். இதற்குள் போலீஸார் நெருங்கிவிட்டபடியால் நாங்கள் இருவரும் முன்னோக்கிச் சென்றுவிட்டோம்......

அந்த ஒற்றை ரோஜாப் பூவை இப்போது ஆவலுடன் எடுத்து என் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ரயிலும் வந்தது. அதில் ஏறிக் கொண்டேன். மனோகரி முதலியவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆவல் இல்லாமற் போகவில்லை. அது எப்படியும் பின்னால் தெரியும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டேன்.

ரயில் புறப்படும் சமயத்தில் அந்தக் கைப்பெட்டிக்காரர் பிளாட்பாரத்திற்கு ஓடிவந்து, அங்குமிங்கும் அலைந்தார். நான் அவரைக் கையைத் தட்டி அழைத்தேன். அவர் என்னைப் பார்த்ததும் ஆர்வத்துடன் அருகில் வந்தார். "பெரிய பிசகு நேர்ந்துவிட்டது. மன்னிக்க வேணும். சென்னையில் தங்கள் விலாசம் என்ன? அங்கே வந்து எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்!" என்றார். என் விலாசத்தை அவருக்குத் தெரிவித்துவிட்டு, "எனக்குக் கொஞ்சங்கூட வருத்தம் இல்லையென்று மனோகரியிடம் சொல்லுங்கள்!" என்றேன்.

சென்னைக்குத் திரும்பி வந்து இரண்டு நாட்கள் வரையில் என் அறையை விட்டு வெளிக் கிளம்பவில்லை. பத்திரிகைகளை மட்டும் ஆவலுடன் பார்த்தேன். ஒரு பிரபல சுதேச சமஸ்தான மகாராஜாவின் பிரசித்தி பெற்ற — விலை உயர்ந்த — வைரம் காணாமற் போய்விட்டதென்றும், இலங்கைப் போலீஸார், சுங்க அதிகாரிகள் முதலியோர் அதைத் தேடி வருகிறார்கள் என்றும் பத்திரிகையின் ஒரு மூலையில் சிறிய செய்தி ஒன்றும் காணப்பட்டது.

அன்றிரவு என் அறைக்கதவை இறுகத் தாளிட்டுக் கொண்டு அந்த ஒற்றை ரோஜாப்பூவை எடுத்தேன். அதைக் கோத்திருந்த நூலைப் பிரித்து விட்டுக் கையினால் தட்டினேன். மேஜை மீது டணார் என்று விழுந்தது!

'கண்ணைப்பறித்தது' என்று ஆசிரியர்கள் எழுதுவார்களே, என் வாழ்க்கையில் அன்றைக்குத்தான் அது உண்மையாயிற்று. அந்த மாதிரி விடி வெள்ளி; அவ்வளவு பெரிய வைரத்தை, கண்ணைப் பறிக்கும்படி ஒளிவீசிய வைரத்தை, நான் அன்று வரை பார்த்ததேயில்லை. அந்த வைரத்திலிருந்து வெளியான வித விதமான வர்ண கிரணங்களைத் தான் என்னவென்று வர்ணிப்பது! பாபநாசத்தில் அருவி விழும் இடத்தில் நான் பார்த்த வானவில்லின் அதிசய வர்ண ஜாலங்களெல்லாம் இந்த அற்புத வைரத்தின் முன்னால் மண்டி போட்டு ஒளிப் பிச்சைக் கேட்க வேண்டியதுதான் என்று தோன்றியது.

வெகு நேரம் அந்த வைரத்தைத்

திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மறுபடியும் முன்போல் அந்தக் காகித ரோஜாப் பூவுக்குள்ளேயே வைத்துத் தைத்தேன். பெட்டிக்குள் பத்திரப்படுத்தினேன்.

மறுநாள் நான் எதிர்பார்த்திருந்த மனிதர் வந்தார். தவறு நேர்ந்ததன் காரணங்களை விளக்கினார். அந்தப் பெண், "நான் என் காதலனோடு இந்தியாவுக்குப் போகிறேன்; என்னைத்தேடவேண்டாம்" என்று தகப்பனாருக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு அவருக்குத் தெரியாமல் வந்து விட்டாளாம். தகப்பனார் வைர வியாபாரியாம். "ஒரே ஒரு வைரம் மட்டும் எடுத்துப் போகிறேன். அது எனக்கு உங்கள் ஸ்ரீதனமாக இருக்கட்டும்" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாளாம். அந்த வைரம் ஒரு மகாராஜாவுக்குச் சொந்தமான விலையுயர்ந்த வைரம் என்றும், ஒன்றரை லட்சம் பெறுமானது என்றும் கூறினார். தகப்பனார் பெண்ணையும் வைரத்தையும் தேடிக் கொண்டு புறப்பட்டார். அவள் ரயிலில் பிரயாணம் செய்கிறாள் என்று அறிந்து, முன்னதாக விமானத்தில் திருச்சிக்கு வந்துவிட்டாராம். இந்த மனிதரையும் தன்னுடைய ஓத்தாசைக்கு அழைத்து வந்தாராம். இதெல்லாம் சுங்க அதிகாரிகள் காதில் அரைகுறையாக விழுந்ததில், அவர்கள், வைரத்தைச் சுங்க வரி கொடுக்காமல் கொண்டு போவதைத் தடுக்க முயற்சி எடுத்தார்களாம். மனோகரி தன் கடிதத்தில் குறிப்பிட்ட காதலன் நானாகத்தான் இருக்க வேண்டும் என்று தவறாக எண்ணி, என்னைக் கைது செய்ய இவர் ஏற்பாடு பண்ணினாராம்.

என்னுடைய வாயைப் பிடுங்கி, அந்த ஒற்றை ரோஜாப்பூவில் வைரம் இருக்கிற விஷயம் எனக்குத் தெரியுமா என்று அறிந்து கொள்வதற்காக அம்மாதிரி பயங்கரக் கதையை அவர் கற்பனை செய்து கூறினாராம்.

என்னைவிட அவள் பெரிய கற்பனைக்காரி. ஒரு காதலனையே சிருஷ்டி செய்து விட்டாள் என்பது எனக்கு என்னமாய்த் தெரியும்? ஆனால், சில சமயம் கற்பனையைக் காட்டிலும் உண்மையில் நடப்பது அதிசயமாயிருக்கிறது. "உன்னை நினைத்து நினைத்து அந்தப் பெண் உருகிக் கொண்டிருக்கிறாள். ஸர்தார் பவன் ஹோட்டலில் தகப்பனும் மகளும் தங்கியிருக்கிறார்கள். அவர்களைப் போய்ப் பார்!" என்றார் அந்த மனிதர்.

ஐந்தாம் அத்தியாயம்

மறுநாள் ஸர்தார் பவன் ஹோட்டலுக்குப் போனேன். மனோகரி மட்டும் அறையில் தனியாக இருந்தாள். அவள் தகப்பனார் என்னைப் பார்ப்பதற்காகத்தான் போயிருப்பதாகச் சொன்னாள். அன்றிரவு தன்னால் எனக்கு நேர்ந்த கஷ்டத்தைப் பற்றி வருத்தம் தெரிவித்தாள்.

"இது என்ன பிரமாதம்? சில நிமிஷ நேரம் உன் காதலனாக நடிக்கும் பேறு பெற்றேன் அல்லவா? அதற்கும் சில மணி நேரச் சிறை வாசத்துக்கும் சரியாகப் போயிற்று" என்றேன்.

பிறகு அந்த ஒற்றை ரோஜாப் பூவை எடுத்து அவளிடம் கொடுத்தேன். அவள் அளவிலா அதிசயத்துடன் அதை வாங்கிக் கொண்டாள். தன் அழகிய கர மலரில் அந்தச் செயற்கை மலரை வைத்துக் கொண்டு அதை உற்று உற்றுப் பார்த்தாள்.

"உள்ளே வைரம் பத்திரமாயிருக்கிறது!" என்றேன்.

"வைரம் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று மேலும் வியப்புடன் கேட்டாள்.

"பிரித்துப் பார்த்தேன்; தெரிந்தது!" என்றேன்.

"எப்படி இது உங்கள் கைக்கு வந்தது?"

"தூண் நிழலில் நின்று 'இந்தக் காகிதப் பூ எதற்கு? நிஜ ரோஜாப் பூ மாலை வாங்கித் தருகிறேன்' என்றாயே, அந்த இடத்திலேயே கிடந்தது. இதைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னது நியாயந்தான்! ஒன்றரை லட்ச ரூபாய் வைரத்தை யார்தான் ஓர் அந்நியனுக்குக் கொடுப்பார்கள்?"

''விலை மதிப்பை முன்னிட்டுக் கொடுக்க மறுக்கவில்லை. அவ்வளவு பெறுமானமுள்ளது என்பது அப்போது எனக்குத் தெரியவே தெரியாது. இதற்கு ஓர் உபயோகம் இருந்தது; அதனால்தான் கொடுக்க மாட்டேன் என்றேன். அந்த உபயோகம் இனி இல்லாமற் போய்விட்டது!''

''எனக்கு விளங்கவில்லை. உபயோகமில்லாமல் ஏன் போக வேண்டும்? இதில் உள்ள வைரம் உன் கழுத்தில் அழகாகத்தான் ஜொலிக்கும். ஆனால், சுங்க வரி மட்டும் கட்டிவிட வேண்டும்!'' என்றேன்.

அவள் என்னை ஏறிட்டுப் பார்த்து, ''எதற்காகச் சுங்க வரி கொடுக்க வேண்டும்? எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். பெண்கள் அணிந்திருக்கும் நகைக்குச் சுங்க வரி கிடையாது!'' என்றாள்.

''அப்படியானால், ஏன் அதை ஒளித்துக் கொண்டு வரவேண்டும்?'' என்று முணுமுணுத்தேன்.

''என் தந்தை வைர வியாபாரி. என்னை வைர நகை போட்டுக் கொள்ளும்படி எத்தனையோ நிர்ப்பந்தித்திருக்கிறார். நான் மறுத்து விட்டேன். இந்த ஒற்றை வைரத்தை மட்டும் எடுத்து வந்தேன். இவ்வளவு பெறுமானமுள்ளது என்று தெரியாது. நூறு ரூபாய் வைரமே என் காரியத்துக்குப் போதுமாயிருந்திருக்கும்!''

''அது என்ன அபூர்வமான காரியம்? இன்னும் அந்த மர்மம் எனக்கு விளங்கவில்லையே!'' என்று கேட்டேன்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மனோகரி என்னுடைய நிலைமையைப் பற்றி விசாரிக்கலானாள்.

''நான் கதாநாயகனாகத் தகுதியுள்ளவன் அல்ல; பி. ஏ. பரீட்சையில் 'கோட்' அடித்தவன்!'' என்றேன்.

''நிஜமாகவா? நீங்கள் பி.ஏ. பரீட்சை எழுதித் தோல்வி அடைந்தீர்களா?'' என்று கேட்டாள்.

''ஒரு தடவை மட்டுமல்ல; மூன்று தடவை பரீட்சைக்குப் போய்த் தோல்வியடைந்தவன்.''

''மூன்று தடவையா தோல்வியடைந்தீர்கள்?'' என்று கேட்டு விட்டு, மனோகரி விழுந்து விழுந்து சிரித்தாள். அதில் என்ன அவளுக்கு அவ்வளவு சந்தோஷம் என்பது எனக்கு விளங்கவில்லை.

''சரி! சரி! நீ சிரித்து முடி! இன்னொரு நாள் வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

ஆறாம் அத்தியாயம்

என் ஜாகைக்குத் திரும்பிய போது அங்கே மனோகரியின் தகப்பனார் காத்திருந்தார். அவரும் ஓர் அத்தியாயம் நான் அடைந்த கஷ்டத்துக்காக வருத்தம் தெரிவித்தார்.

பேச்சின் நடுவில் "என் மகளுக்கு நீங்கள் மிகவும் ஒத்தாசையாயிருந்தீர்களாம். ம வாங்கிக் கொடுத்தீர்களாம். அவள் எனக்கு ஒரே பெண். அதனால்தான், ஒன்றரை லட்ச ரூபாய் வைரம் போனாலும் போகிறது, பெண் உயிரோடு பிழைத்தாளே, அதுவே போதும் என்று திருப்தி அடைந்திருக்கிறேன்!'' என்றார்.

''அவள் உயிருக்கு என்ன ஆபத்து வந்தது?'' என்று கவலையுடன் கேட்டேன்.

''தெரியாதா? இதோ பாருங்கள்!'' என்று சொல்லி ஒரு கடிதத்தை நீட்டினார். அது மனோகரி அவளுடைய தோழி ஒருத்திக்கு எழுதிய கடிதம். மனோகரி இலங்கையில் ஏதோ ஒரு பரீட்சைக்குப் போனதாகவும், அதில் அவள் தேறவில்லையென்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

''பரீட்சை தேறாத அவமானத்தை என்னால் சகிக்க முடியாது. உயிரை விட்டுவிடத் துணிந்து விட்டேன். இங்கேயே இருந்து அப்பாவுக்குத் துயரம் கொடுக்க விரும்பவில்லை. வைரத்தைப் பொடி பண்ணிச் சாப்பிட்டால் உடனே உயிர் போய்விடும் என்று சொல்கிறார்கள் அல்லவா? அப்பாவின் வைரம் ஒன்றை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்குப் போய் உயிரை விடுவது என்று தீர்மானித்து விட்டேன். என் உண்மையான சிநேகிதி நீ ஒருத்திதான். ஆகையால், உனக்கு மட்டும்......''

கடிதத்தை இதற்கு மேல் நான் படிக்கவில்லை.

"ஐயையோ! என்ன காரியம் செய்து விட்டேன்!" என்று பதறி எழுந்தேன்.

"என்ன? என்ன?" என்று மனோகரியின் தந்தையும் பதறிக் கொண்டு எழுந்தார்.

"வைரம் என்னிடந்தான் இருந்தது. இப்போதுதான் தங்கள் மகளிடம் போய்க் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தேன்" என்றேன்.

"அட பாவி! என்ன காரியம் செய்தாய்! என் குடியைக் கெடுத்து விட்டாயே!" என்றார் அந்தப் பெரியவர்.

அவர் கொண்டு வந்திருந்த 'டாக்ஸி'யில் ஏறிக் கொண்டு இருவரும் பறந்து சென்றோம்.

என் நெஞ்சு அந்தச் சில நிமிஷங்களில் எப்படித் துடித்தது என்று சொல்லவே முடியாது.

அந்த அழகிய பொன் மேனியைப் பிணமாகத்தான் காணப் போகிறோம் என்று எண்ணிப் பதை பதைத்தேன்.

ஆனால் என்ன சந்தோஷமான ஏமாற்றம்! ஓட்டலில் அவர்கள் தங்கியிருந்த அறைக்குச் சமீபமாகச் சென்ற போது, அறைக்குள்ளிருந்து குதூகலமாகப் பாடும் குரல் கேட்டது.

உள்ளே நாங்கள் இருவரும் சென்று விழுந்தோம். எங்களுக்குத்தான் உயிர் போய்விடும் போலிருந்தது.

"வைரம் எங்கே?" என்று இருவரும் ஒரே காலத்தில் கேட்டோம்.

மேஜையை அவள் சுட்டிக் காட்டினாள். அங்கே அது வானத்தில் ஒளிரும் நட்சத்திரத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

"எதற்காக இந்தப் பரபரப்பு?" என்று கேட்டாள்.

"எங்கே இந்தக் கடிதத்தில் எழுதியிருப்பது போல் செய்து விடுவாயோ என்றுதான்."

"அதற்கு இனி அவசியம் இல்லையென்றுதான் இவரிடம் சொன்னேனே! இந்த மனிதர் மூன்று தடவை 'பி. ஏ. பரீட்சையில் தோல்வியடைந்துவிட்டு இவ்வளவு உற்சாகமாக இருக்கிறார்; ஒரு தடவை தோற்றதற்காக நான் ஏன் உயிரைவிட வேண்டும்?" என்றாள் மனோகரி.

ஆரம்ப அதிர்ச்சி, மகிழ்ச்சி எல்லாம் ஒருவாறு அடங்கிய பிறகு, மனோகரியின் தகப்பனார், "இந்தப் பெண்ணைச் சமாளிக்க இனி என்னால் முடியாது. நீர்தான் இவள் உயிரைக் காப்பாற்றினீர். இனியும் இவளை நிர்வகிக்கும் பொறுப்பை நீர்தான் ஏற்க வேண்டும்" என்றார்.

"கடவுளே! என்னால் எப்படி அது முடியும்? இந்நாளில் பசிக்கு அரிசி கிடைப்பதே துர்லபமாயிருக்கிறது. நானோ ஏழை. இவளுடைய பசிக்கு வைரம் எப்படி வாங்கிக் கொடுப்பேன்! அதுவும் ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் வைரமா? ஒன்றரை லட்சம் ரூபாய் வைரங்களுக்கு நான் எங்கே போவேன்?" என்றேன்.

மனோகரியின் தகப்பனார் இப்போதுதான் முதல் தடவையாகக் கடகடவென்று சிரித்தார். "நான் கூட வைர வியாபாரத்தை விட்டுவிடப் போகிறேன். இந்தப் பெண் இருக்குமிடத்திலேயே வைரம் வைத்திருக்கப் படாது!" என்றார்.

எங்கள் திருமணத்தின் போது மனோகரி தன் வாக்குறுதியை நிறைவேற்றினாள். மணமுள்ள புது ரோஜா மலர்களால் கட்டிய மாலையை என் கழுத்தில் சூட்டினாள்.

மனோகரி வைர நகை மட்டும் அணிவதில்லை. எங்கள் வீட்டிலேயே வைரம் வைத்துக் கொள்வதில்லை. எதற்காக அத்தகைய விஷப்பரீட்சை பார்க்க வேண்டும்?

என்ன கேட்கிறீர்கள்? "பி., ஏ. பரீட்சை என்ன ஆயிற்று?" என்று கேட்கிறீர்களா?—எங்கள் திருமணம் நடந்தவுடனே முதற்காரியமாகப் பாபநாசத்துக்கு மறுபடியும் போனோம். அங்குள்ள இனிய நதி வெள்ளத்தில் இருவரும் கைகோத்துக் கொண்டு இறங்கி, எல்லாப் பரீட்சைகளுக்கும் சேர்த்து முழுக்குப் போட்டோம்.

நதிக்கரை மரங்களில் வாழ்ந்த பட்சிகள் எங்கள் செயலை ஆமோதித்து மங்கள கீதம் பாடின.

REGISTERED No. M. 4335
Registered as a Newspaper in Sri Lanka